Registered as a Newspaper in Srilanka



தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 92 • 14.05.2017

இலங்கையின்
முதல் தர தமிழ்
வார இதழில் உங்கள்
வணிக விளம்பரங்கள்
நியாயமான விலைகளில்
இடம்பெற வேண்டுமா



உடனே அழையுங்கள்
076 82 555 67 / 60

தீபம் எப்பொழும் உங்களுக்கான
தன்னிகரில்லா சேவையை வழங்க முன்னிற்கும்



## கடக்க முடியாத முள்ளிவாய்க்கால் துயரம்

## எங்கட டாக்குத்தர்மாருக்கு பொன்சேகாதான் சரி

## வெள்ளவத்தையாரின் நல்ல குணங்கள்

# விக்னேஸ்வரனை வழிநடத்தும் இருவர்!



27 வருடங்களாக தாலாட்டும் தாய்மடிகள் தந்து சாதனை படைத்து வரும்
ஐஸ்வர்யா மகளிர் மருத்துவமனை
எமது யாழ் நகரில்
நடாத்தும்
குழந்தையின்மை சிகிச்சை
உலகத்தில் முதல் முறையாக IVF சிகிச்சை இலவசம்
மாபெரும் இலவச மருத்துவ ஆலோசனை முகாம்

எதிர்வரும் மே மாதம் 19,20
மற்றும் 21 ஆம் திகதிகளில்
வேம்படி மகளீர் கல்லூரியில்.

முற்பதிவுகளுக்கும்
மேலதிக விபரங்களுக்கும்
அழைக்கலாம் - 0777370337



# VIKKI LEARNERS

எமது சேவை உங்களுக்கானது
உங்களுக்கு அருகாமையில் நாம்
எமது புதிய கிளை தற்போது சுன்னாகம் நகரில்.

வடபுலத்தில் தரமான சாரதி ஆக இன்றே
எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்.




அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சி பாடசாலை



தலைமை காரியாலயம்
136/1 பரமேஸ்வரா சந்தி
பலாலி ரோடு

No125/1 kks road
Chunnagam.
Phone:
0778308390,
021722 3201



# KATHIR

Cvil engineering & contrator's

யாழ் மண்ணின் அதி உன்னத
மற்றும் முதல் தர கட்டடக்கலை நிபுணர்.
நியாயமான கட்டணத்தில் அதி துரித மற்றும் அதி உயர் தர சேவை

- ✓ House plan and modern houses
- ✓ Building consultancy
- ✓ Bridge construction
- ✓ Architectural designs
- ✓ Interior design
- ✓ Road construction
- ✓ Cladding works
- ✓ Renovation works and building repairnig
- ✓ Molding works
- ✓ Landscaping
- ✓ Aluminium works
- ✓ Bank B.O.Q
- ✓ Building estimate

அனுபவம் வாய்ந்த கட்டிட தொழில் துறை வல்லுனர்களால் நவீன
தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய மிக விரைவான சேவை

K.k.s Road uduvil East chunnakam
Mobile : 077 2417 103
Phone :021 561 8129
Email : kathircons12@gmail.com



10 ஆண்டுகள் யாழ் நகரில் உள்நாட்டு, வெளிநாட்டு மக்களின் மனங்கவர்ந்த தங்குமிட வசதிகள் கொண்ட ஹோட்டல்

Bright Inn

# BRIGHT INN

பிறையிட் இன் ஹோட்டல்




அங்கீகாரம் பெற்ற அனுபவம் வாய்ந்த சமையல் கலை நிபுணர்கள், தரமான சேவையாளர்கள் பணியாற்றும் நிறுவனம் பிறையிட் இன் ஹோட்டல்....

| உணவுகள் | தங்குமிடம் | திருமண மண்டபம் |
|---|---|---|
| தரமான சுவையான உணவுகள் | Luxury Room | திருமணம், பதிவுத் திருமணம் |
| பாரம்பரிய யாழ்ப்பாண உணவுகள் | Semi - Luxury Room | பிறந்தநாள் நிகழ்வுகள் |
| கடல் உணவுகள் | A/C Room | பூப்புனித நீராட்டு விழா |
| வெளிநாட்டவர்கள் விரும்பும் உணவுகள் | Non A/C Room | கலந்துரையாடல்கள் |
| ஓடர் முறை உணவுகளை பெற்றுக்கொள்ளலாம் | | |

இவை அனைத்திற்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம் BRIGHT INN

யாழ் பிறையிட் இன் ஹோட்டலின் தலைமை ஸ்தாபனம் - இல. 214/2, மெசன்சர் ஸ்ரீட், கொழும்பு என்ற முகவரியில் இயங்குகின்றது. மேற்கூறப்பட்ட அனைத்து வசதிகளும் கொழும்பில் செய்து தரப்படும். விமான நிலையத்திலிருந்து பிரயாண ஒழுங்குகள் மற்றும் இலங்கை முழுவதுமான சுற்றுலா செல்வதற்கு சொகுசு வாகன ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்...

தொடர்புகளுக்கு
0112 329664, 0117 242233, 0117 242244
E-mail: brighten@eureka.lk | brightenrest@yahoo.com



No. 51, Sivan Road, Thirunelveli, Jaffna.
Tel : 021 222 1889 | E-mail : brightinnjaffna@yahoo.com
HOT LINE 0777 983933





NO 1 TOPAZ

# TOPAZ

No. 01 Shop in Jaffna



திருமண பட்டுச்சேலை காஞ்சி புரம் பட்டுச் சேலை
சுடிதார் மற்றியல்கள் மற்றும் ரெடிமேட் ஆடைகள்



ஆண்களிற்கான சூட் மற்றும் ரெடிமேட் ஆடைகள்



மிஸ் சுட்டி மிஸ் பியூட்டியாக வலம் வரும் சுட்டிச்
சிறுமியர்களிற்கான பஷன் ஆடைகள்

We are specialist in in
Wedding suits, Wedding Sarees , Party Sarees,
Wedding Frocks, Party Frocks and all kinds of Items

| TOPZ | TOPAZ TAILORING | TOPZ MALL |
|---|---|---|
| No 72, Grand Bazaar<br>Jaffna<br>Tel 021 222 4743<br>Fax 021 222 7645 | No 80/24, Kasthuriyar Road<br>Jaffna<br>Tel 021 222 4643<br>Email : topazagn@gmail.com | No 195, Power House Road<br>Jaffna<br>Tel 021 222 4933<br>021 221 9933 |

## ஈ.பி.டி.பியை பாதுகாக்கிறாரா விக்கி?

யாழ்ப்பாண மாநகரசபையில் கடந்த காலத்தில் நடந்த முறைகேடுகள் தொடர்பாக விசாரணை நடத்த அமைக்கப்பட்ட விசாரணைக்குழுக்களின் அறிக்கையில், முன்னாள் மேயர் யோகேஸ்வரி பற்குணநாதன் உள்ளிட்ட மாநகரசபை நிர்வாகத்தின் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. அத்துடன், இது தொடர்பில் சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

யாழ் மாநகரசபை ஈ.பி.டி.பியின் நிர்வாகத்தில் இயங்கிய காலப்பகுதியில் கட்டிடம் அமைத்தது மற்றும் இதர செயற்பாடுகளில் ஊழல் புரிந்ததாக கிளம்பிய குற்றச்சாட்டை ஆராய ஓய்வுபெற்ற நீதிபதிகள் தலைமையில் இரண்டு குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தன. அரியரட்ணம், வசந்தசேன தலைமையில் அமைக்கப்பட்ட விசாரணைக் குழுக்கள் தமது விசாரணையை நிறைவு செய்து, இறுதி அறிக்கையை வடக்கு முதலமைச்சரிடம் கையளித்துள்ளனர்.

இந்த அறிக்கையில் முன்னாள் மாநகரசபை மேயர் யோகேஸ்வரி பற்குணநாதன் மீது ஊழல் மோசடிக்கான சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இந்த சமயத்தில் நடந்த பல்வேறு ஊழல் மோசடிகள் தொடர்பான வெளிப்படுத்தல்களையும் அந்த அறிக்கை செய்துள்ளது.

இந்த அறிக்கை வடக்கு முதல்வர் க.வி.விக்னேஸ்வரனிடம் கையளிக்கப்பட்டு பல வாரங்களாகிவிட்டபோதும், அறிக்கையை முதல்வர் பகிரங்கப்படுத்தவில்லை. மாகாணசபைக்கும் அறிக்கை விபரங்களை வெளிப்படுத்தவில்லை. தகவல் அறியும் சட்டமூலத்தின் மூலமே அறிக்கைவிபரங்களை பெறமுடிந்துள்ளது.

முதல்வரின் இந்த நடவடிக்கை, பொது மக்களின் பணத்தை துஷ்பிரயோகம் செய்து ஊழல்மோசடியில் ஈடுபடுபவர்களை பாதுகாக்கிறதோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. அகிம்சை வழியில் போராடுவதென முடிவு செய்துள்ளனர்.

## கடற்படையின் முடிவால் மீனவர்கள் அதிருப்தி!

தலைமன்னார் கடற்பரப்பின் இராமர் அணை பகுதிகளில் (திடைப்பகுதிகள்) தங்கியிருந்து மீன்பிடிக்ககூடாதென கடற்படையினர் தடைவிதித்துள்ளதால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக தலைமன்னார் மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். காலம்காலமாக திடை பகுதிகளில் தங்கியிருந்து மீன்பிடிப்பதை வழக்கமாக கொண்டிருக்கும் நிலையில், நியாயமான காரணங்கள் இல்லாமல் கடற்படை அதற்கு தடைவிதித்துள்ளதாக மீனவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

தலைமன்னாரில் இருந்து 3 தொடக்கம் 16 கிலோமீற்றர் தொலைவு வரை அமைந்துள்ள திடைகளில் தங்கியிருந்து சில விசேட மீன்பிடி முறைகள் மூலம் இந்தப்பகுதி மீனவர்கள் தொழில் செய்து வருகின்றனர். இந்த மீன்பிடி முறையின் மூலம் மீன்களின் இனப் பெருக்கம் பாதுகாக்கப்படுகிறது. அத்துடன் பாச்சுவலை வீசி விட்டு இராமர் அணையிலிருந்து அதனை கண்காணிப்பது வழக்கம். கண்காணிப்பு இல்லாவிட்டால் அதை திருடப்பட்டுவிடும். திடைப்பகுதியில் தங்கியிருந்து மீன்பிடியில் ஈடுபடக்கூடாதென கடற்படை திடீர் தடை விதித்ததால் பெருமளவு மீனவர்கள் வாழ்வாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். கடற்படையின் முடிவை எதிர்த்து தலைமன்னார் மேற்கு புனித லோரன்சியார் தேவாலயத்தில் ஒன்றுகூடிய மீனவர்கள், தம்து பிரச்சனைக்கு நியாயம் கிடைக்கும்வரை அகிம்சை வழியில் போராடுவதென முடிவு செய்துள்ளனர்.

## ரணிலுக்கு இதெல்லாம் சிம்பிளாம்!

பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்ட அரச வைத்தியர்களை கடுமையாக சாடியுள்ளார் அமைச்சர் தலதா அத்துகோறள. சேவைப்புறக்கணிப்பின் மூலம் அப்பாவி மக்களை சிரமத்திற்குள்ளாக்கி, அரசியலுக்கு வரும் தேவையே மருத்துவர்களிடம் இருப்பதாக குற்றம்சாட்டியுள்ளார்.

இரத்தினபுரியில் நடந்த நிகழ்வொன்றின்போது உரையாற்றும்போதே இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் "சைட்டம் மருத்துவ கல்லூரி மாணவர்கள் ஏழு வருடங்களாக மருத்துவம் படித்து வருகிறார்கள். அன்று வாயைத் திறக்கவே அஞ்சியவர்கள் இன்று சைட்டத்தை மூடுமாறு பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுகிறார்கள். நோயாளிகளை பலிகொடுத்து அரசியல் நோக்கங்களை நிறைவேற்றுவதே இவர்களின் தேவை. பணிப்புறக்கணிப்பில் பின்னாலுள்ள



உண்மையான கதை இதுதான். இந்த பணிப்புறக்கணிப்பின் மத்தியில் ஜனாதிபதியும் பிரதமரும் பொறுமையாக செயற்படுகிறார்கள். இந்த பொறுமையை முதுகெலும்பு இல்லாத நிலையாக சிலர் கருதுகிறார்கள். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த காலத்தில் இதைவிட பெரிய பிரச்சனைகளை எதிர்கொண்டு வெற்றிகரமாக பதிலளித்துள்ளார்" என்றார்.

## சிக்காமல் சிக்சர் அடித்த மகிந்த அணி!

கடந்த மேதின நிகழ்வு கட்சிகளின் பலப்பரீட்சையாக அமைந்திருந்தது. வழக்கமாக மேதினம் என்றால் கட்சிகளிற்கிடையில்தான் போட்டியிருக்கும். ஆனால் கடந்த இரண்டு வருடங்களை போலவே, இந்தமுறையும் சுதந்திரக் கட்சியின் மைத்திரி மகிந்த அணிகளிற்குள்தான் மேதின பலப்பரீட்சை நடந்தது. இதில் அள்ளுகொள்ளையாக ஆட்களை ஏற்றிவந்த மகிந்த அணி, பார்ப்பவர்களை வாய்பிளக்க வைத்தனர். இதற்காக எப்படியெல்லாம் மாஸ்டர் பிளான் போட்டனர் என்ற தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றனர்.

காலி முகத்திடல் சற்று பெரிய இடம். இதில் மக்களை நிறைப்பதற்கு பெருமளவு பணம் செலவாகும். கடந்த ஆட்சிக்காலத்தில் கொள்ளையடித்த பணத்தை கொண்டுதான் ஆட்களை ஏற்றியிறக்கினார்கள் என எதிரணி கிண்டல் செய்யும் என்பதை மகிந்த அணி முதலே கணக்கு போட்டிருந்தனர். எதிரணியின் குற்றச்சாட்டை சமாளித்து, ஆட்களை மைதானத்தில் நிரப்பும் பொறுப்பு பஷில் ராஜபக்ச மற்றும் மகிந்தானந்த அளுத்கமகே ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டது.



நிதி குற்றச்சாட்டை சமாளிக்க மகிந்த அணி ஒரு உத்தியை கையாண்டது. பொக்கற்றிலிருந்து எடுக்கவில்லை, உண்டியலிலிருந்து எடுத்தது என ஊரை நம்பவைக்க, மாத்தறையில் நிதி சேகரிப்பை செய்தனர். அது மிகச்சிறிய சம்பிரதாய நிகழ்வு. எதிரணியின் கிண்டல், ஏதாவது சட்ட நடவடிக்கை பாய்ந்தால் அதிலிருந்து தப்பிக்கவே இந்த ஏற்பாடு.

எவ்வளவு நிதி சேகரிக்கப்பட்டதென்பதற்கு இனி மகிந்த அணி காட்டுவதுதான் கணக்கு. யாரும் கேள்வி கேட்க முடியாது. இத்தனை வருட ஆட்சி அனுபவத்தில் பெற்ற தில்லாலங்கடி வேலை அனுபவம் கைகொடுத்துள்ளது!

## புதிய பாதுகாப்பு செயலர்?

பாதுகாப்பு செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி அந்தப்பதவியில் இருந்து விலகலாம் என்ற செய்திகள் அண்மை நாட்களாக வெளியாகிக் கொண்டிருக்கிறது. கருணாசேன ஹெட்டியாராச்சி ஜேர்மனிக்கான தூதராக நியமிக்கப்படலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதிய பாதுகாப்பு செயலர் பதவிக்கு கிங்ஸ்லி பெர்னான்டோ, ஹேமஸ்ரீ பெர்னான்டோ, கபில வைத்தியரத்ன ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. ஹேமஸ்ரீ பெர்னான்டோ தற்போது மத்திய வங்கியின் தலைவராக செயற்படுகிறார். இதனால் அவருக்கு பணி மிகுதியாக இருக்கும் என்பதின் அடிப்படையில் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக அவர் நியமிக்கப்படவுள்ளார்.


கபிலவைத்தியரத்ன தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்தில் பணியாற்றி வருகிறார். சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரான இவர், அடுத்த மாதம் சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து ஓய்வுபெற தீர்மானித்துள்ளார். இவரே புதிய பாதுகாப்பு செயலராக நியமிக்கப்படவுள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சரா எம்.பியை பிடித்த சனி!

யாழிலுள்ள இந்திய துணைதூதரக செயற்பாடு பற்றி அதிருப்தி தெரிவித்ததுடன், துணைதூதர் நடராஜன் ஊடக சுதந்திரத்தில் தலையிடுகிறார் என இரண்டு வாரங்களின் முன்னர் தமிழ் தேசிய கூட்டமைப்பின் எம்.பி சரவணபவன் பரபரப்பு குற்றம்சாட்டியிருந்தார். இந்த விவகாரம் ஊடகங்களில் பரபரப்பாக பேசப்பட்ட நிலையில், தமிழ்தேசிய கூட்டமைப்பிற்குள் பலத்த அதிருப்தியை தோற்றுவித்துள்ளது. குறிப்பாக, அவர் சார்ந்த தமிழரசுக்கட்சியின் தலைமை இந்த பேச்சை ரசிக்கவில்லை. கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் தொலைபேசி மூலம் அவரை கண்டித்ததாக கூறப்படுகிறது. அண்மையில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற குழு கூட்டத்திலும் இந்த விடயம் ஆராயப்பட்டுள்ளது.

இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி இலங்கை வருவதற்கு கிட்டவாக இந்திய தூதரகம் தொடர்பான எதிர்மறை விமர்சனம் ஏன் வைக்கப்பட்டது? இதன் பின்னணி என்ன? என்ற கோணத்தில் அங்கு ஆராயப்பட்டது. எனினும், இந்தக்கூட்டத்தில் கலந்து கொள்வதை சரவணபவன் தவிர்த்து விட்டார்.

"அவருடன் இது பற்றி பேச வேண்டும். இந்தியாவுடனான உறவை நெருக்கடிக்குள்ளாக்கும் விதமாக நாங்கள் செயற்பட முடியாது. பாராளுமன்றகுழு கூட்டத்திலும் இது பற்றி பேசினோம். அவர் வராதபடியால் அவரது விளக்கத்தை பெற முடியவில்லை. அவருக்காகத் தான் காத்திருக்கிறோம்" என தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.



## மோடி சொன்ன செய்தி!

இந்தியப்பிரதமர் நரேந்திர மோடியுடன் தமிழ்தேசிய கூட்டமைப்பினர் கடந்த வெள்ளிக்கிழமை பேச்சு நடத்தியிருந்தனர். இலங்கைக்கு சூறாவளி விஜயம் செய்த இந்தியப்பிரதமர் அரசதரப்புடன் அரசுமுறை சந்திப்புக்களில் ஈடுபடாமல், தமிழ்தேசிய கூட்டமைப்புடன் மாத்திரம் உத்தியோகபூர்வ சந்திப்பில் ஈடுபட்டதை முக்கியமான விவகாரமாக கூட்டமைப்பினர் கருதுகிறார்கள்.

தமிழர் பிரச்சனையில் இந்தியா அக்கறையாக இருக்கிறது, அரசு கொடுத்த வாக்குறுதிகளை செயற்படுத்தாமல் விட முடியாதென்பதை அரசுக்கு சூசகமாக சொல்வதைப் போல இந்த சந்திப்பு அமைந்தது என கூட்டமைப்பு முக்கியஸ்தர் ஒருவர் குறிப்பிட்டார்.

அரசியலமைப்பு உருவாக்க பணிகளின் தற்போதைய நிலவரம் பற்றி கூட்டமைப்பினர் இதன்போது விளக்கமளித்தனர். அத்துடன் இந்திய முதலீடுகளை வடக்கிலும் ஏற்படுத்தி, வேலைவாய்ப்பை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றும் கூட்டமைப்பினர் முன்வைத்த வேண்டுகோளையும் பிரதமர் மோடி ஏற்றுக்கொண்டுள்ளார்.

# அமைதியாக இருக்ககோரும் அஸ்மின்!

வடமாகாணசபை உறுப்பினர் அயூப் அஸ்மினை அந்தப்பதவியில் இருந்து விலக்கி, வடக்கை சேர்ந்த பிறிதொருவரை வடமாகாணசபை உறுப்பினராக நியமிக்கப் போவதாக நல்லாட்சிக்கான தேசிய முன்னணி எடுத்த தீர்மானம் தொடர்ந்தும் இழுபறியில் இருக்கிறது. அஸ்மினை பதவியிலிருந்து விலகுமாறு நல்லாட்சிக்கான தேசிய முன்னணி விடுத்த பகிரங்க அறிவித்தலை தொடர்ந்து எழுந்த சர்ச்சை இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

ஏற்கனவே அறிக்கைமூலம் விடயத்தை வெளிப்படுத்திய நல்லாட்சிக்கான தேசின முன்னணியினர், கடந்த சில தினங்களின் முன் மின்னஞ்சல் மூலம் பதவி விலகுமாறு அஸ்மினை கோரியுள்ளனர். கட்சித் தலைமையின் மின்னஞ்சல் தமக்கு கிடைத்ததாக அஸ்மின் சமூக வலைத்தளதில் குறிப்பிட்டுள்ளார். இந்த விவகாரம் தொடர்பாக ஆராய்ந்து வருவதாக அஸ்மின் குறிப்பிட்டுள்ளார். விரைவில் தனது முடிவை அறிவிக்கவுள்ளதாகவும், அதுவரை தேவையற்ற சர்ச்சைகளை தவிர்த்து கொள்ளுமாறும் அஸ்மின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் தமிழரசுக்கட்சியின் நிலைப்பாடு என்ன என அதன் முக்கியஸ்தர்களை வினவியபோது, "அஸ்மின் விவகாரம் அவரது கட்சி சார்ந்தது. அஸ்மினை விலக்க வேண்டாம் என பல வடக்கு முஸ்லீம் அமைப்புக்கள் எமக்கு கடிதம் எழுதியுள்ளன. எனினும், இதில் நாம் தலையிடவில்லை. நல்லாட்சிக்கான தேசிய முன்னணிதான் இறுதி முடிவெடுக்க வேண்டும்" என்றனர்.

# சாய்ந்தமருது அம்பாறைக்கு போகிறதா?

சாய்ந்தமருதில் உள்ள அரச அலுவலகங்கள் அம்பாறைக்கு மாற்றப்படுவதன் பின்னணியில் பெரும் பான்மையின அமைச்சர் ஒருவர் இருப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. தேர்தல் சமயத்தில் முஸ்லீம்களிற்கு நெருக்கமானவராக காட்டிக் கொண்ட இந்த அமைச்சரே, மாயக்கல்லி மலை புத்தர் சிலையின் பின்னணியில் இருக்கிறார் என்றும் கூறப்படுகிறது.

சாய்ந்தமருதில் நீண்டகாலமாக இயங்கிவந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிராந்திய காரியாலயம் அம்பாறைக்கு மாற்றப்பட்டது. பிரதியமைச்சர் எம்.எச்.எம்.ஹரீசின் தொகுதியில் சாய்ந்தமருது அமைந்திருக்கிறது. திருமண உறவின் மூலம் சாய்ந்தமருது அவரது சொந்த ஊராகவும் காணப்படுகிறது. தொலைக்காட்சி விவாதமொன்றின்போது, இந்த அலுவலக இடமாற்றத்தை தடுக்க பிரதியமைச்சர் ஹரீஸ் தவறியதாக அமைச்சர் ஹக்கீம் குற்றம்சாட்டியிருந்தார்.

இந்தநிலையில் சாய்ந்தமருதில் இயங்கி வந்த தேசிய இளைஞர்சேவைகள் மன்றத்தின் காரியாலயமொன்றும் சிலவாரங்களிற்கு முன்னர் அம்பாறைக்கு இடமாற்றப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லீம் காங்கிரஸின் மூன்று எம்.பிக்கள் இருந்தும் அலுவலக இடமாற்றத்தை தடுக்க முடியவில்லை என்ற பரவலான விமர்சனம் கிளம்பியுள்ளது.

# நிந்தவூரில் யாருக்கும் பலனில்லாத ஒன்று!

நிந்தவூர் கடற்கரையில் அமைக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையம் இயங்காமல் இருப்பதால் யாருக்கும் பலனில்லாமல் உள்ளது. மீனவர்களின் நலன்கருதி 2005 இல் நிந்தவூர் 3ம் பிரிவில் இந்த எரிபொருள் நிலையம் அமைக்கப்பட்டது. எனினும், இதுவரை இயங்கவில்லை.

இங்குள்ள மீனவர்கள் தமது படகுகளிற்கு எரிபொருள் நிரப்புவதற்கு வேறு இடங்களிற்குத்தான் சென்று கொண்டிருக்கிறார்கள். இந்த எரிபொருள் நிலையம் இயங்கத் தொடங்கினால் எரிபொருள், நேர விரயத்தை தவிர்த்து கொள்ளலாமென்பதே இந்த பிரதேச மீனவர்களின் வேண்டுகோள்.



# முஸ்லீம்கள் ஒன்றாக இருக்க வேண்டும்!

வடக்குகிழக்குஇணைப்பில் முஸ்லீம்கள் உறுதியான ஒரே நிலைப்பாட்டில் இருக்க வேண்டுமென கூறியிருக்கிறார் புனர்வாழ்வு மற்றும் இராஜாங்க அமைச்சர் எம்.எச்.எம்.ஹிஸ்புல்லாஹ். "வடக்கு கிழக்கு இணைவு இயற்கையானது. முஸ்லீம்களிற்கு தென்கிழக்கு அலகை வழங்குவதை தமிழர்கள் உறுதியாக எதிர்க்க வேண்டுமென வடமாகாணசபை உறுப்பினர் அயூப் அஸ்மின் கூறியிருந்தார். இதை நான் எதிர்த்தேன்.

வடக்கு கிழக்கு இனப்பிரச்சனை பற்றி நல்லாட்சிக்கான தேசிய முன்னணி தனது நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டுமென கூறியிருந்தேன். வடக்கு கிழக்கு பிரிந்துள்ள நிலையில் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டுமென அவர்கள் தமது நிலைப்பாட்டை தெரிவித்துள்ளனர். வடக்குகிழக்கு பிரிந்திருக்க வேண்டும் என்ற நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் நிலைப்பாட்டை வரவேற்கிறேன். முஸ்லீம்கள் பிரிந்திருக்காமல் ஒரே அரசியல் நிலைப்பாட்டில் இருக்க வேண்டும்" என கூறியுள்ளார்.

# ஓட்டமாவடி விவகாரம்தான் இப்போது பேச்சு!

ஓட்டமாவடி பெரிய பள்ளிவாயலில் அண்மையில் ஒரு பெண்ணின் ஜனாஸா நல்லடக்கத்தில் நடந்த நிகழ்வொன்று சமூக ஊடகங்களில் அதிகம் பேசப்படுகிறது. கடந்த 7ம் திகதி மாலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பெண்ணொருவரின் ஜனஸா நல்லடக்கம் அன்று நடந்தது. அப்போது கபுறுகுழியில் நின்றவர்களை பார்த்து, "உங்களில் எவராவது நேற்றிரவு மனைவியருடன் உடலுறவில் ஈடுபட்டிருந்தால் உடனே குழியை விட்டு வெளியேறுங்கள்" என மௌலவி கூறியிருக்கிறார். இதையடுத்து, ஒருவர் குழியை விட்டு வெளியேறினார்.

ஜனஸா நல்லடக்கங்களின்போது கிழக்கில்இந்தநடைமுறைஅதிகமாகஇருந்ததில்லை என்பதால், தற்போது பரபரப்பான விவகாரமாக இது மாறியுள்ளது. இஸ்லாமிய மார்க்க நூல்களில் இதுபற்றி குறிப்பிடப்பட்டுள்ளதா, இந்த வழக்கம் நடைமுறையில் இருக்கிறதா என்பது பற்றிய விவாதங்கள் சமூக ஊடகங்களில் சூடு பிடித்துள்ளது.

# காத்தான்குடியில் வேலியிட்டவரிற்கு நடந்த கதி!

காத்தான்குடி பொலிஸ் பிரிவில் தனநபர் ஒருவரால் வேலியிடப்பட்ட காணி நீதிமன்ற உத்தரவின்படி அரசுடமையாக்கப்பட்டுள்ளது. கடந்த 09ம் திகதி மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் இதற்கான உத்தரவை இட்டுள்ளது.

18.5 பேர்ச் அளவுள்ள அரச காணியை தனியார் ஒருவர் வேலியிட்டுதனக்குசொந்தமாக்கியுள்ளார். இந்த சட்டவிரோத நடவடிக்கைக்கு எதிராக காத்தான்குடி பிரதேசசெயலகத்தால் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கு 09ம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, அந்தக்காணியை மீண்டும் அரசுடமையாக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

# கல்முனை இடம்மாறாதாம்!

தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் கல்முனை கிளை காரியாலயம் இடமாற்றப்படாதென அமைச்சர் சஜித் பிரேமதாசா உறுதியளித்துள்ளதாக கூறியிருக்கிறார் அமைச்சர் ரிசாட் பதியுதீன். சஜித்திடம் விடுத்த நேரடியான கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, இந்த உறுதி மொழி வழங்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

கல்முனையிலுள்ள தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் கிளை காரியாலயத்தை இடமாற்றம் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக செய்திகள் வெளியாகியிருந்தது. இதனையடுத்து வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாசவை நேரில் சந்தித்து இது தொடர்பாக பேசியதாக ரிசாட் குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் காரியாலயத்தை இடமாற்றம் செய்வதால் பிரதேசமக்கள் எதிர்கொள்ளப்போகும் அசௌகரியங்கள் தொடர்பான எழுத்துமூல ஆவணங்களையும் கையளித்ததாகவும், இதை ஏற்றுக் கொண்டு, கிளைக்காரியாலயத்தை இடமாற்றம் செய்யப்போவதில்லையென்ற உறுதிமொழியை சஜித் வழங்கியதாகவும் அமைச்சர் ரிசாட் குறிப்பிட்டுள்ளார்.

# கடத்தலில் ராசிக்குழு?

கம்பளை இரண்டரை வயது குழந்தை கடத்தல் விவகாரம் கடந்தவாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. கம்பம் கோரி கம்பளையிலிருந்து கடத்திவரப்பட்ட குழந்தை மட்டக்களப்பு கரயனாறு ஊறுகாமம் கிராமத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. பொலிசாரின் சமயோசித நடவடிக்கையால் குழந்தை பாதுகாப்பாக மீட்கப்பட்டதுடன், கடத்தலில் ஈடுபட்டவர்கள் கைதாகியுள்ளனர்.

யுத்தகாலத்தில் இராணுவதுணைக்குழுவாக செயற்பட்ட ராசிக் ஆயுதக்குழுவின் முன்னாள் உறுப்பினர்களும் இந்த கடத்தலில் சம்பந்தப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. பாலமுனை, காத்தான்குடி பிரதேசத்தை சேர்ந்த முன்னாள் ராசிக்குழு உறுப்பினர்கள் இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர். காத்தான்குடி பொலிஸ்நிலைய விசேட அணியொன்று முன்னெடுத்த விசாரணையிலேயே இவர்கள் கைதாகியுள்ளனர். அத்துடன் குழந்தையை கடத்திச் செல்ல பயன்படுத்தப்பட்ட வாகனத்தையும் காத்தான்குடி பொலிஸ்குழு கைப்பற்றியுள்ளது.



# யாழ்ப்பாணத்தின் அடையாளம் இதுதானா?

யாழ்ப்பாணத்திற்கு முன்னர் நிறைய பெருமைகள் இருந்தது. சைவமும் தமிழும் வளர்ந்தது என்றார்கள். கல்வியின், பண்பாட்டின் ஊற்றுக்கண் என்றார்கள். இனஉணர்வின் மையப்புள்ளி என்றார்கள். இன்னும் என்னென்னவோ எல்லாம் சொன்னார்கள். அதெல்லாம் பழைய கதையென்பதால் ஞாபகத்திலிருந்தே இல்லாமல் போய்கொண்டிருக்கிறது. இப்போது அப்படியெல்லாம் எதுவுமில்லை. இப்போதைய நிலையில், யாழ்ப்பாணமென்பது குப்பைகளின் நகரம்.

யாழ்ப்பாணத்தில் இப்போது எல்லாமே குப்பைதான். கல்வி, கலாசாரம், வாழ்வியல்முறை என எல்லாமே குப்பையாகிக் கொண்டிருக்கிறது. யாழ்ப்பாணம் என்றால் ரௌடிகளின் வாள்வெட்டாலும், பலாத்காரத்தாலும், இன்னும் விதவிதமான வன்முறைகளாலும் அடையாளப்படுத்தப்படும் போக்கு ஆரம்பித்து நீண்டகாலமாகிவிட்டது. எதன் பெயரால் யாழ்ப்பாணத்தை அடையாளப்படுத்தினார்களோ, அதெல்லாம் இப்போது குப்பைக்கூடைக்குள் இருக்கிறது. அதை விடலாம். இப்போது யாழ் நகரத்தில் மிகப்பெரிய பிரச்சனையாக உருவெடுத்துள்ளது குப்பை பிரச்சனை.

யாழ் நகரத்தில் காணும் திசையெல்லாம் குப்பையாக, நாற்றமாக இருக்கிறது. வீதியோரங்களில் குப்பைகள் தேங்கியிருக்கிறது. யாழ் மாநகரசபையின் கழிவகற்றல் முகாமைத்துவம் சீராக இல்லாததுதான் இதற்கு காரணம். நகரத்தின் பல பகுதிகளில் நாற்றம் மூக்கை துளைக்கிறது. இது அதிகாரத்தில் இருப்பவர்களின் மூக்கை இன்னும் எட்டவில்லை. அவர்களின் சொகுசு வாகனங்களிற்குள் நாற்றம் எட்டிப்பார்ப்பதில்லை. தமது பிரதேசங்கள் அசுத்தமாக இருக்கிறதே என மக்களும் அதிகாரத்தில் இருப்பவர்களின் சட்டையை பிடிப்பதில்லை. இதனால் அதிகாரத்தில் இருப்பவர்கள் அசமந்தமாக இருக்கிறார்கள்.

இதில் இன்னொரு வேடிக்கையும் நடக்கிறது. வீடுகள், காணிகள் சுத்தமாக உள்ளதா என பொதுசுகாதார பரிசோதகர்கள் சோதனை செய்கிறார்கள். வீடுகளில் சுத்தம் பேணாதவர்களிடம் தண்டம் அறவிடப்படுகிறது. அதேசமயத்தில் மாநகர எல்லைக்குள் உள்ள பல இடங்கள் கழிவுக்காடாக உள்ளது. வீட்டுக்குள் சுத்தமாக இருந்தும் வீதியில் குப்பையை வைத்திருந்தால் பலனிருக்குமா?

நாட்டையும் வீட்டையும் சுத்தமாக வைத்திருக்க பொதுசுகாதார பரிசோதகர்களின் பணி முக்கியத்துவம் மிக்கதுதான். ஆனால் மாநகர சபையின் நிர்வாகம் சீராக செயற்படாதது, பொதுச்சுகாதார பரிசோதகர்களின் பணியை கேலிக்குள்ளாக்குகிறது.

யாழ்ப்பாணம் குப்பைக்காடாக மாறுகிறதென மாகாணசபையில் அடிக்கடி பேசுகிறார்கள். உறுப்பினர்கள் பேசுகிறார்கள், எதிர்க்கட்சி தலைவர் பேசுகிறார், முதல்வர் கேட்டுக் கொண்டிருக்கிறார். ஆளுனர், அரச அதிபர் ஆரியகுளத்தை சுத்தம் செய்கிறார்கள். ஆரியகுளத்தை சுத்தம் செய்பவர்கள் அக்கம் பக்கத்தில் எட்டிப்பார்க்கவில்லை. பார்த்திருந்தால் சுத்தம் செய்ய வேண்டியது ஆரியகுளத்தையல்ல, மொத்த யாழ்ப்பாண நகரத்தையும் என்பது தெரிந்திருக்கும். ஆனால் அவர்கள் எட்டிப்பார்க்கவில்லை. இவர்களிற்கெல்லாம் நகரின் தூய்மையை பேணுவதில் பொறுப்பில்லையா?

இவர்களிடம் குப்பை பிரச்சனையை பற்றி கேட்டால் வசதியாக மற்றவர்கள் மீது விரல் நீட்டுவார்கள். மாகாணசபை செயல்திறனற்றது என வழக்கமான குற்றச்சாட்டை ஆளுனரும், எதிர்க்கட்சி தலைவரும் வாய்ப்பாட்டு பாடுவார்கள். மத்திய அரசு இடையூறு செய்கிறதென சம்மந்தமேயில்லாத பதிலொன்றை சொல்லி முதல்வர் மிரட்டுவார். எல்லோரும் வாய்ச்சொல் வீரர்கள்தான். இவர்கள் யாரிடமும் உருப்படியான செயற்திட்டங்கள் இல்லை.

தமது பொறுப்புக்களை பேச்சால் கடந்து செல்லலாம் என இவர்கள் நினைக்கிறார்கள். உத்தரவிடும் இடத்தில் இருப்பவர்களின் அசமந்தம் அதிகாரிகளிற்கு வாய்ப்பாக போய்விட்டது. அவர்களும் படுத்து தூங்குகிறார்கள்.

மாநகரசபை நிர்வாகத்திடம் முறையான கழிவகற்றல் செயற்திட்டமும், பணியாளர்களும் இருந்தனர். இப்பொழுது திடீரென அது ஏன் செயலிழந்துள்ளது?

இருக்கும் அரைகுறை கழிவகற்றல் செயற்பாட்டிலும் நிறைய குற்றச்சாட்டுக்கள். கழிவுகளை அகற்ற வீடுகளில் பணம் கேட்கிறார்கள், கழிவுகளை பிரித்து தருமாறு கேட்கிறார்கள் ஆனால் கழிவுகளை பிரித்துபோட எல்லா இடங்களிலும் வசதியில்லை. இதையெல்லாம் கவனிக்க வேண்டிய நிர்வாகம் அசமந்தமாக இருக்கிறது. இது யார் தவறு?

குப்பை பிரச்சனை சமூகஊடகங்களில் கணிசமாக பேசப்படுகிறது. அந்தப்பகுதியில் இருப்பவர்கள் பலர் குப்பைகளை படம் எடுத்து, மாநாகரசபை நிர்வாகத்தை விமர்சித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த விவகாரம் தனியே அரச நிர்வாகம் சார்ந்ததல்ல. குப்பைகளை அகற்றும் செயல்திட்டத்தின் சட்டரீதியான பொறுப்புதாரரே அரச நிர்வாகம். ஆனால் நமது சூழலை சுத்தமாக வைத்திருக்கும் பொறுப்புணர்வு ஒவ்வொருவருக்கும் உள்ளது. குப்பைகளை படமெடுத்து பேஸ்புக்கில் பதிவிடுவதைவிட, அதை அகற்றுவதே சிறந்தது.

தீபம்
989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்
(கல்வியங்காடு இலங்கை வங்கி கட்டிட தொகுதி)
ஆசிரியர்பீடம்: 0768255562
விளம்பரம்: 0768255560, 0768255567
செய்திகளிற்கு: deepamdesk@gmail.com
செய்திகளை அறிந்திட: deepamnews.lk



**எம்.ஏ.சுமந்திரன் – நா.உ, தமிழ்தேசிய கூட்டமைப்பு**

கேப்பாபிலவிற்கு நாங்கள் சென்று கலந்துரையாடியபோது, மூடப்பட்டுள்ள வீதியை திறந்து விடவும், வீதிக்கு மேற்குப்பக்கமாக உள்ள பகுதியை விடுவிக்கவும் இராணுவம் சம்மதம் தெரிவித்தனர். எஞ்சியை அரைவாசி பகுதியான வீதியின் மறுபக்கத்தை விடுவிக்க கேட்டபோது, மறுத்துவிட்டார்கள். அதுபற்றி கொழும்பில் பேசிக்கொள்ளுங்கள் என்றுவிட்டார்கள். அடுத்தநாள் காலைத்தினசரியொன்று முதல்பக்கத்தில், கேப்பாபிலவில் காணிகளை முழுமையாக விடுவிக்கமாட்டோமென கூட்டமைப்பு எம்.பிகளிற்கு இராணுவம் அறிவித்ததாக செய்தி வெளியிட்டிருந்தது.



**வே.இராதாகிருஸ்ணன் – கல்வி இராஜாங்க அமைச்சர்**

பட்டதாரிகள் வேலையில்லாமல் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்தான். இவர்களில் பெருமளவானவர்கள் கலை, வர்த்தகதுறையை சேர்ந்தவர்கள். மலையகத்தில் போதுமான கணித, விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்கள் இல்லை. ஆனால் நிறைய வெற்றிடம் உள்ளது. வடக்கு, கிழக்கு ஆளுனர், கல்வியமைச்சரை தொடர்புகொண்டு பட்டதாரிகள் இருக்கிறார்களா என கேட்டோம். இங்கிருந்து பட்டதாரிகளை தருமாறு அவர்கள் கேட்கிறார்கள். பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல் கற்பிக்ககூடிய பட்டதாரிகள் இலங்கையின் எந்த பகுதியில் இருந்தாலும் என்னை தொடர்பு கொள்ளுங்கள். உங்களிற்கு நான் நியமனம் வழங்குவேன்.



**சந்திரிகா குமாரதுங்கா – முன்னாள் ஜனாதிபதி**

தமிழ் மக்களிற்காக மாத்திரமே இந்த அரசும் நாமும் செயற்படுவதாக சிலர் இனவாத கருத்துக்களை பரப்புகிறார்கள். ஆனால் எனது அரசியல் வாழ்க்கையில் சிங்களவர்களிற்காகவே முழுமையாக என்னை அர்ப்பணித்திருந்தேன். யுத்தத்தை முடிக்க, அனைவரையும் பாதுகாக்க முயற்சித்தவள். அதனால் எனது கண்ணையும் இழந்தேன். முஸ்லீம்களிற்காக குரல்கொடுக்க பலர் இருக்கிறார்கள். அன்றிலிருந்து இன்றுவரை தமிழர்களிற்காக குரல் கொடுக்க யாருமிருக்கவில்லை. எனது ஆட்சியில் வடக்கை அபிவிருத்தி செய்ய சிலரை நியமித்தேன். ஆனால் அவர்கள் செயற்படுவதை பிரபாகரன் தடுத்து விட்டார்.



**விஜயதாஸ ராஜபக்ச – நீதி அமைச்சர்**

சர்வதேச தலையீடு, கலப்பு விசாரணை முறை பற்றி சிலர் பேசுகின்றனர். இத்தகையை கருத்துகளை பயன்படுத்தி நாட்டில் மீண்டும் குழப்பங்களை ஏற்படுத்த சில சர்வதேச அமைப்புக்களும் காத்திருக்கின்றன. இதற்கு நாங்கள் இடமளிக்க மாட்டோம். போர்க்குற்ற விசாரணைகள் உள்ளக பொறிமுறை ஊடாகத்தான் நடக்கும். இதில் சர்வதேச தலையீட்டை அனுமதிக்க முடியாது. இலங்கையின் நீதித்துறை கடந்தகாலத்தில் மோசமானதாக இருந்தாலும், தற்போது அதன் சுயாதீனம் உறுதிப்படுத்தப்பட்டு விட்டது.



**சீ.யோகேஸ்வரன் – நா.உ, தமிழ்தேசிய கூட்டமைப்பு**

இந்தியப்பிரதமர் மோடியின் வருகையின் பின்னர் பல நன்மைகள் கிடைக்கலாம் என தமிழ்தேசிய கூட்டமைப்பு எதிர்பார்க்கிறது. அதேபோல மலையக தமிழ் தலைமைகளும் எதிர்பார்க்கிறார்கள். மோடியின் கோரிக்கையை ஏற்று தமிழர்களிற்கு எதையாவது அரசு செய்துவிடும், சர்வதேச அளவில் அரசாங்கம் பலம்பெற்றுவிடும் என்ற அச்சத்தாலேயே மோடியின் வருகையை ஒன்றிணைந்த எதிரணி எதிர்க்கிறது.

## பொலிற்றிக்கல் கிரிக்கெட்

### மூன்றாவது நடுவர்

சில சமயங்களில் ஓங்கியடிக்கப்படும் பந்து எல்லையை கடக்கும். யாராவது ஒரு பீல்டர் எல்லையை முட்டியும் முட்டாமலும் பிடிப்பார். முடிவு தெரியும் முன்னரே பந்துவீச்சாளர் துள்ளிக்குதிப்பார். பின்னர் மூன்றாவது நடுவர் முடிவை அறிவித்தபின்தான் பந்துவீச்சாளரின் உற்சாகம் அடங்கும். அப்படியொரு பந்துவீச்சாளரின் நிலைதான் தமிழ்தேசிய கூட்டமைப்பின் எம்.பி சரவணபவனிற்கு நடந்தது. இந்திய துணைதூதரிற்கு எதிராக கருத்து சொல்லி, சிக்ஸர் அடித்த மகிழ்ச்சியில் இருந்தார். அதன்பின் ஏற்பட்ட நெருக்கடிகள்தான், அடித்த பந்து சிக்ஸர் அல்ல, பிடியெடுக்கப்பட்டு விட்டதென்பதை அவருக்கு உணர்த்தியது.

### ஹிட் விக்கெட்

எமது மாணவர்கள் இப்போது ஹிட் விக்கெட் ஆகியுள்ளனர். அண்மைய போராட்டங்கள் எல்லாவற்றிலும் சொதப்பி, மன்னிப்பு கேட்டு, மக்களிடம் உருவான அனுதாபத்தை தாங்களாவே கெடுத்துக் கொண்டுள்ளனர்.

### அடுத்தடுத்த அவுட்

கிழக்கின் முஸ்லீம் பகுதிகளில் உள்ள அரச அலுவலீகங்கள் வரிசையாக காலியாகிக் கொண்டிருக்கின்றன. அனைத்தும் சிங்கள பகுதிகளிற்கு சென்று கொண்டிருக்கின்றன.



# விக்னேஸ்வரனை வழிநடத்தும் இருவர்!

நம்மாழ்வார்

வடக்கு மாகாணசபை என்ன செய்து கொண்டிருக்கிறது? மாரித்தவளை மாதிரி கத்திக்கொண்டிருந்தால் நிர்வாகம் இயங்குமென நினைக்கிறார்களா? எல்லாவற்றையும்மத்திய அரசின்தலையில்பழியை போட்டுக்கொண்டிருப்பதென்றால் இவர்கள் எதற்கு? யாழ்ப்பாண குப்பையை கூட அகற்ற வக்கில்லாதவர்கள் சுயாட்சி, காவல்த்துறை அதிகாரத்தை கோருகிறார்களே என பரவலாக முணுமுணுப்புக்கள் கேட்க ஆரம்பித்து விட்டன.

உள்ளூர் நிர்வாகம் நம்மவர்களின் கைகளில் கிடைத்த சில வருடங்களிலேயே அனைத்தையும் போட்டுடைத்து விட்டு நிற்கிறோம். வடக்கின் எல்லாதுறைகளிலும் பெரும் சீரழிவு. ஒழுங்கீனம். எல்லா துறைகளும் முடக்கத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறதோ என்ற அச்சம் எழத் தொடங்கியுள்ளது.

எல்லா அமைச்சர்களின் மீதும் ஊழல் குற்றச்சாட்டு. அமைச்சர்களே அப்படியெனில், அதிகாரிகள் எப்படியிருப்பார்கள்? முழித்திருக்க முழி தோண்டுபவர்களாக இருக்கிறார்கள். சில அதிகாரிகளின் தில்லாலங்கடி வேலைகளை பார்த்து அமைச்சர்களே மிரண்டு போயிருக்கிறார்களாம். அமைச்சர்களும், உயரதிகாரிகளும் இணைந்துதான் ஊரைத் தின்கிறார்களோ என்ற சந்தேகம் முதலமைச்சருக்கு சில காலத்தின் முன் ஏற்பட, உள்ளகஇடமாற்றம் செய்து பார்த்தார். இதற்கு பலன் கிட்டியதோ இல்லையோ, அதற்கு முன்னர் ஊழல்குற்றச்சாட்டுக்கள் முயல் வேகத்தில் முந்தி வந்து விட்டன. இது சகிக்க முடியாத ஒரு கட்டத்தை எட்டியுள்ள நிலையில், ஒரு விசாரணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

## விசாரணைக்குழு அமைக்கப்பட்டால் எல்லாம் சரியாகிவிடுமா?

இதுசிக்கலான கேள்வி.மாகாணசபையே பலகூறாக பிளவுபட்டுள்ளது. இந்த மாகாணசபையில் யாராவது ஒருவர் ஒரு விடயத்தை சொன்னால், அதன் பின்னால் யார்,என்ன அரசியல் இருக்கிறதென்றுதான் முதலில் ஆராய வேண்டும். ஏனெனில் குழு மோதல்களால் கூறுபட்டு, அசிங்க அரசியல் அரங்கேறுமிடமாகியுள்ளது வடமாகாணசபை. குற்றம்சாட்டப்படுபவர்கள் எப்படி யோக்கியதையற்றவர்களோ, அதேபோலத்தான் குற்றம் சாட்டுபவர்களும் யோக்கியதையற்றவர்கள். அனைத்தும் மக்கள் நலன் என்ற பெயரில் அரசியல் நோக்கத்திற்காக அரங்கேறும் அசிங்க நாடகங்கள்.


விக்கி - ஐங்கரநேசன்

## விஜய், வடிவேலு பாணி

"முதலமைச்சரின் காலைவார என்னை நகர்ப்புற ஹோட்டல் ஒன்றிற்கு அழைத்து இரகசிய கலந்துரையாடல் நடத்தினார்கள்" என்கிறார் ஒரு உறுப்பினர். "இவ்வளவு பேசுகிறீர்களே... காற்றாடி ஒப்பந்தத்தில் பகிரங்கமாக நடந்தீர்களா.. தண்ணீர் பிரச்சனையில் நீங்கள் அமைத்த நிபுணர் குழுவின் சித்துவத்தைபற்றி விவாதம் நடத்த வாருங்கள்" என்றால் மென்று விழுங்குகிறார்கள் சிலர்.

விசாரணை நடத்த கோருவதற்கு பின்னாலும் அரசியல் நோக்கமிருக்கும். விசாரணையின் பின்னாலும் அரசியல் நோக்கமிருக்கும். இப்படி விசாரணைக்குழு நியமித்தால் அது பலனளிக்குமென சொல்ல முடியாது. ஏனெனில் ஏற்கனவே இப்படி அமைக்கப்பட்ட விசாரணைக்குழுக்களின் அறிக்கைகளிற்கு என்ன நடந்ததென்பது யாருக்கும் தெரியாது.

வடமாகாணசபையே இப்படி இம்சை யரசன் 23ம் புலிகேசியின் அரண்மனை மாதிரி பெரும் அக்கப்போராக இருக்க, முதலமைச்சர் என்வழி தனிவழி என பயணித்துக் கொண்டிருக்கிறார்.

ஏதோ ஒரு படத்தில் விஜய் ஒரு பஞ்ச் வசனம் பேசுவார். ஒருமுறை நான் முடிவெடுத்தால், அப்புறம் என் பேச்சையே நான் கேட்க மாட்டேன் என. முதல்வரின் அரசியல் பயணத்திற்கு அச்சு அசல் உதாரணம் இதுதான். யாரும் போற்றினாலும் மயங்காமல், தூற்றினாலும் சினக்காமல் கண்ணை மூடிக்கொண்டு தன்வழியில் போய்க்கொண்டிருக்கிறார் முதல்வர்.

மாகாணசபையில் முதல்வர் எதிரணி ரவுண்டு கட்டி அடிப்பார்கள். முதலமைச்சரின் மெத்தனப்போக்குகள், முதலமைச்சர் அணியின் பலவீனங்கள், முதலமைச்சர் அணி அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் என சுற்றிவளைத்து தாக்குவார்கள். பிரேமானந்தா சுவாமி கண்ணைமூடி நிஷ்டையில் இருப்பதை போல அசையாமல் உட்கார்ந்திருப்பார் முதல்வர். எவ்வளவு அடிச்சாலும் வலிக்காமல் இருக்கிறாரே என அவர்களே களைத்துப்போய் உட்கார்வார்கள்.

## நேர்மைக்கு விலையில்லை

அரசியலில் சூது, வாது தெரிந்தால்தான் பெரிய ஆளாக வரலாம் என எழுதப்படாத ஒரு விதி உள்ளது. அந்த விதியை இன்னும் விக்கியருக்கு யாரும் சொல்லிக் கொடுக்கவில்லை. நேர்மை ஒன்றுதான் முக்கியம் என அவர் நினைக்கிறார். வழிநடத்துபவர் நேர்மையாக, ஊழலில்லாமல் இருந்தால் போதும், நிர்வாகம் சிறப்பாக இயங்கும் என அவர் நினைக்கிறார்.

இதுதான் முதல்வர் விடும் பெரிய தவறு. முதல்வரின் நினைப்பிற்கு மாறாக அதிகாரிகள் நினைக்கிறார்கள் என்பதை முதல்வர் புரிந்து கொள்ளவில்லை. இருபத்து நான்கு மணித்தியாலமும் தம்மை கண்காணித்து, எப்படி செயற்பட வேண்டுமென உத்தரவிட்டு, வேலைவாங்கும் தலைமைத்துவம் கிடைத்தால்தான் நம்மவர்களை கட்டிமேய்க்க முடியும். முன்னாள் ஆளுனர் சந்திரசிறியின் காலத்தில், நம்மவர்கள் அப்படித்தான் வேலை பார்த்தனர்.

"ஒரு மட்டு மரியாதை இல்லாமல் இப்படி உருட்டி மிரட்டி வேலை வாங்குகிறாரே" என உள்ளுக்குள் பொரிந்தாலும் அதிகாரிகள் விழுந்தடித்து வேலை செய்தனர். இப்போது அலுவலக கதிரையில் புதைந்துபோய் விட்டனர். இதற்கு ஒரு உதாரணம் சொல்கிறார்கள். முன்னர் தூர இடங்களில் கூட ஒரு பணிவெற்றிடத்தை காண முடியாது. கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் எந்த பகுதியாக இருந்தாலும் வெற்றிடத்தை நிரப்ப அலுவலர்கள் அனுப்பப்பட்டனர். யாழ்ப்பாணத்தை விட்டு வெளியில் செல்லமாட்டோம் என அடம்பிடித்தவர்களையெல்லாம் ஓடஓட விரட்டினார் சந்திரசிறி.

இப்போது அப்படியெல்லாம் இல்லை. அண்மையில் புதிய அதிபர் நியமனத்தின்போது, வடமராட்சி வலயத்தில் இருந்து எந்த அதிபரும் வெளியிடங்களிற்கு செல்லவில்லையென்பது ஒரு உதாரணம். அதிகாரிகள், அரசியல்வாதிகளின் காலை, கையை பிடித்து இடமாற்றம் பெற்றுவிடுகிறார்கள். இதற்கு ஆளுனர் அலுவலகமும் விதிவிலக்கல்ல. ஆளுனர் அலுவலகம் வரை ஓடிச்சென்று காலை, கையை பிடிக்கிறார்கள்.

## நல்ல மனிதரா? நல்ல நிர்வாகியா?


முதல்வர் அமைச்சு இழுத்துபோர்த்துக் கொண்டு நன்றாக தூங்குகிறது. முதல்வர் நல்ல மனிதர், கள்ளங்கபடமற்ற நேர்மையானவர், ஒரு சதம் பணத்தை தனக்காக எடுக்காதவர் என்பதெல்லாம் மகிழ்ச்சியானதுதான். ஆனால் நிர்வாகத்தை கொண்டு நடத்த உதவாதவை.

நிர்வாக ரீதியில் பலவீனமாகவும், தனிப்பட்ட ரீதியில் நேர்மையானவராகவும், அரசியலில் தனித்த அடையாளத்தை எடுக்க முடியாதவராகவும் தனிவழியில் சென்று கொண்டிருக்கும் முதல்வர் எப்படி மாகாண நிர்வாகத்தையும், அரசியலையும் நகர்த்தி செல்கிறார்? இதற்கு பதில் இரண்டு பெயர்கள். தான் சரியென நினைத்த பாதையில் உறுதியாக செல்லும் இயல்புடைய முதல்வரிற்கு மேலும் இரண்டு ஆலோசகர்கள் இருக்கிறார்கள். அவர்களின் பேச்சை முதல்வர் அதிகமாக கேட்கிறார், முதல்வரில் அதிக செல்வாக்கு

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

# திரைப் பார்வை
# மின்னலே...

நிலவன்



சினிமாவைப் பொறுத்தவரைக்கும் அறிமுகப் படத்திலேயே வெற்றியைச் சுவைப்பதென்பது ரொம்பவும் கஸ்டமான விடயம். அப்படி எடுத்த எடுப்பிலேயே அதாவது முதல் படமே வெற்றிப் படமாக அமைந்து விட்டால் அப் படத்தின் இயக்குநர் திரையுலகால் கொண்டாடப் படும் ஒருவராக மாறி விடுவார். அப்படி அறிமுகப் படத்திலேயே கொண்டாடப்பட்ட சொற்ப இயக்குநர்களில் கௌதம் வாசுதேவ மேனனும் ஒருவர். 2001ஆம் ஆண்டு மின்னலே என்று ஒரு காதல் காவியத்தைத் திரையில் கொடுத்து மக்கள் மனதில் நீங்கா இடம்பிடித்தவர் இயக்குநர் கௌதம் வாசுதேவ மேனன். மாதவன், அப்பாஸ், ரீமாசென், விவேக், நாகேஸ் போன்றோர் நடித்து ஹரிஸ் ஜெயராஜ் இசையமைத்து இளமைத் துள்ளலோடு வெளிவந்த இத் திரைப்படம் அக்காலத்தின் காதல் காவியங்களுள் வித்தியாசமாகத் தெரிந்தது. கௌதம் வாசுதேவ மேனனுக்கு மட்டுமல்லாது ரீமாசென், ஹரிஸ் ஜெயராஜ் போன்றோருக்கும் இதுவே முதல் படமாக அமைந்தது. இம் மூவருக்கும் திரையுலகில் சிறப்பான ஓர் ஆரம்பத்தைப் பெற்றுக் கொடுத்தது மின்னலே திரைப்படம்.

படத்தின் கதைப்படி மாதவன் (ராஜேஸ்), அப்பாஸ் (ராஜீவ் சாமுவேல்) இருவரும் ஒரே கல்லூரியில் எலியும் பூனையுமாகப் பழகுகின்றார்கள். கல்லூரியில் இருந்து பிரிந்து செல்லும் போது கூட இருவரும் சந்தித்துக் கொள்ளக் கூடாது என்ற நினைப்புடனேயே பிரிந்து செல்கின்றார்கள். அப்பாஸ் வேலை கிடைத்து அமெரிக்காவில் செட்டிலாகிவிட மாதவனோ சொந்த ஊரிலேயே என்ஜினியரிங் கற்றுக் கொடுத்து வருகின்றார். ஆனால் காலம் இவர்கள் இருவரையும் மறுபடியும் மோதிக் கொள்ள வைக்கின்றது. ரீமாசென் (ரீனா ஜோசப்) வடிவில். வெளியூர் செல்லும் மாதவன் அங்கு ஒரு மழை நேரத்தில் மின்னல் வெளிச்சத்தில் ரீமாசென்னைப் பார்க்கின்றார். பார்த்ததும் மனதைப் பறி கொடுக்கின்றார். அடுத்தநாளே தன் நண்பனின் திருமணத்திலும் அவளைப் பார்க்கின்றார். ரீமாசென்னை எப்படியாவது காதலித்து விட வேண்டும் என்று துடிக்கின்றார். இந்த நோத்தில் தான் ரீமாசென் ராஜீவ் என்று ஒருவருக்கு நிச்சயமாகியிருப்பது மாதவனுக்குத் தெரிய வருகின்றது. அதேநேரத்தில் ரீமாசென் ராஜீவை நேரில் பார்த்ததில்லை என்ற தகவலும் தெரிய வருகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ராஜீவாக ரீமாசென்னைச் சந்திக்கின்றார் ராஜேஸ் (மாதவன்). ஐந்து நாட்கள் ரீமாசென்னுடன் பழகி அவர் மனதில் காதலை வளர்க்கின்றார். ஆனால் ஐந்து நாட்களின் பின் அப்பஸை நேரில் சந்திக்கும் ரீமாசென்னுக்கு உண்மை புரிகின்றது. அதன் பின் மாதவன் தன்னை நிருபிக்கப் பல முயற்சிகளை மேற்கொண்டு இறுதியில் ரீமாசென்னை அடைகின்றார்.

2001ஆம் ஆண்டு காலப்பகுதியில் இப்படி ஒரு வித்தியாசமான காதல் அணுகுமுறையைக் கையாண்டு மின்னலே திரைப்படத்தை எடுத்த அறிமுக இயக்குநர் கௌதம் வாசுதேவ மேனன் அப்பாஸ் மற்றும் மாதவன் போன்றோரை அக்காலத்துக்கு ஏற்றவாறு சமமாகவே கையாள வேண்டியிருந்தது. காரணம் அக் காலப்பகுதியில் அப்பாஸீக்கும் மாதவனுக்கும் தனித்தனியே ரசிகர் கூட்டம் இருந்தது. ஆகவே இருவரையும் படத்தில் முக்கியத்துவப்படுத்த வேண்டிய கட்டாயம் இருந்தது. இருப்பினும் கதையோட்டத்தில் எதுவித மாற்றமும் ஏற்படாதவாறு இருவரது கதாபாத்திரத்தையும் கையாண்டிருந்தார் இயக்குநர். கதாநாயகி ரீமாசென்னுக்கு அறிமுகப் படமே அசத்தலாக அமைந்தது என்றுதான் சொல்ல வேண்டும். அழகிலும், கவர்ச்சியிலும் கலக்கியிருந்தார். (நடிப்பு சுமார்தான்).

படத்தில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய முக்கியமான விடயம் படத்தின் பாடல்கள். படத்தின் எல்லாப் பாடல்களும் இளமைத் துள்ளலோடு அமைந்திருந்தன. அதிலும் 'வசீகரா என் நெஞ்சினிக்க' என்று தாமரை எழுதி பாம்பே ஜெயஸ்ரீ பாடிய பாடல் பட்டிதொட்டி எங்கும் பட்டையைக் கிளப்பியது. பெண்களின் உணர்வுகளையும் ஆண்களின் குரலிலேயே கேட்டுப் பழக்கப்பட்ட ரசிகர்களுக்கு 'வசீகரா' பாடல் ரொம்பவே புதிதாக இருந்தது. 2001இன் மிகச் சிறந்த பாடலாக இப்பாடல் அமைந்ததுடன் சிறந்த இசையமைப்பாளருக்கான பிலிம்பேர் விருதையும் ஹரிஸ் ஜெயராஜிற்குப் பெற்றுக் கொடுத்தது. அத்தோடு மாதவன் ரீமாசென்னைப் பார்த்து உருகும் காட்சிகளில் இடம்பெறும் 'நெஞ்சைப் பூப்போல் கொய்தவளே' பாடல் வரியும் மிக்க வரவேற்பைப் பெற்றது. (இப் படத்தின் இயக்குநர் கௌதம் வாசுதேவ மேனனுக்கு தன் படங்களுக்கு தமிழிலேயே பெயர் வைக்கும் வழக்கம் 'மின்னலே' தொடங்கி அண்மைய் 'அச்சம் என்பது மடமையடா' வரைக்கும் தொடர்வது மிகவும் வரவேற்கத் தக்க விடயம்). 175 நாட்கள் ஓடிய இத் திரைப்படம் 375 மில்லியன் வசூலைப் பெற்றுக் கொண்டது. மின்னலென வந்து மறைந்து போகும் படங்களுக்கு மத்தியில் இடி போல் வலுவான கதையுடன் வந்த 'மின்னலே' திரைப்படம் ரசிகர்களால் கொண்டாடப்பட்டது ஆச்சரியமான ஒன்றல்லவே.

**பார்வை தொடரும்**

---

செலுத்துகிறார்கள் என்கிறார்கள்.

**நிமலன் கார்த்திகேயன்**

இந்த பெயராலேயே முதல்வரிற்கு நிறைய சிக்கல்கள் வந்தன. முதல்வரின் தூரத்து உறவினரான இவர் அவுஸ்திரேலிய குடிமகன். இலங்கை பிரஜையல்லாதவரிற்கு எப்படி மாகாணசபை சம்பளம் வழங்கலாமென எதிர்க்கட்சிகள் இப்பொழுது குடைச்சல் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. பிரதமசெயலாளர் இந்த குடைச்சல்களை இயன்றவரை மௌனமாக இருந்து கடந்துகொண்டிருக்கிறார். நிமலன் தற்போது இரட்டை பிரஜாவுரிமை பெற்றுவிட்டாரா என்பதை உறுதிசெய்ய முடியவில்லை. இவருக்கு இரட்டை பிரஜாவுரிமை வழங்குமாறு மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த சமயத்தில் முதல்வர் ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். அதுதவிர, ஐநா முகவரமைப்பு வடக்கில் பெருமெடுப்பில் செய்ய உத்தேசித்த திட்டமொன்றின் இணைப்பாளராக இவரை நியமிக்குமாறு ஐநாவிற்கும் முதல்வர் கடிதமெழுதினார். இந்த விவகாரம்தான் நிமலன் கார்த்திகேயன் என்ற பெயரை பிரபலமாக்கியது.

முதல்வர் அலுவலகத்தில் ஆலோசகர் என்றபெயரில் நிமலன் தற்போது பணியாற்றி வருகிறார். முதல்வரின் அனைத்தும் நிமலன்தான். நிமலன் முடிவெடுத்தால் சரி. அது முதல்வரின் முடிவாக வெளியில் வரும் என சொல்லப்படுமளவிற்கு இவரது செல்வாக்கு உள்ளது.

சுருக்கமாக சொல்வதானால், வடக்கு முதல்வரை நிர்வாக ரீதியில் வழிநடத்துவது இவர்தான். அதிகாரிகளை கண்காணிப்பது, உத்தரவிடுவது, ஆலோசனை வழங்குவது என அனைத்தையும் ONE MAN ARMY யாக செய்து கொண்டிருக்கிறார்.



நிமலன் கார்த்திகேயன்

இவரது நியமனத்தின் முன்னர் முதலமைச்சர் அலுவலகம் குறட்டை விட்டு தூங்கிக் கொண்டிருந்தது. இவர் வந்ததன் பின்னர்தான் மெல்ல அசைய ஆரம்பித்துள்ளது. அமைச்சுக்களில் ஆலோசனைக் குழு கூட்டம் என்ற ஒன்றை கட்டாயம் நடத்தியாக வேண்டும். அமைச்சு சிறப்பாக இயங்க அதிகாரிகளுடன் நடத்தப்படும் இந்த கூட்டம், முதல்வர் அமைச்சில் சில வருடங்களாக நடக்கவேயில்லை. நிமலன் பொறுப்பேற்ற பின்னர்தான் முதன்முறையாக நடந்துள்ளது.

எந்தெந்த ஒப்பந்தங்களை யாருடன் செய்வது, அதிகாரிகள் இடமாற்றம் எல்லாவற்றையும் இவர்தான் முடிவு செய்கிறார். நிமலன் சொன்னால் சரியாக இருக்குமென முதல்வரும் நம்புகிறார். முதல்வரை நிர்வாக ரீதியாக முழுமையாக இவர்தான் வழிநடத்துகிறார். அரசியல்ரீதியாகவும் ஓரளவு செல்வாக்கு செலுத்துகிறார்.

**ஐங்கரநேசன்**

வடக்கு விவசாய அமைச்சர் ஐங்கரநேசனிற்கு இந்த பட்டியலில் மூன்றாவது இடம். அப்படியானால் இரண்டாவது ஆளை ஏன் குறிப்பிடவில்லையென கேட்கிறீர்களா? இரண்டாவது ஆள் முதல்வர்தான். தனது அரசியல் பாதையை முதல்வர்தான் தீர்மானிக்கிறார். எனினும், அரசியல்ரீதியாக ஐங்கரநேசனும் ஓரளவு செல்வாக்கு செலுத்துகிறார்.

மாகாணசபைக்குள் முதல்வரிற்கு எதிராக உறுப்பினர்கள் சிலர் "கிளர்ச்சி" செய்யும்போது, முதல்வர் ஆதரவு அணியின் தளபதியாக வழிநடத்தியதில் ஆரம்பித்த நெருக்கம் இப்போது பூர்வ ஜென்ம பந்தமாகியுள்ளதென்கிறார்கள்.

அண்மையில் வடக்கில் போராட்டங்கள் தீவிரம் பெற்றிருந்தபோது முதல்வர் நோய்வாய்ப்பட்டு கொழும்பில் தங்கியிருந்துவிட்டார். அவர் கொஞ்சம் குணமடைந்ததும், போராட்டக்களங்களிற்கு அழைத்து சென்றது ஐங்கரநேசன். ஆரம்பத்திலிருந்தே ஐங்கரநேசன் முதல்வர் அணியில் இருந்தாலும், மிக நெருக்கமாகியுள்ளது அண்மைக்காலமாகத்தான்.

முதல்வரின் அண்மைய அரசியல் நிலைப்பாடுகளில் எல்லாம் ஐங்கரநேசனின் பின்னணி இருப்பதாக கூறுகிறார்கள். ஐநா மனிதஉரிமைகள் பேரவைக்கு காலஅவகாசம் வழங்குவது தொடர்பில் தமிழ்தேசிய கூட்டமைப்பினர் வவுனியாவில் கூடியபோது, முதல்வரின் மின்னஞ்சல் விவகாரத்தை ஐங்கரநேசன் கையிலெடுத்திருந்தார். அதேபோல, முதல்வர் அண்மையில் வெளிநாட்டு பயணம் செய்தபோது பதில் முதல்வராக ஐங்கரநேசன்தான் பதவியேற்றுக் கொண்டார்.

முதல்வர் அரசியல்ரீதியான முடிவுகள் எடுக்கும்போது ஐங்கரநேசனின் கருத்துக்களைதான் அதிகம் கேட்கிறார் என்கிறார்கள்.

# முள்ளிவாய்க்கால்
# கடக்க முடியாத துயர நிழல்

நவீன மானிடகுல வரலாற்றில் நிகழ்ந்த மாபெரும் மனிதப்பேரவலத்தின் நினைவு வாரம் இது. உலகில் மீண்டும் ஒரு மனிதப்பேரவலம் நிகழக்கூடாது என்ற உயரிய நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட ஐநா சபையின் பிரதிநிதிகளை வெளியேற்றிவிட்டு, பன்னாட்டு மனிதஉரிமைகள், போர்ச்சட்டங்களை மீறி நிகழ்த்தப்பட்ட ஒரு மாபெரும் இனப்படுகொலையின் நினைவு வாரமிது.

குழந்தைகள், பெண்கள், முதியவர்கள், நோயாளிகள் என்ற பேதமின்றி வகை தொகையில்லாமல் கொல்லப்பட்ட மக்கள் புதைக்கப்பட்ட நாட்களையும் அதன் நினைவுகளையும் ஏந்தி இந்த நாட்களில் கடந்து செல்கிறோம். நினைவு கொள்ளவே முடியாத துயரத்தின் கனதியை இந்தநாட்களில் ஏந்திச்செல்லும் வல்லமையை எங்களிற்கு காலம் வழங்கட்டும்.

எத்தனை பேர் கொல்லப்பட்டனர், எத்தனை பேர் காணாமல் போனார்கள், எத்தனை பேர் குடும்பங்களை இழந்தார்கள், எத்தனை பேர் அங்கங்களை இழந்தார்கள், எத்தனை பேர் சொத்துக்களை இழந்தார்கள் என்ற ஒரு புள்ளிவிபரத்தையும் வரலாற்றின் ஏடுகளில் பதிந்து விடக்கூடாதென்ற மிருகத்தனமாக ஓர்மத்துடன் தமிழர்கள் என்ற சிறிய இனத்தின் மீது நடத்தப்பட்ட கொடிய போர் அது.

மே 18ம் திகதியுடன் அது முடியவில்லை. இன்றுவரை தொடர்கிறது. கொல்லப்பட்டவர், காணாமல் போனவர்கள் பற்றிய புள்ளிவிபரங்களை திரட்ட முடியாத நெருக்குவாரங்களை தொடர்ந்து ஏற்படுத்தி, பொறுப்புக்கூறலில் இருந்து தப்பிக்கும் அரசின் செயற்பாடுகள் கூட ஒரு மறைமுக போர்தான்.


மன்னாரில் ஆரம்பித்த போர் மெது மெதுவாக நகர்ந்து வந்து முள்ளிவாய்க்கால் கரையோரமாக முடிந்த கோர யுத்தத்தின் அழியாத நினைவுகள் இன்றும் தமிழ் மக்களின் நினைவுகளில் உள்ளது. உலகத்தின் கண்களை மறைத்து அல்லது உலகம் கண்ணைமூடிக் கொண்ட சமயத்தில் நடந்த அந்த பேரழிவு நாட்களின் சில சம்பவங்களின் தொகுப்பு இது.

- 2006 இல் தள்ளாடியிலிருந்து படைநடவடிக்கையை ஆரம்பித்த படையினர் 2008 ஓகஸ்டில் வெள்ளாங்குளம் நகரை கைப்பற்றினர். மன்னாரின் பல பகுதிகளிலிருந்தும் இடம்பெயர்ந்த மக்கள் வெள்ளாங்குளத்தில் தங்கவைக் கப்பட்டு, தன்னார்வ அமைப்புக்களால் பராமரிக்கப்பட்டு வந்தனர். வெள்ளாங்குளத்தை படையினர் கைப்பற்றியதன் மூலம் மன்னாரின் பெருமளவு பகுதியை இராணுவம் கைப்பறியது.
- பூநகரி நகரத்தை 2008.11.15 இல் கைப்பற்றியதாக அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்தது. பூநகரியை கைப்பற்றியதன் மூலம் விடுதலைப் புலிகளின் தென்னிந்திய பின்தளம் அற்றுப்போனது. மன்னாரில் இருந்து ஏ 32 சாலை வழியாக பூநகரியை நோக்கி செல்லும் படையினரின் தசாப்தகால கனவு இதன்மூலம் நிறைவேறியது. 1985ம் ஆண்டின் பின்னர் யாழ்ப்பாண படையினருக்கும் தென்னிலங்கை பின் தளத்தை கொண்ட வவுனியா, மன்னார் படையினருக்குமிடையில் தொடர்பு வழி ஏற்பட்டது.
- பூநகரியில் இருந்து பரந்தனை நோக்கி முன்னேறிய படையினர் 2009.01.01 அதிகாலை பரந்தனை கைப்பற்றினார்கள். மறுநாள் கிளிநொச்சிக்குள் நுழைந்தார்கள். இதன் மூலம் ஏ9 வீதிக்கு கிழக்கு புறமாக மக்கள் குறுக்கப்பட்டனர்.
- 2009.01.21 இல் பாதுகாப்பு வலயத்தை அரசு பிரகடனப்படுத்தியது. உடையார்கட்டு சந்தி தொடக்கம் மஞ்சள் பாலம் வரையான பகுதி பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர், ஓரிரு நாட்கள் கழித்து அதன்மேல் செல் மழை பொழியப்பட்டது. இடம்பெயர்ந்து வீதியில் சென்றுகொண்டிருந்தவர்கள் வாகனத்திலேயே சடலமாக கிடந்தனர். வீதியெங்கும் சடலங்கள் சிதறிக்கிடந்ததாக அந்த சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் பின்னர் விபரித்திருந்தனர்.
- 2009.03.02 இல் புதுக்குடியிருப்பு நகரத்தை இராணுவம் கைப்பற்றியது. இதன்மூலம் மாத்தளன் தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரையான குறுகிய நிலத்தில் மக்கள் அடைபட்டனர்.
- பாதுகாப்பு வலயத்தில் அடைபட்ட மக்களை புலிகளிடமிருந்து பிரித்தெடுக்க உணவு, மருந்து தடை மற்றும் அகோர செல் தாக்குதல் உத்தியை இராணுவம் மேற்கொண்டது. இதனால் பாதுகாப்பு வலயத்திற்குள் பெரும் மனிதப்பேரவலம் ஏற்படத் தொடங்கியது.
- பட்டினியை பொறுக்க முடியாத மக்கள், மாத்தளனிற்கு அண்மையாக இருந்த உமி குவியலில் அரிசிமணி கிடைக்குமா என பொறுக்குவதை கண்டதாக ஒருவர் பதிவு செய்திருந்தார். நாள் முழுவதும் தேடினால் உள்ளங்கையில் சிறிதளவு அரிசி கிடைப்பதாகவும், குடும்பமாக அரிசி பொறுக்கி, கஞ்சி காய்ச்சி குடிப்பதாக இன்னொருவர் பதிவு செய்திருந்தார்.
- 2008 நடுப்பகுதியின் பின்னர் அனேகமாக ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு வாரமும் புதிய இடங்களிற்கு குடிபெயர்ந்து கொண்டிருந்தார்கள். போகுமிடத்தில் பதுங்குகுழி வெட்டுவது தலையாய பணி.
- உலகின் மிகப்பெரிய மலசலகூடமாக மாத்தளன் தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரையான கடற்கரை பகுதி மாறியது. இடம்பெயர்ந்து குறுகிய இடத்தில் அடைபட்ட மக்களிற்கு மலசலகூட வசதியும் இருக்கவில்லை. கடற்கரைதான் தஞ்சமாக இருந்தது. சிறிய கடற்கரையில் இலட்சக்கணக்கான மக்கள் குவிந்ததால் கடற்கரையும் நகரத்தை போன்ற நெரிசலை கொண்டிருந்தது. மலசலகூடத்திற்கு செல்ல வழியில்லாததாலேயே பெண்கள் சாப்பிடாமல் இருந்த நாட்களவை.
- நாளாந்தம் நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்து கொண்டிருந்த காலம் அது. பொக்கணை பாடசாலை, மாத்தளன் பாடசாலையில் தரையில் காயமடைந்தவர்களை வரிசையாக அடுக்கி வைத்து அவசர சிகிச்சையளிக்கப்பட்டனர். அவசர சிகிச்சையளிக்கப்பட்டு அனைவரும் வீட்டுக்கு அனுப்பப்பட்டனர். காரணம், தினமும் நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைவதால் அவர்களிற்கு சிகிச்சையளிக்க வசதியிருக்கவில்லை.
- 2009 ஏப்ரல் 20இல் மாத்தளன் பகுதிக்குள் இராணுவம் ஊடுருவியது. சுமார் 150,000 மக்கள் இந்த சமயத்தில் இராணுவ கட்டுப்பாட்டு பகுதிக்கு சென்றனர்.
- வலைஞர்மடம், முள்ளிவாய்க்காலில் குறுக்கப்பட்ட மக்கள் மீது நாலாபுறமிருந்தும் கோர தாக்குதல் நடத்தப்பட்டது. மே மாத ஆரம்பத்திலிருந்து வெளியில் தலைநிமிர்ந்து நடமாடியதில்லையென்கிறார்கள் அங்கிருந்த மக்கள். நாலா திசைகளில் இருந்தும் சீறிப்பாயும் தோட்டாக்கள் நிமிர்பவர்களை துளைத்து சென்றுவிடும்.
- மே மாதத்தின் முதல்வாரத்தில் முள்ளிவாய்க்காலில் அமைக்கப்பட்டிருந்த வைத்தியசாலையை இராணுவம் நெருங்கிவிட்டது. காயமடைந்தவர்கள் அங்கிருந்து ஊர்ந்தபடி கிறவல் வீதிக்கு வந்து, வீதியில் கைவிடப்பட்டிருந்த வாகனங்களின் கீழ் தஞ்சமடைந்தனர். இராணுவக்கட்டுப்பாட்டு பகுதிக்கு சென்றவர்களின் உறவுகளே தனித்துபோய் சிரமங்களை அதிகமாக எதிர்கொண்டனர்.
- அப்போது நடந்த சம்பவமொன்றை ஒருவர் நினைவுகூர்ந்தார். "நான் அவசரமாக வீதியால் சென்று கொண்டிருந்தேன். ஒரு டிப்பர் நின்றது. அதை கடக்க, திடீரென ஒரு கை என பாதத்தை பிடித்தது. ஒரு இளம்பெண். முள்ளந்தண்டு இயங்க முடியாமல் காயமடைந்திருந்தாள். வைத்தியசாலையிலிருந்து ஊர்ந்து வந்து, வாகனத்தின் கீழ் தஞ்சமடைந்திருக்கிறாள். வெயில் வேறு கொளுத்துகிறது. ஒரு சொட்டு தண்ணீர் கேட்டாள். பக்கத்தில் தேடி சிறிய பாத்திரத்தில் தண்ணீர் வாங்கிவந்து கொடுத்தேன். யாராவது இயக்க போராளிகளிடம் ஒரு குப்பி வாங்கி தருமாறு கெஞ்சினாள். என்னாலும் அதிகம் அவ்விடத்தில் நிற்க முடியாது. பக்கத்தில் இருந்த சிறிய பள்ளத்திற்குள் அவளை தூக்கி வைத்துவிட்டு வந்துவிட்டேன்" என்றார்.
- "தினமும் மரணத்தை கண்டது போய், ஒவ்வொரு நொடியும் மரணத்தை கண்டுகொண்டிருந்த சமயம். சடலங்களின் மேலாக நடந்துதான் நீரேரி கரையை அடைந்தேன். நடக்க முடியாத காயமடைந்தவர்கள் "என்னை தூக்குங்கோ" என அவலமாககத்திக் கொண்டிருந்தார்கள். யாருடைய உயிருக்கும் உத்தரவாதமற்ற சமயம் அது. இப்போது நினைக்க, பலரிற்கு உதவியிருக்கலாம் என தோன்றுகிறது. ஆனால் அப்பொழுது எதையும் சிந்திக்கும் நிலையில் இல்லை" என்பது இன்னொருவரின் வாக்குமூலம்.
- இந்த காலப்பகுதியில் ஒரு தேங்காயின் விலை 3,000 ரூபா. ஒரு பவுண் நகைக்கு ஒரு கிலோ அரிசி பண்டமாற்றப்பட்டது. ஒரு சங்கிலியை கொடுத்து ஒரு கிலோ மா வாங்கியவர்கள் இருக்கிறார்கள்.
- பொக்கணையில் பால்மாவிற்கு வரிசையில் நின்றவர்கள் மீது நடத்தப்பட்ட உலங்கு வானூர்தி தாக்குதலில் வகை தொகையில்லாமல் மக்கள் கொல்லப்பட்டனர்.
- 2009.05.16 மாலையில் தமது கட்டுப்பாட்டு பகுதியில் இருந்த மக்களை, சுயவிருப்பின் அடிப்படையில் முடிவெடுக்குமாறு புலிகள் அறிவித்தனர்.
- 16ம் திகதி முள்ளிவாய்க்காலில் சிறிய நிலப்பரப்பில் மக்கள் ஒடுக்கப்பட்டு, நடத்தப்பட்ட தாக்குதலில் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர்.
- தாக்குதல் அகோரத்தை தாங்க முடியாத மக்கள் வட்டுவாகல் பாலத்தால் முல்லைத்தீவு நோக்கி தப்பியோடினர். அங்கு மக்கள் தரம் பிரிக்கப்பட்டு, பலர் இராணுவத்தால் கைதாகினர். பலர் சரணடைந்தனர். சரணடைந்தவர்களை இராணுவம் பேரூந்தில் ஏற்றிச்சென்றதை கண்ணால் கட்ட சாட்சியங்கள் ஏராளம்பேர் உள்ளனர்.
- இராணுவக்கட்டுப்பாட்டு பகுதியில் நடந்த விசாரணை இடங்களிற்கு அண்மையாக இருந்த தென்னந்தோப்புக்களில் பெண்களின் அலறலை கேட்டதாக கூறுபவர்களும் உள்ளனர்.
- சரணடைந்தவர்கள், கைது செய்யப்பட்டவர்களிற்கு நடந்த துயரம் பற்றிய புகைப்பட, வீடியோ காட்சிகள் வெளியாகியிருந்தன.


இடம்பெயர்ந்து கொண்டிருந்தவர்களிற்கு ஏற்பட்ட கதி

பெரிய ஆலயங்கள் எல்லாமே தொடர்ந்து புனரமைப்பு செய்யப்பட்டு கொண்டிருக்கிறன. விதவிதமான வர்ணம், பிரமாண்டம் என ஆலயங்களின் தோற்றமே மாறிக் கொண்டு போகிறது. ஆலயங்களின் பழைய தோற்றத்தில் கிடைக்கும் மனஅமைதி, ஆடம்பர தோற்றத்திலும் கிடைக்குமா? ஆலயங்களின் பெருஞ்செலவு புனரமைப்பு அவசியமா?

# ஒரு கேள்விதான்..!



கோகுலன்

### 'செந்தமிழ் சொல்லருவி' லலீசன்

ஆலயங்களின் அமைப்பை பொறுத்த வரையில் காவத்திற்கு காலம் மாற்றம் பெற்றுள்ளது. இவற்றின் மாற்றங்கள் இன்று நேற்று ஏற்பட்டதல்ல பல்லவர், சோழர், நாயக்கர் காலங்களில் பல்வேறு மாற்றங்களிற்கு உட்பட்டே வந்துள்ளது. சோழர் காலத்திலே கருவரைக்கு மேலே உள்ள தூபியினை மிக உயரமாக கட்டுகின்ற மரபு இருந்தது. கோயில்களின் கட்டக்கலையில் ஏற்படும் மாற்றம் தவிர்க்க முடியாதது. எங்களுக்கு இருக்கின்ற பிரச்சனை புதிய புதிய ஆலயங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. வீட்டின் வெளியே வழிபாட்டு மையங்களாக மட்டும் இருந்த இடங்கள் எல்லாம், புதிய ஆலயங்களாக கட்டப்படுவதனாலேயே பிரச்சனைகளை எதிர்கொள்கின்றோம். பூசை, சிவாச்சாரிகள் கட்டுப்பாடு, போன்ற விடயங்கள் திருச்சபை பணம் எப்படி சேர்கின்றது என்பது போன்றவற்றில் இருக்கின்றது. ஆலயங்கள்தான் எங்களது கலை, கலாச்சார, பன்பாட்டின் அடையாளமாக இருக்கின்றபடியால் அது அவசியமானதாகும். ஆலயத்தின் பெருக்கமானது சற்று முரணானது. ஆலயங்கள் இல்லாத இடங்களில் அமைப்பது தப்பில்லை. அருகே அருகே ஆலயங்களை போட்டிக்கு அமைக்கும் போது அது சமூக வரமுறைகளுக்கு முரணாக அமைவது அசௌகரியத்தை ஏற்படுத்தும்.

### கம்பவாரிதி ஜெயராஜ்

ஆலயங்கள் எமது பண்பாட்டின் சின்னங்கள். ஆகவே ஆலயச்சூழலில் வாழ்வது ஆலயத்தை புனரமைத்து வாழ்வது தவிர்க்க முடியாத ஒன்றாகவே கருதுகின்றேன். ஆதில் தவறு இருப்பதாகவும் படவில்லை. ஆனால் வெறும் ஆடம்பரங்களுக்கு ஆலயங்கள் புனரமைக்கப்படுகின்றபோது அது தவறாகின்றது. தேவைக்கேற்ப வழிபடுகின்றவர்களின் வசதிக்கேற்ப ஆலயங்களின் புனரமைப்பு இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் எங்களது செல்வச்செழிப்பை காட்டுவதற்காக மட்டும் ஆலய புனரமைப்பு செய்யப்பட்டால் உகந்ததல்ல என்பது என் கருத்து. புனரமைக்கப்பட்ட ஆலயங்கள் முன்போல் இல்லை என்பது அவரவர் மனப்பக்குவத்தை பொறுத்தது தான். அதனை முழுமையான கருத்தாக கொள்ள முடியாது. சிலர் இல்லை என்கின்ற விடயத்தை சிலபேர் ஆம் என்கின்றார்கள். எனவே அதனை முழுமையாக முடிவு சொல்ல முடியாது.

### தமிழ்மணி அகளங்கள்

ஆலயங்களிற்கு செலவழிக்கும் பணம் தேவையற்து என்று சொல்லும் மரபு நீண்ட காலமாக இருக்கின்றது. ஆனால் ஆலயங்களில் செலவழிக்கும் ஒவ்வொரு ரூபாய்களும் அங்குள்ள தொழிலாளி, கலைஞர்கள் மற்றும் மக்களிற்கே போய் சேர்கின்றது. ஆலயங்களிற்கு செல்லும்போது மன அமைதி இல்லை என்பது அவரவர் மனதைப்பொறுத்தது. பொதுவாகமனிதன் தான் இருக்கும் வீட்டை விட பெரிய அளவிலேயே கடவுளிற்கு ஆலயம் அமைக்க விரும்புகின்றான். மேலும் கோயில்களில் தமிழரின், இந்துக்களின் பாரம்பரிய கலைகளை வளர்க்கும் இடமாக விளங்குகின்றது.

### ஐ.கதிர்காமசேகரன்


ஆலயம் என்பது ஆன்மாக்கள் வசப்படுகின்ற இடம். எமது ஆலய விதிகளை கூறுகின்ற நூல் ஆகமங்கள். ஆகம விதிகளின் படி ஆலயங்கள் அமைக்கப்படும் போது பிரமாண்டமும் சேர்ந்தே அமைகின்றது. வரலாற்று கால ஆலயங்களை எடுத்துக் கொண்டால் அவை வெறும் வழிபாட்டுத் தலங்களாக மட்டும் இல்லாமல் வைத்தியசாலைகளாகவும், ஆதுலசாலைகளாகவும், வேலைவாய்ப்பு வழங்கும் இடமாகவும் இருந்துள்ளன. தற்போதுள்ள ஆலயங்கள் அவ்வாறான் பணிகளை ஆற்றுகின்றனவோ என்று சற்று சிந்தித்து பார்க்க வேண்டியுள்ளது. ஆலயத்தை மையமாக கொண்டு பாரம்பரிய கலைகள் வளர்ச்சியடைந்தன. தற்போது நவீன கலைகள் ஆக்கிரமித்துள்ளன. ஆடை அணிகலங்கள் ஆபரணங்கள் ஆண்டவன் விரும்புவதில்லை, அங்கொரு பார்வை இங்கொரு பார்வை ஆலய வழிபாடில்லை என்று பாடி வைத்து சென்றிருக்கிறார்கள். ஆலயங்கள் பிரமாண்டமாக கட்டியெழுப்பப்படும் போது குறித்த திருவிழாக்காலங்களில் பக்தர்கள் கூடுவதையும். அதன் பின்னர் ஆலயம் கவனிக்கப்படாமல் இருப்பதை பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. எனவே ஆலயங்கன் பிரமாண்டமாக எழுந்தால் மட்டும் போதாது வழிபாட்டு தலமாகவும் மக்கள் பணியாற்றும் இடமாகவும் அமைவது அவசியமாகும்.



'செந்தமிழ் சொல்லருவி' லலீசன்



கம்பவாரிதி ஜெயராஜ்



தமிழ்மணி அகளங்கள்



ஐ.கதிர்காமசேகரன்


## தீபம் வழங்கும் மாபெரும் பரிசு திட்டம்.
## தீபம் வாங்கினால் பெறுமதிமிக்க பரிசுகள் காத்திருக்கின்றன.

ஒவ்வொரு மாதமும் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும் 5 வாசகர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள்.

**விக்கி learners வழங்கும் 2500 ரூபா பெறுமதியான கட்டண கழிவினை வெல்வதற்கு அரியசந்தர்ப்பம்.**

**நீங்களும் எமது பரிசு மழையில் இணையலாம்.**

முறை 1. கூப்பனை நிரப்பி எமது முகவரிக்கு அனுப்பலாம் அல்லது நேரில் கையளிக்கலாம்.

முறை 2. கூப்பனை நிரப்பி எமது பத்திரிகை முகவர் இடம் கொடுக்கலாம்.

முறை 3. கூப்பனை நிரப்பி எமது facebook.com/deepamweekly/ பக்கத்திற்கு அனுப்பலாம்

குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படும் வாசகர்கள் பெயர்கள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் எமது பத்திரிகையில் வெளியிடப்படும்.

**Issue Number 92.**

Full Name :..............................

Address :..............................

Nic :..............................

Phone Number :..............................


வைத்தியசாலைக்கு வந்தவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பும் காட்சி

# எங்கட டாக்குத்தர்மாருக்கு பொன்சேகாதான் சரி!

ஜோதா அக்பர்

கடந்த 5ம் திகதி நாடளாவியரீதியில் ஒரு வேலை நிறுத்தம் நடந்தது. மாலபே தனியார் கல்வி நிறுவனத்திற்கு எதிராக அரச மருத்துவர்கள் மேற்கொண்டு வரும் தொடர் போராட்டங்களின் ஒரு அங்கமாக இந்த போராட்டம் நடந்தது. அரச மருத்துவர்களின் போராட்டத்துடன் மேலும் பல தொழிற்சங்கங்கள் இணைந்திருந்தன. சில ஆதரவு தெரிவித்திருந்தன.

மாலபே தனியார் மருத்துவபீடத்தை மக்கள் மயப்படுத்த வேண்டும் என்ற விசித்திரமான கோரிக்கை ஒன்றை முன்வைத்து வைத்தியர்கள் இந்த வேலை நிறுத்தத்தை நடத்தியிருந்தனர். மாலபே மருத்துவ கல்லூரியை தடை செய்ய வேண்டும் என்ற இடத்திலிருந்து, மருத்துவ கல்லூரியை மக்கள் மயப்படுத்த வேண்டும் என்ற விசித்திர இடத்திற்கு மருத்துவர்கள் வந்து சேர்ந்திருக்கிறார்கள். மாலபேயை எதற்காக மூட வேண்டும்? மாலபே பிரச்சனையை இப்படி தூக்கி வைத்திருக்கிறார்களே, அது என்ன அத்தனை முக்கியத்துவம் மிக்க பிரச்சனையா என மக்களிடம் கேள்விகள் எழத் தொடங்கியதையடுத்து, மாலபேயை மக்கள் மயப்படுத்து என ஒன்றுமேயில்லாத ஒரு விவகாரத்தை முன்னிலைப்படுத்தி வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுவிக்க, ஏனைய தொழிற்சங்கங்கள் பல வேலைநிறுத்தத்தில் கைகோர்த்தன.

வைத்தியர்களின் வேலைநிறுத்தத்தின் அன்று பல அத்தியாவசிய சேவைகள்

> **எங்கள் எல்லோரது வரிப்பணத்திலும் இலவசக்கல்வியை பெற்றவர்கள்தான் இந்த வைத்தியர்கள். ஆனால் மருத்துவத்தை தனியுரிமையாக்கி, தனியார் வர்த்தகமாக்கி விட்டனர். அவர்கள் தனியார் மருத்துவக்கல்லூரிக்கு எதிராக போராடுகிறார்களாம்.**

முடங்கியிருந்தன. குறிப்பாக மருத்துவம், போக்குவரத்தில் மக்கள் அசௌகரியம் அடைந்தனர்.

வேலைநிறுத்தத்தின் அன்று காலை யாழ்ப்பாண புகையிரத நிலையத்திற்கு சென்றவர்களிற்கு விசித்திர அனுபவம் கிடைத்தாக சொன்னார்கள். காலையில் முதலாவது புகையிரதம் கொழும்பு நோக்கி 6.10 இற்கு புறப்படுவது வழக்கம். புகையிரதம் புறப்படும் நேரமாகியும் புறப்படவில்லை. புகையிரதம் புறப்படுமா இல்லையா, புறப்படாவிட்டால் என்ன காரணத்திற்காக பணிப்புறக்கணிப்பு என்பது அங்கு நின்ற அலுவலர்கள் பலரிற்கு தெரியவில்லை. இறுதியில் 7.30 இற்கு பின்னர் புகையிரதம் புறப்பட்டது. இதற்குள், புகையிரத பயணம் நிச்சயமில்லையென அவநம்பிக்கை ஏற்படுத்தும் விதமாக சில அலுவலர்கள் பேசிக்கொண்டனர். பின்னர் வேறொரு அலுவலர்தான் விளக்கம் சொன்னார். தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடும் சங்கங்களை சேர்ந்தவர்கள் அப்படி கதைக்கிறார்கள் என.

அன்று அவசர தேவையின் நிமித்தம் புறப்பட்ட பலரிற்கு நிறைய நேர விரயம். இது ஒரு உதாரணம். வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்பால் மக்களிற்கு எவ்வளவு சிரமம் ஏற்பட்டிருக்கும்?

அத்தியாவசிய சேவைகளில் அடிக்கடி மேற்கொள்ளப்படும் வேலைநிறுத்தங்களை கட்டுப்படுத்த, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தலைமையில் ஒரு அத்தியாவசிய செயலணி உருவாக்கப்படுவது பற்றி அண்மையில் ஒரு பேச்சடிபட்டது. மக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்று தமது எதிர்ப்பை பதிவு செய்வது. இதை அடக்க முடியாதுதான். ஆனால் காரணமேயில்லாமல், ஏனைய மக்களிற்கு அசௌகரியத்தை ஏற்படுத்திக் கொண்டு, அத்தியாவசிய சேவைகளை முடக்கி, ஜனநாயக வாய்ப்புக்களை துஷ்பிரயோகம் செய்யும் நடவடிக்கைகளை அனுமதிக்க முடியாது. இந்த வேலை நிறுத்தம் இந்த வகையான ஒன்றுதான்.

மாலபே தனியார் மருத்துவ கல்லூரியில் சிக்கல் இருந்தால் அதை தட்டிக்கேட்கும் பொறுப்பு மக்களிற்குரியது. வைத்தியர்களிற்குரியதல்ல. வைத்தியர்கள் செய்யும் எதிர்ப்பிற்கு காரணம் வேறு. மருத்துவத்தை தமது தனியுரிமையாக நினைக்கிறார்கள். தனியார் வைத்தியதுறை, தமது தனியுரிமைக்கு வேட்டுவைத்துவிடும் என்ற முழுக்க முழுக்க வர்த்தகநிலைப்பட்ட சிந்தனையின் அடிப்படையில்தான் இந்த போராட்டங்களை வைத்தியர்கள் செய்கிறார்கள்.

இலங்கையில் மருத்துவம் எப்படி தனியார்மயப்பட்டு விட்டதென்பது எல்லோருக்கும் தெரியும். தமிழ் பகுதிகளில் யாழ்ப்பாணம்தான் உச்சம் தொட்டுள்ளது. யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையை சுற்றிலும் ஒரு மருத்துவ மாபியா கலாசாரம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. உங்களிற்கு நல்ல, திருப்தியான சேவை கிடைக்க வேண்டுமா? அதை தீர்மானிப்பது காசு... பணம்... துட்டு... மணிதான்!


இப்பொழுது தனியார் இரத்த பரிசோதனையை அரசாங்கம் தடை செய்துள்ளது. நமது வைத்தியர்கள் எவ்வளவு நல்ல மனத்துடன் மக்கள் நலப்பணி ஆற்றினார்கள் என்பதை பாருங்கள். அரசவைத்தியசாலைகளில் இரத்த பரிசோதனை வசதியிருந்தும், நமது வைத்தியர்கள் தனியார் இரத்த பரிசோதனைக்குதான் துண்டெழுதிக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அரசே தலையிட்டதால்தான் இதை தடுக்க முடிந்தது. அரசவைத்தியசாலைகளிற்கு முன்பாக உள்ள தனியார் நிறுவனங்களில் இரத்த பரிசோதனைக்கு அனுப்பப்படுபவர்களின் எண்ணிக்கைக்கு தகுந்த "சம்திங்" வைத்தியர்களிற்கு அனுப்பப்படும் மருத்துவத்தின் கறுப்பு பக்கங்களை மக்கள் அறிந்திருக்கநியாயம் இல்லை. வடக்கு கிழக்கில் உள்ள எல்லா பெரிய வைத்தியசாலைகளிலும் ஒரு இயலப்புண்டு. சில பிரச்சனைகளிற்கு அவசரமாக வைத்தியர்களை சந்திக்க முடியாது. ஆனால் தனியார் கிளினிக்கில் உடனடியாக சந்திக்கலாம். (கேட்டால் கடமை நேரத்திற்கு அப்பால்தான் அதை செய்கிறார்களாம் என்பார்கள்) அரச வைத்தியசாலையின் இந்த சிக்கலை குறிப்பிட்டால், ஆளணி பற்றாக்குறை என்பார்கள்.

எங்கள் எல்லோரது வரிப்பணத்திலும் இலவசக்கல்வியை பெற்றவர்கள்தான் இந்த வைத்தியர்கள். ஆனால் மருத்துவத்தை தனியுரிமையாக்கி, தனியார் வர்த்தகமாக்கி விட்டனர். அவர்கள் தனியார் மருத்துவக்கல்லூரிக்கு எதிராக போராடுகிறார்களாம்.

இப்படியான வேடிக்கை நிகழ்வுகளை தடுக்க அரசு இரும்புகரத்தை பாவிக்க வேண்டும். ஏனெனில், மாலபே தனியார் கல்வி நிறுவனம் அமைத்து, ஆரம்பிக்கப்பட்டது மகிந்தவின் ஆட்சிக்காலத்தில். அப்போது வாய்திறக்காத "சமூக அக்கறையுள்ள வைத்தியர்கள்" மைத்திரியின் ஆட்சியில்தான் போராடுகிறார்கள்.

இதில் கவனிக்க வேண்டிய இன்னொரு விடயம் உள்ளது. அண்மைக்காலமாக மகிந்தவின் மீள்எழுச்சி கிரமமாக நடந்து வருகிறது. வரைமுறையில்லாமல் மகிந்த அண்ட் கோ வாரிச்சுருட்டிய பணம், ஒருமுறையல்ல பத்துமுறை ஆட்சியை பிடிக்க வாரியிறைக்க போதும். அண்மைக்காலமாக மகிந்தவின் அரச எதிர்ப்பிற்கு சமாந்தரமாக சில தொழிற்சங்கங்கள் அரசை சங்கடப்படுத்த முயல்வதற்கு "கனமான" பின்னணி உள்ளது. ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வாரமும் ஆர்ப்பாட்டங்களும், பணிப்புறக்கணிப்பும் செய்யும் அளவில் நாட்டில் சீர்கெட்ட நிர்வாகம் இருக்கிறதென நம்ப முடியாது.

மகிந்தவின் மீள் எழுச்சியை தடுப்பதற்கு விரைவான, சீரான நிர்வாக செயற்திட்டம் அரசிற்கு அவசியம். தேசிய அரசிற்குள்ளான பிய்ச்சல் பிடுங்கலை தவிர்த்து, திட்டமிட்ட அரசியல், பொருளாதார முன்னகர்வு அவசியம். இதன் ஒரு அங்கமாக மக்களின் அத்தியாவசிய செயற்பாடுகள் பாதிக்கப்படாதவாறு கவனித்துக்கொள்ளும் ஒருமுறையை அரசு ஏற்படுத்த வேண்டும். தற்போதைய நிலையில பொன்சேகா அதற்கு பொறுப்பேற்பதில் ஆட்சேபணை இருக்க முடியாது. ஏனெனில், பொறுப்பாக செயற்பட வேண்டியவர்கள் அதை செய்யாதுவிடத்து, வேறுவழிகளின் மூலம்தான் மக்களிற்கு ஏற்படும் அசௌகரியங்களை தவிர்க்கலாம்.




நமது வைத்தியர்களிடம் மக்கள் நல சிந்தனைகிடையாதுஎன்பதன் வெளிப்பாடு தான் அரசாங்கம் ஏற்கனவே வெளியிட்ட, தனியாரிடம் இரத்த பரிசோதனையை தடுக்கும் அறிவித்தல். வைத்தியர்களின் பொறுப்புணர்வற்ற தன்மையிலிருந்து மக்களை காப்பாற்ற, பணிப்பகிஸ்கரிப்பை தடை செய்து இன்னொரு நடவடிக்கை அவசியம்.

இதன் அர்த்தம் மாலபே தனியார் மருத்துவ கல்லூரியை கண்ணை மூடிக் கொண்டு ஆதரிப்பதல்ல. எல்லாவற்றிலும் தலையானது இலவசக்கல்வி பாதுகாக்கப்பட வேண்டியது. பெரும்பான்மையான மாணவர்களிற்கு அதுதான் வரப்பிரசாதம். இலவசக்கல்வி வழி மருத்துவர் உள்ளிட்ட பொறுப்பான பணிகளிற்கு வருபவர்களிடம் பொறுப்புணர்வை ஏற்படுத்தும் வழிகளையும் கண்டறிய வேண்டும். தனியார் மருத்துவ கல்லூரிகளை பற்றி பேச, மருத்துவத்தை தனியுரிமையாக்குபவர்களிற்கு தகுதி கிடையாதென்பதே நமது வாதம்.

எல்லாதுறைகளிலும் தனியாரை அனுமதித்துவிட்டு, மருத்துவத்தில் மட்டும் அதை கட்டுப்படுத்துவதில் புத்திசாலித்தனமும் இல்லை, நேர்மையும் இல்லை. தனியார் மருத்துவதுறையை ஒழுங்கு செய்து, அதை தகுதியானதாக்க வழிகாட்டுவதே அரசின் கடமையே தவிர, தடை செய்வதல்ல.




# தமிழினி

## ஒருமுனை உரையாடல்

சாந்தி

வெலிக்கடைச்சிறையில் இருந்து வவுனியா கொண்டு செல்லப்படுவதற்கு முதல்நாள் மதியம் தங்கை யோகா தொடர்பு கொண்டாள்.

“அக்கா நாளைக்கு வவுனியா போகப் போறா. உங்களை ஒருக்கா கதைக்கச் சொல்லட்டாம்”

அன்று இரவு தொடர்பு கொண்டேன். “நாளைக்கு நான் வவுனியா போயிடுவன். அங்கையிருந்து கதைக்க கிடைக்குமோ தெரியேல்ல. அப்பிடிக் கிடைக்காட்டில் வெளியில வந்த பிறகுதான் கதைக்கலாம். அம்மவோடையும் யோகாவோடையும் தொடர்போடை இரு. ஏதுமெண்டா அவை சொல்லுவினம்”.

அன்று நீண்டநேரம் கதைத்தோம். விடிய 4மணிக்கு உன்னிடமிருந்து விடைபெற்ற போது, “எனக்கொரு ஒளிவட்டத்தைக் கண்டுபிடி” சொல்லிக்கொண்டு சிரிப்போடு விடைபெற்றாய்.

*26.06.2012.* வவுனியாவிற்கு புனர்வாழ்வுக்காக அனுப்பப்பட்டாய்.

*13.07.2012.* பிரித்தானியா போயிருந்த போது தம்பி அனுராஜ்ஜிடம் உன்னைப் பற்றி கதைத்திருந்தேன். உனது நிலை பற்றிச் சொன்னேன். நீ திருமணம் செய்ய விரும்புவதையும் தெரிவித்தேன். ஸ்பொன்சர் செய்யக்கூடியவர்கள் இருந்தால் பணம் கொடுத்து உன்னை வெளியில் எடுப்போம் எனவும் கேட்டிருந்தேன்.

அன்று முதல் அனுராஜ் என்னோடு சேர்ந்து உனக்கு திருமணம் செய்வது அல்லது பணம் கொடுத்து யாரையாவது பிடித்து ஸ்போன்சர் செய்ய ஏற்பாடு செய்வதில் ஆட்களைத் தேடினான்.

பணத்தைத் தயார் பண்ணி வைப்பது, நீ விடுதலையானதும் உன்னை வெளிநாடு எடுப்பது என்ற எங்கள் முயற்சியில் பலரை நாடினோம். தேசியம், தாயகம், சுதந்திரம் என பேசிய பலர் தந்த பதில்களில் உனக்காக ஒருசதத்தைத்தானும் தயார் செய்ய முடியவில்லை.

அம்மா உனக்கு திருமணம் செய்து வைக்கவே விரும்பினார்

“நானும் போயிட்டா அக்கா தனிச்சுப் போடுவளம்மா. அவளுக்கு ஒருகலியாணம் பேசு பிள்ளை”.

வயது, கடந்தகாலம் பற்றி கேட்கும் யாரும் உன்னை மணமுடிக்க முன்வரவில்லை. திருமணம் பேசும் தரகர்கள் சிலரை அணுகியபோது, “இயக்கத்தில இருந்தவையெண்டா தெரியும்தானே. நீங்கள் வேறையாரும் இருந்தா சொல்லுங்கோ” என ஒரு தரகர் உனது படங்களைத் திருப்பியனுப்பினார்.

உனக்கான திருமணம் என்பது அவ்வளவு இலகுவில் நடக்கும் என்பது நம்பிக்கையற்றுப் போனது. உன்னை ஏதாவது மாற்றுவழி மூலம் வெளிநாடு எடுக்கும் முயற்சி மட்டுமே சரியென்று தோன்றியது.

முகநூல் மூலம் அறிமுகான ஜெயன் தேவாவோடு அடிக்கடி சட் பண்ணிக் கொள்வேன். எனது எழுத்துக்களின் வாசகர் ஜெயன்தேவா. நேசக்கரம் சமூகப்பணிகளில் தனது ஆதரவையும் வழங்கியவர். பிரித்தானியா போனபோது அனுராஜ்யும் நானும் ஜேயன்தேவாவை நேரில் சந்தித்தோம். ஏற்கனவே அனுராஜ் ஜெயன்தேவா அவர்களுடன் அறிமுகமாகியிருந்தான்.

உனது வயதை தெரிவித்து திருமணம் செய்ய யாராவது முன்வந்தால் அந்த முயற்சியை மேற்கொள்ளலாம் என ஜெயன்தேவாவிடம் தெரிவித்தோம். அவர் உதவ முன்வந்த போதும், அது தமிழினிக்குத்தான் என்பதை அவரிடம் தெரிவிக்கவில்லை. எங்களோடு சேர்ந்து உனக்கான வழியொன்றை அமைக்க அவரும் துணையாக நின்றார்.

நீ விடுதலையானதும் உன்னை ஸ்பொன்சர் செய்து வெளிநாடு எடுப்பது என்பதைத்தான் அப்போதைய முடிவாக எடுத்தோம். பிரித்தானியாவிலிருந்து யேர்மனி திரும்பிய பின்னர் அம்மாவுடன் பேசியபோது ஜெயன்தேவா பற்றி அம்மாவுக்குச் சொன்னேன்.

“ஏன் பிள்ளை.. அவர் அக்காவை கலியாணம் கட்டுவரே?” இது அம்மா.

“ஏன்னம்மா உங்களுக்கு விசரே. அவருக்கும் அக்காவுக்கும் 13வயது கூட. அதெல்லாம் சரிவராது. அவவை வெளிநாடு எடுக்கிறதுக்கான உதவிதான் அவர் செய்யலாம்” தொடர்ந்த என்னை அம்மா மறித்தா.

“பிள்ளை எனக்கும் அப்பாவுக்கும் 17வயது வித்தியாசம். நாங்களும் நல்லா வாழ்ந்தனாங்கள். வயதொண்டும் பிரச்சனையில்லை. மனம் ஒத்துப்போனால் சரி”.

அம்மா உனக்கொரு திருமணம் செய்ய வேண்டுமென்றதில் பிடிவாதமாயிருந்தார். தாயின் ஆசையது.

வவுனியா புனர்வாழ்வு முகாமில் தொலைபேசும் வாய்ப்பு வந்தது. சனி , ஞாயிறுகளில் உன்னோடு தொலைபேசத் தொடங்கினேன். அந்தச் சில நிமிடங்களில் உன் குரலைக்கேட்டு நலவிசாரிப்போடு பேசவேண்டிய விடயங்களை அவசரமாக பேசி விடைபெறுவேன். உன்னை நேரில் சந்திக்கும் வாய்ப்பு அம்மாவுக்கு இருந்தது. அப்படியொரு சந்திப்புக்கு வந்த போது அம்மா ஜெயன்தேவா பற்றி உனக்குச் சொல்லியிருந்தா.

நீ அவரைத் திருமணம் செய்ய விரும்புவதாகச் சொல்லியனுப்பியிருந்தாய். வெளிநாடு வருவதற்காக பொய்யான திருமணம் ஒன்றைச் செய்வதில் உனக்கு உடன்பாடு இல்லையென்பதையும் சொல்லியிருந்தாய்.

ஏற்கனவே விவாகரத்து பெற்ற ஜெயன் தேவாவிற்கும் உனக்குமான வயது வித்தியாசம் , நீ கடந்து வந்த அரசியலிற்கு முரணான அரசியல் கொள்கைகளோடு உள்ள ஒருவருடன் உனக்கு ஒத்துவருமா? அப்படி அவரை நீ திருமணம் செய்தால் உன்னைத் துரோகியாக்கியவர்கள் எப்படி உன்னை தூற்றுவார்கள்? இதுவே எனது நிம்மதியைத் தின்று கொண்டிருந்தது.

தனக்கும் உனக்குமான வயது வித்தியாசம், தனது கடந்தகால வாழ்வின் குறைகள் உன்னை பாதிக்கும் என்பதை ஜெயன்தேவாவும் தெரிவித்தார். தனது கடந்தகால வாழ்வு பற்றி எதையும் மறைக்காமல் தெரிவித்த மனிதரை நீ நேசிக்கத் தொடங்கினாய்.

ஒரு சனிக்கிழமை உன்னை தொலைபேசியில் அழைத்தேன். ஜெயன்தேவாவை திருமணம் செய்து கொள்ள விரும்புவதை வெளிப்படையாய் சொன்னாய்.

உங்கள் இருவருக்குமான வயது வேறுபாடு, இயல்புகளைப்பற்றிச் சொன்ன போதும் நீ எதற்கும் உடன்படவேயில்லை. இந்தத்திருமணத்தில் உடன்பட மறுத்த எனக்கு நீ சொன்ன காரணங்களுக்கும் கேட்ட கேள்விகளுக்கும் பதில் இல்லாது போனது.


“வாழுறது கொஞ்சக்காலம். அதில வயசு வேறுபாடு, அரசியல் பாத்து என்னத்தையம்மா சாதிச்சம்? இருக்கிறமட்டும் நிம்மதியா வாழ்ந்திட்டு சாவம்” இதுதான் நீ உனது இறுதி முடிவு.

ஜெயன்தேவாவோடு பேச விரும்பினாய். அம்மாவோடு முதலில் பேசிய ஜெயன் தேவா அம்மாவுக்கு தன்னைப்பற்றி கூறினார். அம்மா அவரை உனக்கான வாழ்க்கைத்துணையாக அமைப்பதையே விரும்பினா.

நீயும் ஜெயன்தேவாவும் தொலைபேசத் தொடங்கினீர்கள். கடிதங்கள் எழுதினீர்கள். உனது மாற்றங்கள் பற்றி அம்மா சொல்வதை நானும் யோகாவும் ஆச்சரியமாய் கதைப்போம். உன்னைப்பார்க்க வந்து திரும்பும் ஒவ்வொரு முறையும் உனக்கான ஒளிவட்டம் பற்றி நீ சொல்லும் யாவையும் அம்மா அப்படியே வந்து சொல்லுவா.

விதி யாரையும் தன் கணக்கிலிருந்து விட்டுவைக்காது என்பதற்கு உனது வாழ்வு காலச்சான்றாகியது. எதிரெதிர் குணங்களோடான ஒருவரோடு சமரசம் செய்து வாழ்வதற்கு நீ தயாராகினாய். நீ ஜெயன்தேவாவைக் காதலித்தாய். உனது இயல்புகளோடும் தன்னை மாற்றி உன்னோடு வாழ ஜெயன்தேவாவும் தயாராகினார். **(தொடரும்)**






# எல்லாம் முடிய என்னைப்பார்த்து 'இப்ப சந்தோசமா' என்றார் மகிந்த!

## சந்திரகுமார் எழுதுகிறார்

மக்கள் பிரதிநிதிகள், பொதுவாழ்வில் உள்ளவர்களின் அறியப்படாத பக்கங்களை புரட்டும் பகுதி இது. வாழ்வில் நடந்த, அடிக்கடி நினைக்கும், மெய்சிலிர்க்கும் நிகழ்வுகளை இந்த பகுதியில் ஒவ்வொரு வாரமும் உங்களுடன் பகிர்ந்து கொள்ளவுள்ளார்கள் அவர்கள். மனதின் மூலைக்குள் மறைத்து வைத்திருந்த சம்பவங்களை முதன்முறையாக அவர்கள் அச்சில் பேசவுள்ளனர். நீங்கள் இதுவரை கேட்காத கதைகள் இவை.

இதனால், அரசியல் தீர்வைப் பேசாமல், அபிவிருத்தி மாயையை உருவாக்கி அரசை நியாயப்படுத்துவதாக எதிர்தரப்பு என் மீது சேறடிக்க முயன்றது. அது பொய். அதற்கு ஒரு உதாரணம், 13ம் திருத்தத்தின் சில அதிகாரங்களை அகற்ற மகிந்தவின் ஆதரவுடன் பசில் உள்ளிட்ட சில மூத்த அமைச்சர்கள் முயன்றார்கள். இதற்கெதிராக எம்.பிக்களிடம் கையெழுத்து வாங்கினேன் இந்த முயற்சியில் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் பங்குண்டு. பெரும்பாலானவர்கள் கையெழுத்து வைத்தனர். சிறுபான்மையின பிரதிநிதிகளில் ரிசாட் பதியுதீன் வைக்கவில்லை. அவரது கட்சியைச் சேர்ந்த ஹூனைஸ் பாரூக் வைத்தார். பின்னர் என்னைத் தேடிவந்து, "ரிசாட் பேசுகிறார்" எனக் கூறி, கையெழுத்தை அழித்துவிட்டு சென்றார். பெரும்பாலான எம்.பிக்களின் கையெழுத்தைக் கொடுத்ததால், அந்த முயற்சியிலிருந்து மகிந்த பின்வாங்கினார்.

இந்த விவகாரத்தைப் பேச ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் கட்சித் தலைவர்களை மகிந்த அழைத்திருந்தார். டக்ளஸ் தேவானந்தாவுடன் நானும் சென்றிருந்தேன். விமல் வீரவன்சவும், சம்பிக்க ரணவக்கவும் 13 வது திருத்தத்திற்கு எதிராக கடுமையாக பேசினார்கள். அதில் கைவைக்ககூடாதென நாங்கள் வாதிட்டோம். வாசுதேவ, டியூ குணசேகர உள்ளிட்ட இடதுசாரிகளும் எமக்கு ஆதரவாகப் பேசினார்கள். நிலைமை சிக்கலாகுவதை அவதானித்த மகிந்த, இந்த விடயத்தை தற்போது கைவிடுவோம் என்றார். இதைச் சொல்லிவிட்டு, என்னைப்பார்த்து 'kilinochchi man. you now happy?' எனக் கேட்டார்.

இதற்கு முதல்நாள் இரவு பசிலின் அலுவலகத்தில் ஒரு கலந்துரையாடல் நடந்தது. எல்லோருடனும் பேசி சமாளிக்கும்படி பசிலுக்கு மகிந்ததான் ஆலோசனை சொல்லியிருந்தார். நிமல் சிறிபாலடி சில்வா மற்றும் சிறுபான்மை இனங்களின் கட்சிகளைச் சேர்ந்த சிவலிங்கம், பஸீர் சேகுதாவுத் உள்ளிட்ட பெரும்பாலான முக்கியஸ்தர்கள் வந்திருந்தார்கள். 13வது திருத்தத்தின் அதிகாரங்களை குறைப்பதற்கு எதிராக நான் மிகக்கடுமையாகப் பேசினேன். அது மாகாணசபை தேர்தல் நடக்கவிருந்த சமயம்.

"இதை நீங்கள் செய்தால் நாங்கள் தோற்போம். எங்களை தோற்கடிக்க முயல்கிறீர்கள். நாங்கள் அதிகாரம் தேவையென கேட்கும் நேரத்தில், 13 பிளஸ் பற்றி ஜனாதிபதி பேசிவிட்டு, 13 மைனஸ்க்கு அலுவல் பார்க்கிறீர்கள்" என்றேன். பசிலுக்கு முன்னால் மற்றவர்கள் பேசத் தயங்கிக்கொண்டிருக்க, நான் கடுமையாகப் பேசினேன். பசிலுக்குக் கடும் கோபம். "நீ ரேன்அவுட் செய்து விட்டாய். இனி நான் செய்ய ஒன்றுமில்லை. பிரசிடன்றிடமே விட்டுவிடுகிறேன்" என்றுவிட்டு போய் விட்டார். இதை மகிந்தவிடம் பசில் சொல்லியிருக்க வேண்டும். அதனால்தான் கூட்டத்தில் மகிந்த அப்படிச் சொன்னார். அவர் அப்படிச் சொல்ல நான் சிரித்தேன். மகிந்த பதிலுக்கு 'I know who are the peoples arround with you. I have lot of report' என்றார். 'sir.. KP also with you' என்றேன். பக்கத்திலிருந்த வாசுதேவ என் தொடையில் கிள்ளி, "பிரசிடன்றுடன் இப்படியா கதைப்பது" எனக் குசுகுசுத்தார்.


'நாமல் ராஜபக்ச வன்னிக்கு வரும்போது யாருடன் வேலை செய்கிறார்? முன்னாள் புலிகளுடன்தான் வேலை செய்கிறார். இந்தச் சமூகத்தில் இருந்துதான் புலிகள் உருவானார்கள். அவர்களை அரசுவிடுதலை செய்துவிட்டது. இனி அவர்களும் சமூகத்தின் அங்கம். அவர்களைத் தவிர்க்கக் கூடாது" எனப் புரியவைத்தேன்.

சில காலம் தேசிய கீதம் தொடர்பான மொழிப்பிரச்சினை இருந்தது. நான் கலந்து கொள்ளும் நிகழ்வுகளில் தமிழில் தேசியகீதம் ஒலிக்க வசதியாக, அதை ஒலிநாடாவாக வைத்திருந்தேன். நிகழ்விற்கு கொண்டு செல்வோம். ஒருமுறை ஜெயபுரத்தில் ஒரு நிகழ்வு நடந்தது. நான் கொடுத்த ஒலிநாடாவை வைத்துவிட்டு, இராணுவத்தினர் சிங்களத்தில் தேசியகீதம் ஒலிக்கவிட்டனர். உடனே அதை நிறுத்த செய்து, தமிழில் ஒலிக்கவிட்டேன். இப்படியான நிகழ்வுகளால் கோத்தபாயவிற்கு என்னில் கோபமிருந்தது.

பரந்தன் சிவபுரம், தருமபுரம் உழவனூர், நாதன் திட்டம் போன்ற இடங்களில் உள்ள மத்தியவகுப்புத்திட்டக் காணிகளை அங்கே குடியிருந்த மக்களுக்கு வழங்கும் பணிகளை மேற்கொண்டு கொண்டிருந்தோம். 40 வருடத்துக்கு முன்பு மத்தியவகுப்புத்திட்டத்தில் இந்தக் காணியை அரசாங்கத்திடம் இருந்து பெற்றவர்கள், யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்து வெளிநாடு சென்று விட்டனர். பலர் இன்று உயிருடனேயே இல்லை. ஒன்றிரண்டு பேர் மட்டும் இங்கே இருந்தனர். ஆகவே 30 ஆண்டுக்கு மேலாக பராமரிப்பில்லாமல் இருந்த காணிகளில் குடியேறி வசித்து வந்த காணியற்ற மக்களுக்கு அந்தக் காணிகளை வழங்க வேண்டியிருந்தது. அப்போது நீதியமைச்சராக இருந்த றவுப் ஹக்கீம் ஆட்சியுரிமைச் சட்டத்தை நிறைவேற்றுவற்கான பிரேரணையை 2014 ஓகஸ்ற் மாதத்தில் பாராளுமன்றத்தில் கொண்டு வந்தார். கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்களின் காணிகளை மீளப் பெற்றுக் கொள்வதற்கு வசதியாக இந்தச் சட்டமூலத்தை உருவாக்குவதற்கு ஹக்கீம் முயன்றார். இதனைப் புரிந்து கொள்ளாத தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் இதனை ஹக்கீமுடன் சேர்ந்து ஆதரித்தனர். நான் எதிர்த்தேன். இதனால் எனக்கும் சுமந்திரனுக்கும் இடையில் கடுமையான வாதப்பிரதிவாதங்கள் நடந்தன. அன்றைய ஆட்சி கலைக்கப்படும்வரை அந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு நான் விடவில்லை.

இதற்கிடையில் ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்களின் காணிப்பிரச்சினைக்குத்தீர்வு கண்டு விட்டோம். 2016 ஏப்ரலில் புதிய ஆட்சி வந்தபிறகு இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதனால், வன்னியின் ஏனைய மாவட்டங்களில் உள்ள மூவாயிரத்துக்கும் அதிகமான மத்தியவகுப்புத்திட்டக் காணிகளில் குடியிருக்கும் மக்களின் பிரச்சினை தீர்க்கப்படாமலே இருக்கிறது.

2015 இல் நான் புதிய அரசியல் நிலைப்பாட்டுக்கு செல்ல வேண்டி ஏற்பட்டது. புதிதாக உருவாகியிருக்கும் அரசியற் சூழலும் மக்களுடைய அரசியல் தேவையும் அவர்களுடைய விருப்பமும் என்னை மாற்றியமைத்தன. முன்பு நான் ஈ.பி.டி.பி அமைப்பில் இருந்தாலும், எனது செயற்பாடு வித்தியாசமானதாக இருந்ததை அறிவீர்கள். எனது செயற்பாடுகளில் கட்சிக்குள்ளும் நிறைய எதிர்ப்பு இருந்தது. மக்கள் நலன்சார்ந்த அடிப்படையில் செயற்பட்டேன். இதனால் மக்கள் என்னை கட்சியின் அடையாளத்தோடு பார்க்கவில்லை. இருந்தாலும் தேர்தல் சமயத்தில் நான் அந்த அமைப்பின் சின்னத்துடன் மக்கள் மத்தியில் செல்ல, அதை மக்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மக்களின்



அபிப்பிராயத்திற்கு மதிப்பளித்து, ஈ.பி.டி.பியிலிருந்து வெளியேறினேன்.

இப்பொழுது புதியதொரு சூழலில் கிளிநொச்சியிலும் யாழ்ப்பாண மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேசங்களிலும் மக்கள் பணியாற்றி வருகிறேன். புதிதாக சமத்துவம், சமூகநீதிக்கான மக்கள் அமைப்பை உருவாக்கியுள்ளேன். கிளிநொச்சி முழுவதும் மக்களை சந்தித்து வருகிறேன். யாழ்ப்பாணத்திலும் சந்திப்புகளும் வேலைத்திட்டங்களும் நடக்கின்றன. இந்த மக்களிற்காகத்தான் இளம் வயதில் போராளியானோம். இப்போதும் அவர்களிற்காக பணி செய்து கொண்டிருக்கிறேன் என்பதே பெரிய திருப்திதான். என்னுடைய கனவு, தமிழ் பேசும் சமூக மக்கள் விடுதலை பெற்று, அனைத்து உரிமையோடும் மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ வேண்டும் என்பதே. நாம் நேர்மையாக போராளிகளின் வாழ்வைப்போல ஒன்றிணைந்து செயற்பட்டால் இந்தக் கனவை நிஜமாக்கலாம்.


# ஹைபிரிட் TVS மோட்டார்சைக்கிள் விரைவில்!


ஹைபிரிட் இருசக்கர வாகனங்களுக்கான 'உந்துதல் சக்தி' அமைப்பிற்கான காப்புரிமையை தமிழகத்தை சேர்ந்த டிவிஎஸ் நிறுவனம் பெற்றுள்ளது.

டீசல், பெட்ரோலை பெறுவதில் எதிர்காலத்தில் ஏற்படும் சிக்கல், எரிபொருட்களால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு என்பனவற்றிற்கு தீர்வாக தற்போது வளர்ந்து வருகிறதுது ஹைபிரிட் மற்றும் எலெக்ட்ரிக் தொழில்நுட்பம். முன்னணி நிறுவனங்கள் பலவும் மாறி வரும் ஹைபிரிட் தொழில்நுட்பத்திற்கு தங்களை மாற்றி வருகின்றன. இதில் உள்ள ஒரே குறை அவற்றின் விலை மட்டுமே. இந்த வகை வாகனங்கள் மின் ஆற்றலை பற்றரிகளில் சேமித்து வைத்துக் கொண்டு அதன் மூலம் செயல்படுவதால் அவற்றிற்கான விலை சற்று கூடுதலாகவே உள்ளது.

இந்நிலையில், அடுத்த தலைமுறை தொழில்நுட்பமான இந்த ஹைபிரிட் தொழில்நுட்பத்தில் இயங்கும் இருசக்கர வாகனங்களை தயாரிக்கும் பணியை டிவிஎஸ் நிறுவனம் 10 ஆண்டுகளுக்கு முன்னரே ஆரம்பித்துவிட்டது. 2012ஆம் ஆண்டில் நடந்த ஓட்டோமொபைல் கண்காட்சியில் ஹைபிரிட் கென்செப்ட் ஸ்கூட்டரான 'க்யூப்'ஐ அந்நிறுவனம் காட்சியப்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. கார்களில் ஏற்கெனவே அறிமுகமாகிவிட்ட ஹைபிரிட் தொழில்நுட்பத்தை இருசக்கர வாகனங்களில் புகுத்துவது சற்று சிரமமானது என்று கூறப்படுகிறது. தற்போது இருசக்கர வாகனங்களானது இண்டர்னல் கம்பஸ்ஷன் இஞ்சின் கொண்டு இயங்குகிறது. இது புகை மாசை ஏற்படுத்துகிறது. ஹைபிரிட் இருசக்கர வாகனத்தில் இண்டர்னல் கம்பஸ்ஷன் இஞ்சினுடன், எலக்ட்ரிக் மோட்டார் ஒன்று இணைக்கப்பட்டிருக்கும்.

இண்டர்னல் கம்பஸ்ஷன் இஞ்சின் பிரதான உந்து சக்தியை இருசக்கர வாகனத்திற்கு அளிக்கும் நிலையில், எலக்ட்ரிக் மோட்டார் அதற்கு துணை புரியும். கியர்கள் மூலம் இணைப்பு பெற்றிருக்கும் இஞ்சின் எலக்ட்ரிக் மோட்டார் இயங்கும் போது வீணாக இயங்குவதால், ஆற்றல் இழப்பு ஏற்படும், இதுவே ஹைபிரிட் தொழில்நுட்பத்தை இருசக்கர வாகனங்களில் பயன்படுத்தும் போது ஏற்படும் சவால் ஆகும். இந்த சவாலை டிவிஎஸ் நிறுவனம் வெற்றிகரமாக கடந்து விட்டதாக தெரிகிறது. இதனால் விரைவில் ஹைபிரிட் இருசக்கர வாகனங்களை இந்தியா, இலங்கையில் அறிமுகப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.






# ஸ்மார்ட்போன் பற்றரியை பாதுகாக்க இதை செய்யுங்கள்!

ஸ்மார்ட்போன் பயன்படுத்தும் அனைவருக்கும் இருக்கும் ஒரு முக்கிய பிரச்சனை அடிக்கடி பற்றரி சார்ஜ் இல்லாமல் போவது. என்னதான் பவர்பாங்க் வசதி இருந்தாலும் ஸ்மார்ட்போன்களை சரியான வகையில் உபயோகித்தால் அதன் பற்றரியை சேமிக்கலாம்.

ஸ்மார்ட்போனின் பற்றரியின் வாழ்நாள் காலம் பற்றரியின் தவறோ அல்லது ஸ்மார்ட்போனில் உள்ள ஹார்ட்வெயாரின் தவறாகவோ மட்டும் இருப்பதில்லை. நாம் பயன்படுத்தும் விதத்தை பொருத்தும் பற்றரிடவுன் ஆவது உண்டு.

ஸ்மார்ட்போனின் பற்றரியின் அதிகம் சாப்பிடுவது அதில் உள்ள பிரைட்னெஸ் தான். எனவே பிரைட்னெஸ்ஐ எப்போது அதிகமாக வைத்திருப்பதை தவிர்க்க வேண்டும். அதிக பிரைட்னெஸ் பற்றரியியை காலியாக்குவது மட்டுமின்றி கண்களுக்கும் கெடுதல் என்பது குறிப்பிடத்தக்கது. பிரைட்னெஸ் செட்டிங்ஸ் சென்று குறைந்த அளவு பிரைட்னெஸ் அல்லது ஓட்டோ என்ற ஒப்சனை பயன்படுத்தவும். அதேபோல் ஸ்மார்ட்போனை பயன்படுத்தி முடித்தவுடன் ஸ்க்ரீன் ஓப் செய்யும் நேரத்தை குறைவாக வைத்திருங்கள். அப்போதுதான் ஸ்க்ரீனை நீங்கள் மனுவலாக ஓப் செய்ய மறந்தாலும் உடனே ஓட்டோமெட்டிக்காக ஓப் ஆகி பற்றரியை சேமித்து கொடுக்கும்.

வைஃபையை அதிகம் பயன்படுத்துவதால் பற்றரியும் அதிகம் காலியாகும். வைஃபை நெட்வொர்க் இல்லாத போதும், இண்டர்நெட்டை பயன்படுத்தாத போதும், வைஃபை நெட்வொர்க்கை ஓப் செய்து வையுங்கள், வைபை ஒன் நிலையில் இருந்தால் நெட்வொர்க் இல்லாத இடங்களில் அது தானாகவே நெட்வொர்க்கை சேர்ச் செய்யும். எனவே அதன் மூலம் பற்றரி அதிகம் காலியாவதற்கு வாய்ப்பு உண்டு.

நீங்கள் பயன்படுத்திய அப்ஸ்கள் அனைத்தும் பயன்படுத்தி முடிந்த பின்னரும் பக்ரவுண்டில் இயங்கி கொண்டே இருக்கும். அதை உடனே செட்டிங்ஸ் மெனு சென்று பக்ரவுண்டை நீக்கிவிட வேண்டும். இல்லாவிட்டால் பக்ரவுண்டில் இயங்கி கொண்டிருக்கும் பல அப்ஸ்கள் பற்றரியின் திறனை பயன்படுத்தி பற்றரியின் சார்ஜ் திடீரென குறைந்துவிடும்.


கூகுள் ப்ளே ஸ்டோரில் ஏராளமாக கொட்டி கிடக்கும் பற்றரி மேனேஜ்மெண்ட் அப்ஸ்களை உபயோகப்படுத்தினால் நீங்கள் பயன்படுத்தும் ஆப்ஸ்கள் அதன் வேலை முடிந்த பின்னர் தானாகவே அதிக பயன்பாட்டை தடுத்து உங்கள் பற்றரியை சேமிக்க உதவும்.

ஸ்மார்ட்போனில் பற்றரி குறைவதற்கு இன்னொரு முக்கிய காரணம் அப்ஸ்கள் ஓட்டோமெட்டிக்காக ஒத்திசை செய்வது தான். இதனை தவிர்க்க ஓட்டோமெட்டிக் பக்கப்ஐ எனேபிள் செய்து வைக்கவும்.

ஸ்மார்ட்போனில் அவ்வபோது சொப்ட்வெயார் அப்டேட் செய்யும்படி நோட்டிபிகேஷன் வருவதை பார்த்திருப்பீர்கள். அவ்வாறு நோட்டிபிகேசன் வந்தவுடன் உடனே அப்டேட் செய்ய வேண்டும். அவ்வாறு அப்டேட் செய்யாமல் பழைய வெர்ஷனை பயன்படுத்தினால் பற்றரிக்கு மட்டுமின்றி போனுக்கும் வாழ்நாள் குறைவு என்பதை மனதில் வைத்து கொள்ள வேண்டும்.

# லைக் செய்யுமுன் இதை படியுங்கள்!

பேஸ்புக்கில் இருப்பதே மற்றவர்களிற்கு லைக் அடிக்கத்தான் என்ற ரகமா நீங்கள்?. ஒரு தவறை செய்து கொண்டிருக்கிறீர்கள். லைக் பண்ணுவதில் அதுவும் பெண்கள் இடும் பூ, பூனைக்குட்டி வகையறாக்களிற்கு லைக் பண்ணுவதால் என்னவென யோசிக்கிறீர்களா?. இதை படியுங்கள்.




பேஸ்புக்கில் நாம் பதிவு செய்யும் லைக்குகள், நம்மையும் நம் விருப்பங்களையும் காட்டிக் கொடுத்து, நாம் ஸ்கேம்மர்களிடம் (Scammers) மாட்டிக்கொள்ளும்படியாக செய்யும் வாய்ப்புகள் மிகவும் அதிகம்.

ஸ்கேம்மர் என்பதற்கு மோசமான வணிக திட்டங்களை வகுப்பவர்கள் என்று பொருள். அதாவது இவர்கள் மக்களின் தகவல்களை திருடுவது, வைரஸ்களை பரப்புவது மற்றும் தவறான அல்லது போலியான தகவல்களை பரப்பி விடுவது போன்ற வேலைகளை செய்பவர்கள்.

பேஸ்புக்கில் இருக்கும் ஸக்கேமர்கள் முதலில் சற்றும் தீங்கிழைக்காத போஸ்ட்களை பதிவு செய்வர். அது மிகவும் கவனத்தை ஈர்க்கக் கூடிய மற்றும் அதிகம் ஷேர் ஆகக்கூடியதாக இருக்கும் வகையில் பார்த்துக் கொள்வர். அந்த போஸ்ட் பெரிய அளவிலான வெற்றியை பெறும் வரை காத்திருப்பார்.

மிகவும் எளிமையானதாக மற்றும் வசீகரமானதாக தோன்றும் போஸ்ட்கள் மிகவும் பிரபலம் அடைந்த பின்பு அதனுள் தீங்கிழைக்கும் உள்ளடக்கம் (malicious content) திணிக்கப்படும்.

அவ்வகையான உள்ளடக்கங்கள் மூலம் உங்களைப் பற்றிய சுய விவரங்களை திருடிக்கொள்ள முடியும். உதரணமாக, குறிப்பிட்ட பொருள்களை வாங்க சொல்லி விளம்பரம் செய்வார்கள் அல்லது பணம் செலுத்தும் வகையிலான 'பேவால்' (Paywall) போன்றவைகளை உருவாக்கி உங்கள் கிரெடிட் கார்ட் தகவல்களை திருடிக்கொள்ளவார்கள்.

இதுபோன்ற திருட்டு வேலைகள் போஸ்ட்களை பதிவு செய்து மட்டும் நடத்தப்படுவதில்லை. பேஸ்புக் லைக் பேஜ்கள் மூலமும் நடத்தப்படுகிறது என்பதும் குறிபிடத்தக்கது.

பூனைக்குட்டி, நாய்க்குட்டிகள், அழகான கருத்துக்கள் என நிரம்பி வழியும் லைக் பேஜ்களை நீங்கள் லைக் செய்தவுடன் ஸ்கேம்மர்கள் தீங்கு விளைவிக்கும் போஸ்ட்களை பதிவு செய்து, அது உங்கள் நியூஸ் பீட்டில் வருபடியாக செய்து விடுவார்கள். கண்மூடித்தனமாக லைக்குளை செய்ய வேண்டாம். உஷராக இருங்கள்.!



## காயத்ரியின் கவர்ச்சிப்படங்கள் பலன் தருமா?

தெலுங்கில் சிக்ஸ் என்ற படத்தில் அறிமுகமானவர் ஊர்மிளா காயத்ரி. தொடர்ந்து கன்னடம், பெங்காலி படங்களில் நடித்துவிட்டு தமிழில் மியாவ் படத்தில் நடித்தார். அந்தப்படம் சொல்லிக்கொள்ளும்படியாக அமையவில்லை. முதல்படம் நன்றாக அமையாவிட்டால் யாருமே நடிகைகளை திரும்பிப்பார்க்காத வழக்கம் தமிழ் சினிமாவில் உண்டு. இதன்படி ஊர்மிளா காயத்ரிக்கு புதுப்படங்கள் எதுவும் கிடைக்கவில்லை. ஆனாலும் முயற்சியை கைவிடாத அம்மணி, படு கவர்ச்சியாக போட்டோ ஷூட் செய்து, அதை இயக்குனர்களிற்கு அனுப்பியுள்ளார். இந்த போட்டோக்களிற்கு நிச்சயம் வாய்ப்பு கிடைக்குமென அம்மணி நம்புகிறாராம்.

## கடைசியில் இறங்கி வந்த தனுஷ்!

ரஜினியின் புதிய படத்தை தனுஷ் தயாரிக்க, பா.ரஞ்சித் இயக்குகிறார். மும்பை காட்சிகள் அதிகமாக வருவதால் அதுபோன்ற செட் அமைக்கும் பணிகள் நடந்து வருகின்றன. இதற்குள் இசையமைப்பாளர் யார் என்ற சர்ச்சை கடந்த சில மாதங்களாக நீடித்து, இப்பொழுதுதான் முடிவிற்கு வந்துள்ளது. தனுஷின் கொடி படத்திற்கு இசையமைத்தவர் சந்தோஷ் நாராயணன். அவர் கொடுத்த டார்ச்சரால் கடுப்பான தனுஷ், தனது ஆஸ்தான இசையமைப்பாளரான ஷான் ரோல்டனை இந்தப்படத்திற்கு முடிவு செய்திருந்தார். ரஜினியும் அதற்கு சம்மதித்துள்ளார். எனினும், தனக்கு சந்தோஷ் நாரயணன்தான் பொருத்தமானவர் என பா.ரஞ்சித் கூறிவிட்டார். இதனால் இழுபறியில் இருந்த விவகாரம், சில தினங்களிற்கு முன் முடிவிற்கு வந்துள்ளது. ரஜினியின் புதிய படத்திலும் சந்தோஷ் நாராயணன்தான் இசையமைக்கவுள்ளார்.

## ரெஜினாவின் உச்சபட்ச கவர்ச்சி!

உதயநிதி ஸ்டாலின், ரெஜினா, சிருஷ்டி டாங்கே நடிக்கும் படம் சரவணன் இருக்க பயமேன். எழில் இயக்கிய இந்தப்படம் விரைவில் திரைக்கு வருகிறது. இதில் முதன்முறையாக தமிழில் மெகா கவர்ச்சி காட்டியிருக்கிறாராம் ரெஜினா. இதை அவர்தான் சொல்லியிருக்கிறார். எம்புட்டு இருக்குது பாடல் காட்சியில்தானாம் கவர்ச்சியை வாரி இறைத்திருக்கிறார். தெலுங்குப்படங்களிற்கு இணையான கவர்ச்சியை காட்டியிருக்கிறேன் என்றுள்ளார்.

## ஜி.வியின் ஜோடி தமன்னா?

தெலுங்கில் வெற்றிப்படமாக அமைந்தது 100% லவ். நாகசைதன்யா, தமன்னா நடித்திருந்தார்கள். இது தமிழில் ரீமேக் ஆகிறது. ஜி.வி.பிரகாஷ்குமார் நாயகனாக நடிக்கிறார். நாயகியாக யாரை நடிக்க வைக்கலாம் என்ற ஆலோசனை நடந்து வருகிறது. தமன்னாவையே நாயகியாக்கலாமென்ற ஆலோசனையும் நடக்கிறது. தமன்னாவுடன் பேசி அதிகாரபூர்வ அறிவிப்பை விரைவில் வெளியிட படக்குழு முடிவு செய்துள்ளது.

## பாகுபலி கதை முடிந்தது!

பாகுபலி 2 வசூலில் சக்கைபோடு போடுகிறது. 1000 கோடியை கடந்து வசூலில் மிரட்டிக் கொண்டிருக்கிறது. இதையடுத்து பாகுபலி 3 வெளிவருமா என்று ரசிகர்கள் கேட்க ஆரம்பிதுள்ளனர். இரண்டு வருடங்களின் முன்னரே, பாகுபலி 3 வெளியாகுமென இயக்குனர் ராஜமெளலி ருவிற்றரில் அறிவித்திருந்தார். ஆனால் பாகுபலி 3 க்கான வாய்ப்பில்லையென கதையெழுதிய ராஜேந்திர பிரசாத் கூறியுள்ளார். நடிகர் பிரபாசும் இதுபற்றி வாய் திறந்துள்ளார். "பாகுபலி கதை முடிந்தது. 3ம் பாகத்திற்கு வாய்ப்பில்லை. ஆனால் கார்ட்டூன், காமிக்ஸ் என்பவற்றில் பாகுபலி தொடரும்" என்றுள்ளார். 5 வருடங்களின் பின்னர் இப்பொழுதான் பிரபாஸ் "சஹோரா" என்ற படத்தில் நடிக்க ஆரம்பித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ரஜினியை சீண்டும் விஜய்!

ரஜினிகாந்த் அரசியலுக்கு வரலாம் என்ற பேச்சு எழுந்ததையடுத்து, விஜய் ரசிகர்களிற்கும் ரஜினி ரசிகர்களிற்குமிடையில் மோதல் பரவலாக ஏற்படத் தொடங்கியுள்ளது. அனேகமாக போஸ்டர் போர்தான் நடந்து வருகிறது. கன்னடக்காரன் எங்களை ஆள முடியாது, தமிழன்தான் ஆள வேண்டும் என விஜய் ரசிகர்கள் மதுரையில் போஸ்டர் அடித்து ஒட்டியுள்ளனர். அவர்கள் ரஜினியைதான் மறைமுகமாக குறிப்பிட்டுள்ளனர். இதனால் கடுப்பான ரஜினி ரசிகர்கள், "விஜய் ரசிகர்களே. நாவை அடக்குங்கள்" என பதில் போஸ்டர் ஒட்டியுள்ளனர். இரண்டு நடிகர்களின் ரசிகர்கள் ஆரம்பித்துள்ள போஸ்டர் போர் தமிழகத்தின் மற்றப்பகுதிகளிற்கும் பரவி வருகிறது.



# டூரிங் டாக்கீஸ்



## நாகினி நாயகிக்கு வந்த வாய்ப்பு!

நாகினி தொடரில் நடித்த மௌனி ராயை பொலிவூட்டில் அறிமுகம் செய்யவுள்ளாராம் சல்மான்கான். நாகினியின் இரண்டு சீசன்களில் கலக்கி தமிழ் ரசிகர்களின் உள்ளத்தையும் கொள்ளைகொண்ட அழகிக்கு சல்மான் மூலம் புதுவாய்ப்பு கிடைக்கவுள்ளது. நாகினி சீசன் 3 இல் மௌனி ராயை தவிர்த்து, புது நடிகையை நடிக்கவைக்க முயற்சிகள் நடக்கும் சமயத்தில், பெரியதிரை வாய்ப்பு மௌனிக்கு கிடைத்துள்ளது. சித்தார்த் மல்ஹோத்ரா நடிக்கும் புதிய படத்தில் மௌனிராயை நடிக்கவைக்க சல்மான் முயற்சிக்கலாம் என கூறப்படுகிறது.

## ஜூனியர் சூப்பர் ஸ்டார் 2

ஜீ தொலைக்காட்சி ஒளிபரப்பிய நிகழ்ச்சி ஜூனியர் சூப்பர் ஸ்டார் நிகழ்ச்சி. 14 வயதிற்குட்பட்டவர்களின் நடிப்பு திறமைக்கு தீனி போட்ட இந்த நிகழ்ச்சிக்கு பெருவரவேற்பு கிடைத்ததையடுத்து, இதன் சீசன் 2 ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வரும் 16ம் திகதி முதல் சனி, ஞாயிறில் இரவு 7 மணிக்கு நிகழ்ச்சி ஒளிபரப்பாக உள்ளது. இயக்குனர் கே.பாக்கியராஜ், நடிகை ரோஜா, சின்னத்திரை நடிகை அர்ச்சனா நடுவர்களாக செயற்படுவார்கள்.

## சபீதாக்கும் வயதானவருக்கும் தள்ளுமுள்ளு!

ராடன் மீடியா தயாரிக்கும் 'வாணி ராணி' சீரியலில் நடித்து வரும் நடிகை சபீதா ராய்க்கும், அந்த நிறுவனத்தின் தயாரிப்பு நிர்வாகியான சுகுமாரனுக்கும் இடையில் கை கலப்பு ஏற்பட்டு, அது வீடியோவாக வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது பற்றி பல கதைகள் உலாவ ஆரம்பித்துள்ள நிலையில், சபீதா ராய் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். வாணி ராணி சீரியல் நிர்வாக தயாரிப்பாளர் சுகுமாரிற்கு விபத்து ஏற்பட்டபோது, 20 ஆயிரம் கடன் கொடுத்ததாகவும், அதை தராமல் இழுத்தடித்ததால், சுகுமாரின் வீட்டிற்கு சென்று வாங்க முற்பட்டபோது ஏற்பட்ட தள்ளுமுள்ளு வீடியோவாக வந்து தனது திரையுலக வாழ்க்கையை பாழாக்கிவிட்டதாக கூறியுள்ளார். இந்த தள்ளுமுள்ளு நடந்த இடத்தில் பொலிமர் தொலைக்காட்சி செய்தியாளர் ஒருவரின் வீடு இருந்துள்ளது. சுகுமாருடன் அவருக்கு இருந்த பகையால் அதை செய்தியாக்கி, இருவருக்கும் கள்ளக்காதல் என்பதை, போல சித்தரித்துள்ளது. இந்த செய்தி வெளியானதும் ராடன் நிறுவனத்திலிருந்து சபீதாவை நீக்கியுள்ளார் ராதிகா. இதனால் பாதிக்கப்பட்ட சபீதா தற்போது விஷால், கார்த்தியிடம் தஞ்சமடைந்துள்ளார். பொலிமர் தொலைக்காட்சியின் செய்தியால் தனது திரையுலக வாழ்க்கை பாழாக்கப்பட்டு விட்டதாக சபீதா கூறியுள்ளார்.

## விஜய் டிவியில் புதிய தொடர்!

சினிமாவில் சின்னத்திரை நடிகையாக அறிமுகமானவர் குட்டி பத்மினி. பின்னர் சின்னத்திரையில் நடித்தார். இப்போது தொடர்களை தயாரித்து வருகிறார். தற்போது வீரமங்கை வேலு நாச்சியார் என்ற பிரமாண்ட தொடரை தயாரித்து வருகிறார். தமிழ் தயாரிப்பு நந்தினியை போல பல மொழிகளில் இது தயாராகிறது. விஜய் டிவியில் வரும் யூன் மாதம் முதல் ஒளிபரப்பாகவுள்ளது இந்த தொடர்.

## பாவனா வந்ததற்கு இதுதான் காரணமாம்!

சினிமா படங்களின் ஓடியோ வெளியீட்டு நிகழ்ச்சிகளில் சின்னத்திரையில் இருந்து ரம்யா, அஞ்சனா போன்றவர்கள்தான் அண்மைக்காலமாக தொகுப்பாளினிகளாக பங்கேற்று வருகிறார்கள். அண்மையில் வெளியான "ஏன்டா தலையில எண்ண வைக்கல படத்தில் ஓடியோ வெளியீட்டு விழாவில், விஜய் டிவியின் சூப்பர் சிங்கர் தொகுப்பாளினி பாவனா கலந்து கொண்டிருந்தார். பாவனாவின் வரவு பலரையும் புருவம் உயரவைத்தது. ரசிகர்களின் எண்ணவோட்டத்தை புரிந்து கொண்ட பாவனா, நான் கலந்து கொண்டதன் காரணத்தை சொன்னார். படத்தின் தயாரிப்பாளர் வெளிநாட்டை சேர்ந்தவர். அதனால் ஆங்கிலத்திலும் நிகழ்ச்சியை தொகுத்து வழங்க வேண்டுமென என்னை அழைத்தார்கள். அதனாலேயே கலந்து கொண்டேன் என கூறி, தமிழ், ஆங்கிலத்தில் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

உணர்ச்சிகளின் கொதிநிலையில் சொற்கள்
சினைப்படுகையில் கவிதைகள் உருவாகின்றன.
அதர்க்கங்களின் தர்க்கமே அவற்றின் இருப்பினடிப்படை.
சொற்களின் உள்ளோடும் மௌனத்தில்தான் கவிதையின்
அனுபவமும், அர்த்தமும் உள்ளன. படைப்பென்பது
முதலிலும், முடிவிலும் அனுபவங்களின் எல்லையற்ற
சாத்தியம்தான்.

பாஅகிலன்.



# கடல் நுழையும் மணற் பதுங்குகுழி

தீபச்செல்வன்

ஒரு பக்கத்து வானத்தில்
பெருந்துயர் மிகு சொற்கள்

எல்லாருக்குமான
பாவங்களைச் சுமக்கும்
சனங்களின் குருதி மிதக்கும்
துண்டுக் கடலில்
கறுப்பு இரவு திரிகிறது.

எல்லாவற்றையும் கிடங்கிலிருந்து
கழித்து ஓ.. என்ற
பெரும் மூச்சை மணல்வெளியில் புதைத்தாய்
வானம் தாறுமாறாய் கிழிந்தது.

சப்பாத்துகள் நெருக்கி கடலில்
தள்ளிவிடத்துடிக்கும் ஒரு துண்டு நிலத்தில்
எச்சரிக்கப்பட்டிருக்கும் வாழ்வு
மணல் போல உருந்துபோகிறது.

எல்லாவற்றையும் இழந்து
ஓடிவரும் இரவு சிக்கியது
மிருகத்தின் வாயில்

எறிகனை கடித்த
காயத்திலிருந்து கொட்டும் கனவுகளை
மிதிக்கிறது மண்ணை தின்னும் டாங்கிகள்
காயப்பட்ட வழி எங்கும் உப்புக் காற்று.

உன்னைச் சூழ்ந்திருக்கும்
கோரமான பற்களின் பசியில் கரைகிறது
உனக்காய் என்னிடமிருக்கிற பதுங்குகுழி.

எச்சரிக்கப்பட்ட துண்டுக் கடற்கரையில்
யாரும் அறியாதபடி மிக அமைதியாக
வந்து வெடிக்கிறது எறிகனை
குழம்பிக் கிடக்கிறது கடல்

பின்னிரவை தொடரக் காத்திருக்கும்
மற்றைய எறிகனைகளில்
அதிரும் அசைவற்ற கடற் கரை முழுவதும்
பாரமான குருதி.

உன்னிடமிருக்கும் பெருஞ்சொற்களில்
சிலதை கேட்டு முடித்தபோது
நாம் சேர்வதற்கான கனவு
நீயிருக்கும் மணற் பதுங்குகுழியின் மூலையில்
உருந்துபோகும் மணலில் புதைந்தது.


அம்மா!, அதிர்கின்றன
மணற் பதுங்குகுழியின் சொற்கள்.

# காலச்சக்கரம்

தவா:பரமேஸ்

எப்பொழுதும் மிகப்பெரும் கருவியாகவே
காலச்சக்கரத்தின் சுழற்ச்சி
வாழ்வியல் மேடைகளில்
காலச்சகரத்தின் நகர்வுகள் இல்லையெனின்
வாழ் ஏடுகள் சந்தோசங்களால்
இல்லை வலிகளால்
இல்லை துரோகங்களால்
இல்லை ஏமாற்றங்களால்
மட்டுமே நிறைந்திருக்கும்
காலச்சக்கர சுழற்சியினாலேயே
எத்தனையோ மனிதர்கள்
இன்றும் வாழ்படிக்கட்டுகளில் ஊசலாடுகிறார்

நேற்று இன்று நாளை இக்காலங்களில்
மனிதன் எப்படியெல்லாம் மாறிவிடுகின்றான்
அழுதவன் சிரிப்பதும்
சிரித்தவன் அழுவதும்
உறவு பகையாவதும்
பகை உறவாவதும்
காலச்சக்கர சுழற்சியின் சித்து வேலையன்றி
வேறில்லை



மனமென்னும் பெருவெளியின் வலியென்னும்
எரிமலைகளை
அடங்கச் செய்வதற்கு
காலச்சகர நகர்வென்னும் பாசுபத அஸ்திரமே
மாமருந்தாகின்றது.



# இரகசியம்

நடராஜா முரளிதரன்

நண்பன் சொன்ன இரகசியத்தை
பெட்டியிலை போட்டு பூட்டி
சாவியையும்
என்னோடை கொண்டு திரிந்தேன்
அந்த இரகசியம்
பொரிச்சு குஞ்சாகி
பெட்டிக்கு வெளியே தீனி தேடி
அலையக் கண்டேன்
பெட்டிக்கு நிலைக்குத்தாக
வானில் பருந்தொன்று குஞ்சைக் குறிவைத்து
வட்டமிடுவதையும் கண்டுகொண்டேன்
தீனி
கதையாகவும் கவிதையாகவும்
இருப்பதாக குஞ்சு குறைப்பட்டுக் கொண்டது
அவ்வழியே வந்த சேவலொன்று
வடலி வளர்த்துக்கள்ளுக் குடிக்கும்
கனாவில்
குஞ்சை தத்தெடுத்துப் பராமரிக்கும் வேலையை
தன்னகத்தேயாக்கியது
எலுமிச்சை மரத்தின் கீழே
சாம்பல் குளித்த பேடு ஒன்று
குஞ்சின் தாயாகத் தன்னை வேடமிட்டு
தன் சிறகினுள் குஞ்சுக்குஅடைக்கலம் கொடுத்தது
பருந்து
வைத்த குறியினிலிருந்து மீளுவதாய் இல்லை
சேவலும்
பொறுமை காத்து கிடக்கிறது
சுடலையில்
மாடனின் குரைத்தல் ஒலி
இந்த யுகம் வரை
நீளும் உத்தேசத்தில்
ஆனாலும் சிறகுகளின் அரவணைப்பில்
அந்த மென்சூட்டின் கதகதப்பில்
குஞ்சு
இந்த உலகத்தை மறந்து கிடக்கிறது

# நானொரு துயரம் நானொரு வாழ்வு

கிரிஷாந்

நானொரு துயரம் நானொரு வாழ்வு
பழமையிலும் பழமையானது துயரம் .

நானே பெருந்துயரும் மாளாச்சோகமும்
நானே புதுயுகத்தின் கண்ணீரும் சாம்பலும்
நானே வாழ்வின் பலியும் இரக்கமும் .

வற்றா அனல்வெளியில் பெருமௌனம்
என் இருப்பு .

அலறிச் சிறைபடும் ஒவ்வொரு
பறவையிலும்
துடிக்கும் சிறகு நானே


அறையும் ஓலமும்
அடங்கும் இதயமும்
நானே.

நானே கைகளில் விலங்கிடப்பட்டவன்
நானே தெருக்களில் தனித்திழுபட்டவன்
நானே கடவுளரை மன்றாடித்தீர்த்தவன்
கைவிடப்பட்டவன்.


நானே மகாமூர்க்கனும் புனிதனும் ஆனேன்
எனது சதையையே உண்டனர் பகிர்ந்தனர்
நானே மரணமும் சாட்சியும் ஆவேன் .

உருகும் மெழுகின் திண்மம்
என் கண்ணீர்
உறையாக்கடலின் அலைச்சல்
என் வாழ்வு

நானே தீயுள் சுடரும் காத்திருப்பு
நானே வார்த்தையுள் நெருடும் மறுதலிப்பு
நானே பூமியுள் உறங்கும் பெருவெடிப்பு
நானே எரியும் நிலமும் ஆற்றும் மழையும் .



# மனமே நலமா?



## உங்கள் சந்தேகங்களை கேளுங்கள்



குு.நக்கீரன்
உளவள ஆலோசகர்

**ஜோதிமலர் (வயது 37)**
**முள்ளியவளை**

**கேள்வி:** எனது கணவரைப் 10 வருடமாக பிரிந்து வாழ்கின்றேன். எனக்கு 15 வயதில் ஒரேயொரு பெண் பிள்ளை உள்ளார். அவள்தான் என் வாழ்வின் ஒரேயொரு நோக்கம். அவளைப் படிப்பித்து நல்ல நிலைமைக்கு கொண்டு வருவதே இலட்சியம். நான் எவ்வளவோ துன்பங்களை, ஆசைகளை எல்லாம் துறந்து அவளுக்காக சுமைகளைச் சுமந்து நிற்கின்றேன். எனது பிரச்சினை என்னவென்றால், கொஞ்ச நாட்களாக அவளது பழக்கவழக்கங்கள் மிகவும் சிக்கலானதாக உள்ளது. எப்போதும் போனில் கதைப்பதும், அதற்குள்ளேயே மூழ்கிக்கிடக்கின்றாள். படிப்பில் அக்கறை இல்லை. வீட்டில் நிற்பது குறைவு. கேட்டால் பொருத்தமில்லாத பதில்கள் கூறுகின்றாள். இதனால் அடிக்கடி எனக்கும் அவளுக்கும் பல பிரச்சினைகள் வருகின்றது. ஒருநாள் வீட்டிற்கு வராமலே நின்றுவிட்டு அடுத்தநாள் தான் வீட்டிற்கு வந்தாள். எனது பயமெல்லாம் ஏதோ பிழையான வழியில் செல்கிறாளோ என்பதே. அடங்கவேமாட்டேன் என்கிறாள். நான் நிம்மதி இழந்து தவிக்கிறேன். வாழ்க்கையே வெறுத்து விட்டது. எனக்கொரு வழி கூறுங்கள்.

**பதில்:** அன்புச் சகோதரி! உங்களின் நீண்ட மடலை வாசிக்கும் போது எனக்கே மிகவும் மனக் கவலையாக உள்ளது. உண்மையில் எமது பிரதேசத்தில் அதிகமான, சரியான அம்மாக்களின் பிரச்சினை இதுவே. ஆனால் பொதுவாக ஆண் பிள்ளைகளே இவ்வாறான சிக்கல் எடுப்பது வழமை. அண்மைக் காலமாக எமது பகுதிகளிலும் பெண்பிள்ளைகளும் இப்படிச் சிக்கல்களை குடும்பத்தினுள் உருவாக்கிக் கொண்டுள்ளனர். இருந்தாலும் இது ஒரு சாதாரண பிரச்சினைதான். ஏனெனில் கட்டிளமைப் பருவத்தில் உள்ள அனேக பிள்ளைகளுக்கு உள்ள பொதுவான இயல்பு இது. நான் நினைக்கின்றேன், உங்கள் மகள் சற்று அதிகமாக வெளிப்படுத்துகின்றாள். அவ்வளவு தான். உங்களின் மகளின் நிலைமையைப் பாரத்தால் பாத்தி உடைத்து கட்டில்லாமல் சீறிப் பாயும் வெள்ளம் போல இருக்கின்றது. என்ன செய்வது. சற்று விரைவாகவும் பலமாகவும் மண் அணைகள் போட்டால் வெள்ளம் கட்டுப்பட்டு செம்பனிட்ட பாத்தியில் ஓடும். முதலில் உங்கள் மகளுக்காக உங்கள் வாழ்விடத்தை மாற்ற வேண்டிய தேவையுள்ளது. மிகப் பொருத்தமான புதிய வாழ்விடத்தை உங்களுக்கும் உங்கள் மகளுக்காகவும் சேர்த்து தேடுங்கள். புதிய நட்பு வட்டாரங்கள் உருவாக பழைய வட்டாரங்கள் மறந்து போகலாம். அவளது தொலைபேசி பாவனையைக் குறைக்க அவளுக்கு மகிழ்ச்சிதரக் கூடிய வேறு விடயங்களில் ஈடுபடக் கூடிய ஒரு நிலையை ஏற்படுத்தவும். உதாரணமாக இசை, நடனம், சினிமா பார்ப்பது கூட பரவாயில்லை. படங்களை நீங்களே தெரிவு செய்யுங்கள். நீங்களே ரீயூசன் பாடசாலை போன்றவற்கு கூட்டிச் சென்று கூட்டி வாருங்கள். அவளின் நண்பிகளின் பெற்றோருடன் தொடர்புகளைப் பேணுங்கள். பிழையான வாழ்க்கைப் பாதையை தெரிவு செய்தால் வரக்கூடிய பிரதிபலன்களைத் தவிர்க்கவே முடியாது என்பதை புரியவைக்கும் விதமான நிலையை உதாரணமானவர்களைக் கொண்டு காட்டுங்கள்.

நல்ல குடும்ப உறவுகளின் சேர்க்கையை ஊக்குவியுங்கள். நான் நினைக்கின்றேன் உங்கள் மகள் பாலியல் ரீதியான சிக்கல்களிலும் சிக்கியிருக்க வாய்ப்புள்ளது. எனவே ஒரு மருத்துவ ஆலோசனை பெறுவதுகூட உத்தமமானதே.

நாட்டின் சட்ட ஒழுங்கு பற்றிய விழிப்புணர்வு அவசியமானது. இன்றைய யாழ்ப்பாண நிலையில் இப்படியான சிக்கல்களினுள் சிக்குப்பட்டால் கிராம சேவையாளர் முதல், பெண்கள் பாதுகாப்பு உத்தியோகத்தர், பொலிஸ், நீதிமன்றம், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், சட்ட வைத்திய அதிகாரி, பாலியல் நோய் சிகிச்சை நிலையம், சிறுவர் பாதுகாப்பு பிரிவு என்று பல்வேறு பகுதிகளுக்குச் சென்று பதிவு செய்து அறிக்கை எடுத்து சின்னாபின்னமாகி விடுவாய் என்பதைப் புரியவையுங்கள்.

அன்பால் புரிய வையுங்கள். இல்லாவிடின் சாம, பேத, தான, தண்ட முறைகளைப் பயன்படுத்தவும். எங்களால் முடியுமானதை முயன்று பாருங்கள். உங்கள் நெருங்கிய உறவுகளின் உதவியை இவ் விடயத்தில் பெறலாம் என நினைக்கின்றேன். முடியாத போது ஒரு உளவள ஆலோசனைகளை நாடுங்கள். நான் நினைக்கின்றேன், நீங்கள் உங்கள் மகளுக்கு வறுமை, துன்பம், சுமை என்பவற்றைக் காட்டவில்லை என. எனவே, வாழக்கையில் அப்படியொரு பக்கமும் இருக்கிறது என்பதை உணரும் வேளை திருப்பங்கள் வரலாம். எனவே தடுக்க ஆலோசனைகளைப் பெறுங்கள்.

**முருகேசு (வயது 70)**
**புத்தூர்**

**கேள்வி:** நான் பேரப்பிள்ளைகளைக் கூடக் கண்டுவிட்டேன். எனது மனைவியுடன் தாம்பத்தியத்தில் ஈடுபட்டு எட்டுப்பத்து வருடங்கள் ஆகின்றது. இருந்தாலும் இக் காலத்தினுள் வேறு ஒருவருடன் பாலியல் உறவில் ஈடுபட்டுள்ளேன். எனக்கு கடவுள் நம்பிக்கையும் உண்டு. ஆனால், ஆன்மீக சமய விடயங்களில் ஈடுபாடு இல்லை. எனது பிரச்சினை என்னவென்றால், எனது பாலியல் உறவுத் தேவை இன்னும் அதிகமாகவே உள்ளது. இதனால் நான் எனது மனதுக்குள் குழம்பிப்போய் உள்ளேன். குற்ற உணர்வு அதிகமாக உள்ளது. நான் மட்டும் தானா இப்படியான நிலையில் உள்ளேன்? நான் எப்படி ஒரு பக்குவ நிலைக்கு வருவது? எனக்கு வழி கூறவும்.

**பதில்:** ஐயா! நீங்கள் உங்களின் நிலையை எண்ணி கவலை கொள்ள வேண்டிய நிலை இல்லை. மாறாகப் பெருமைப்பட்டுக் கொள்ளுங்கள். ஆரோக்கியம் நல்ல நிலையில் உள்ளதென்பதின் வெளிப்பாடே இது. நீங்கள் உண்மையிலே அமெரிக்காவில் இருக்க வேண்டியவர். மேற்கு நாடுகளில் பொதுவாக பாலியல் உறவு எழுபது, எண்பது வரை நீளும். எமது நாடுகளில் பண்பாடுதான் மகனோ அல்லது மகளோ வயதுக்கு வந்து விட்டால் பெற்றோரின் பாலியல் உறவுக்கு ஓய்வு கொடுத்திட வேண்டும் என எதிர்பார்க்கின்றது. இதனால் அனேக தம்பதிகள் ஒருவித மன உளச்சலுக்கு ஆளாகி விடுகின்றார்கள். சில குடும்பங்களிலே கணவன் மனைவி தகராறு முற்றி விடுகின்றது. இன்னும் சில குடும்பங்கள், பெரிய வீடு சமாச்சாரம் புகுந்து விடுகின்றது. இன்னும் சில குடும்பங்களில் விவாகரத்து, தற்கொலை போன்ற பிரச்சினைகள் கூட உருவாகின்றன. இவை அனைத்திற்கும் ஒரே காரணம் பாலியல் உறவுத் தேவை என்பது சரியாகப் பூர்த்தி செய்யப்படாமையே. இப் பிரச்சினையில் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட வேண்டியவர்கள் பொதுவாகப் பெண்களே(மனைவிமாரே).

இந்து சமயம் பிரம்மச்சரியம், வானப் பிரஸ்தம், சன்னியாசம், கிருஹஸ்தம் ஆகிய படி நிலைகளின் ஊடாக வாழ்வைக் கடந்து செல்ல கற்றுத் தருகின்றது. ஆகவே கிருஹஸ்தம் என்று கூறக் கூடிய இல்லற வாழ்வில் திருப்திப்படும் அளவுக்கு பாலியல் தேவையை பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். இதற்கு கணவன் மனைவி ஆகிய இருவரும் சேர்ந்து முயற்சிக்க வேண்டும். இதற்கு எமது சமுதாயத்தின் பாலியல் பண்பாடு பொருத்தப்பாடானதாக அமையவில்லை. நீங்கள் இப் பிரச்சினையில் இருந்த வெளியேறுவதற்கு இரண்டே இரண்டு வழிகள் மட்டுமே உண்டு. ஒன்று உங்கள் மனைவியின் கையில் உள்ளது. இன்னொன்று நீங்களே உங்கள் மனதை ஆரோக்கியமான திசையை நோக்கி மட்டும் நகர்த்த வேண்டும். பாலியல் தேவை மட்டும்தான் வாழ்வின் மகிழ்ச்சி என்பது இல்லையே. வாழ்க்கையை இரசிக்க, மகிழ, அனுபவிக்க பல வழிகள் உண்டு. இசை, இயற்கை, ஆன்மீகப் பயிற்சிகள், சமய வழிபாடுகள், பொதுச் சேவைகள் இன்னம் சொன்னால் நீங்களே உங்கள் வாழ்வில் இன்னும் உயர்வதற்கான (வியாபாரம் போன்ற) முயற்சிகளில் ஈடுபடலாம். எனவே இது உங்களுக்கு மட்டும் உரிய பிரச்சினை இல்லை. இதை நீங்கள் கையாளும் விதத்திலேயே உங்களுக்கான வெற்றியும், மன அமைதியும் தங்கியுள்ளது. தேவையின் தனிப்பட்ட முறையில் ஒரு உளவள ஆலோசகரின் உதவியைப் பெறுங்கள்.

K.A.K SALE CENTER
Kodikamam Road, Nelliyadi,
karaveddy.
Car and Van for Rent T.Kiri




T.P: 021 226 1996
077 594 5678
E-Mail: kiritharan72@gmail.com



# யாழ்ப்பாணத்தாரின் கெட்ட குணங்களும் வெள்ளவத்தையாரின் நல்ல குணங்களும்!

யாழ்ப்பாணத்தாருக்கு என விசேசமாக சில குணங்கள் உண்டு. சுட்டுப்போட்டாலும் அவை மாறாது. அந்த குணங்களை விட்டால், உடலைவிட்டு உயிர்போய்விடும் என்பதை போல நம்மவர்கள் நடந்து கொள்வார்கள்.

இப்பொழுது பாருங்கள், கொழும்பில் ஒரு குட்டி யாழ்ப்பாணம் இருக்கிறது. அது வெள்ளவத்தை. வெள்ளவத்தையில் காடுவெட்டி வேளாண்மை செய்து பரம்பரையாக குடியிருப்பவன் அல்ல தமிழன். வடக்கு, கிழக்கிலிருந்து சென்றவர்கள்தான் அங்கு குடியிருக்கிறார்கள். குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்து சென்றவர்கள்தான் அனேகர். யாழ்ப்பாணத்தாரில் உள்ள சில குணங்கள் குட்டி யாழ்ப்பாணமான வெள்ளவத்தையாரிடம் இல்லை. தனியே வெள்ளவத்தை என்று சொல்ல முடியாது. அக்கம் பக்கத்தில் உள்ள தெஹிவளை, பம்பலபிட்டி, கொட்டஹேன என தமிழர்கள் செறிவாக உள்ள கொழும்பு பிரதேசங்களை மையமாக வைத்துதான் குறிப்பிடுகிறோம்.

யாழ்ப்பாணத்தாருக்கும், கொழும்பாருக்கும் அப்படியென்ன பெரிய வித்தியாசம் என தலையை பிய்க்காதீர்கள். சும்மா ஒரு பொழுதுபோக்கிற்காக சில விடயங்களை பட்டியல்படுத்தியுள்ளோம். படிக்கும்போது சும்மா பொழுதுபோக்கு மாதிரித்தான் இருக்கும். ஆனால் நமக்கென வந்தால் வயிறுபற்றியெறியும் அத்தியாவசிய பிரச்சனைகளாக மாறும். அன்றாட வாழ்க்கையில் நடக்கும், படிக்கும் போது அவ்வளவு பெரிதாக தோன்றாத, நமக்கென்று வரும்போது பெரிய பிரச்சனைகளாக தோன்றும் சில விடயங்களில், யாழ்ப்பாணம் கொழும்பு பகுதிகளில் உள்ள நல்லது கெட்டதுகளை பட்டியல் படுத்தியுள்ளோம்.

### கவுண்டர் காண்டாமிருகங்கள்

டயப்பிற்றீஸ் காரனாக இருப்பார். ஆஸ்பத்திரியில் கிளினிக் முடித்துக் கொண்டு, பக்கத்திலுள்ள கடையில் சீனி போடாத பிளென்ரீ குடித்துவிட்டு காசை கொடுத்தால், மிச்சக்காசு இல்லையென பத்து ரூபாவிற்கு நாலு இனிப்புரொபியை எடுத்து வைத்துவிட்டு, அடுத்தவரிடம் பில்லை கேட்பான் கவுண்டரில் இருக்கும் காண்டாமிருகம். ரொபி வேண்டாம் என்றால் முகத்தில் ஒருரியாக்சன் இல்லாமல் எடுத்து உள்ளே வைத்துவிட்டு மற்றப்பக்கம் பார்த்துக் கொண்டிருப்பான். யாராவது உரத்தகுரலில் கேட்டால்தான் புதையல் தோண்டுவதை போல கல்லாப்பெட்டிக்குள் அரைமணித்தியாலம் தோண்டி பத்து ரூபா கொடுப்பான். பேரூந்துகளில் இன்னும் மோசம். மீதிப்பணம் கேட்டால், ஜிஜி பொன்னம் என்ற நினைப்பில் “மாத்தின காசு கொண்டரத் தெரியாதோ. மிச்சம் தேவையென்றால் பஸ் நிற்கிற இடத்துக்கு வாங்கோ” என கொண்டக்ரர் லோ கதைப்பான். யாழ்ப்பாணம் என்றல்ல, வடக்கு கிழக்கில் பரவலாக உள்ள தமிழர்களின் தனிக்குணம் இது. கொழும்பில் ஒரு ரூபாவிற்கும் மதிப்பு கொடுக்கும் வர்த்தக குணம் அதிகம். கடை, பேரூந்துகள் என்றில்லை, முச்சக்கரவண்டிகளிலும் சில்லறை மிச்சம் கொடுப்பவர்கள் அனேகர்.

### றோட்டோர றோமியோக்கள்

இப்போது யாழ்ப்பாணம் இருக்கிற நிலைமையில் பெண்களை பெற்றாலே வயிறு பக்குபக்கென எரியும். அதிலும் கொஞ்சம் அழகான பெண்ணை பெற்றால்... பார்வையாலே துகிலுரியும் மன்மத குஞ்சுகளிடமிருந்து அவர்களை காப்பாற்ற கிருஸ்ண பரமாத்மா பத்து பதினைந்து சேலை தொழிற்சாலைதான் ஆரம்பிக்க வேண்டும். சில்வெஸ்டர் ஸ்னோன் போல அப்பன்காரன் அருகில் வந்தாலும் றோட்டோர றோமியோக்கள் அடங்கமாட்டார்கள் யாழ்ப்பாணத்தில். ரொமான்ஸ் செய்வது எப்படியென நாக்கை சுழற்றி ஒரு அக்சனை ஒரு படத்தில் ஆர்யாவிற்கு சந்தானம் சொல்லிக் கொடுப்பார். அதை பார்த்தோ என்னவோ, வீதியோரங்கள், பஸ்நிலையங்களில் றோமியோக்கள் நாய் நாக்கை சுழற்றுவதைபோல எதையோ செய்து கொண்டிருப்பார்கள். அந்த கண்றாவியை பார்த்தால் அந்த பெண்ணிற்கு காதல் வராது. சத்திதான் வரும். எதிரே ஒரு பெண் வந்தால், எங்காவது ஜோடி வந்தால் ஆளை விழுங்குவதைபோல பார்த்துக் கொண்டிருக்கும் றோமியோக்களால் ஆனது வடக்கு. கொழும்பில் அது கிடையாது. வெள்ளவத்தை மார்க்கெட்டிற்கு முன்பாகவோ, பம்பலபிட்டி எம்.சியில் நின்றோ நம்மாள் ஒருவன் பக் பக் பார்வை பார்த்துக் கொண்டு நின்றால், “எப்ப தம்பி கொழும்பிற்கு வந்தனீ... எப்ப ஊருக்கு கிளம்புகிறாய்” என கேட்கலாம்.

### ஸ்பீக்கர் விழுங்கியவர்கள்

நம்மாள் தொலைபேசியில்தான் பேசுவான். ஆனால் அதில் பேசுகிறோம் என்ற விவஸ்தையே கிடையாது. பக்கத்து வீட்டுக்காரனுடன் நேரில் பேசுவதை போல பேசுவான். இன்னும் சற்று குரல் வைத்தால் அமெரிக்க கண்டத்தில் இருப்பவனிற்கே கேட்கும். அப்படி சத்தம் வைத்து தொலைபேசியில் பேசுவார்கள். பேரூந்தில் இளையராஜாவின் பாடல்கள் தாலாட்டிக் கொண்டிருக்கும். அப்போது ஒரு ஸ்பீக்கர் தொண்டைக்காரன் போனில் பேசத் தொடங்குவான். வீட்டில் ஆட்டுக்குகுழை வெட்டியதா என்பதில் தொடங்கி மத்தியானம் முருங்கைக்காய் வைக்க சொல்வது வரை மனைவியுடன் கத்தி பேசுவான். வீடிருக்கும் திரை பார்த்து பேசினால் தொலைபேசியே தேவையில்லை. குறிப்பாக நடுத்தர வயதுக்காரர்கள் பெரும்பாலானவர்கள் இப்படித்தான். கொழும்பில் உள்ளவர்களிடம் இந்த இயல்பை காண முடியாது.

### இது பெண்கள் மேற்றர்

ஊரில் இருக்கும்வரை ஓவராக சீன் போடும் பெண்கள்தான் அனேகர். முழங்கால் தெரிய பாவாடை அணிய மாட்டேன், ஜீன்ஸ் போடுபவர்கள் பெண்கள் இல்லை, சேலை கட்டும் பெண்களிற்குத்தான் ஒரு வாசம் உள்ள தென் இன்னும் பாலசந்தர், பாரதிராஜா பட ஹீரோயின்கள் போலவே தம்மை கற்பனை பண்ணிக் கொண்டிருப்பார்கள். உடையென்பது நமது சௌகரியத்திற்கு, நமக்கானது என்பதை விட, “பார்க்கிறவை என்ன சொல்லுவினமோ” என்று தமது உடைகளை மற்றவர்களின் கண்ணாடியில் பார்க்கும் மோசமான குணம் நமது பெண்களிடம் இருக்கும். இதே பெண்கள் கொழும்பு போனால், கொழும்பில் தங்கியிருந்தால் ஓவர் நைட்டில் கண்ணகியிலிருந்து சில்க் ஸ்மிதாக்களாகி விடுவார்கள். சில்க் ஸ்மிதா மாதிரி உடையணிவதொன்றும் தப்பில்லை. நமக்கு எது பொருத்தம், எது நமக்கு சௌகரியம் என்று பார்த்து உடுத்தாமல், ஊருக்காக உடுத்தும் பகட்டு வாழ்க்கையை ஊரில் வாழ்வார்கள். கொழும்பிலிருந்து புறப்படும்போது, அந்த ஆடைகளை அப்படியே மடித்து பெட்டிக்கு அடியில் வைத்துவிடுவார்கள். கொழும்பு தமிழ் பெண்கள் அப்படியல்ல, மற்றவர்களிற்காக அல்லாமல் தமக்காக வாழ்பவர்கள்.

### விரும்பினால் வா... இல்லாவிட்டால் போ!

யாழ்ப்பாணத்தில் இப்பொழுது கடைகள்தான் அதிகம். அதிலும் அனேக கடைகள் ஈயோட்டிக்கொண்டுதான் இருக்கின்றன. முதலாளி, அங்கு வேலை செய்பவர்களின் நடமாட்டம்தான் கடையிலிருக்கும். எப்பொழுதாவது வரும் வாடிக்கையாளர்களிடம் கடை முதலாளியில் இருந்து, கடைப்பையன் வரை யாரும்



முறையாக வர வேற்கமாட்டார்கள். வந்தால் வா, வராவிட்டால் போ என்ற பாணியில் மூஞ்சையை வைத்திருப்பார்கள். நகரத்தில் உள்ள பெரிய உணவகங்கள், வர்த்தக நிலையங்களில் எல்லாம் முதலாளி இருந்தால்தான் கடைப்பையன்களின் கவனிப்பு. சில உணவகங்களிற்கு போனால், கடைப்பையன்கள் ஒன்றாக இருந்து அரட்டையடித்து கொண்டிருப்பார்கள். வாடிக்கையாளர் பசியால் வாடிப் போயிருப்பார். அந்த மேசையை யார் கவனிப்பது என அடிபடுவார்கள். யாராவது பொறுப்பானவர் தலையிட்ட பின்னர்தான், “வந்தனி தாறதை சாப்பிட்டு போ” என வேண்டாவெறுப்பாக உபசரிப்பார்கள். ஆனால் கொழும்பில் நேர்மாறு. பெரிய, இடைநிலை உணவகங்களில் எல்லாம் வாடிக்கையாளர்களை பக்காவாக வரவேற்று உபசரிக்கிறார்கள்.



ஸ்ரீதர் சுவாமிநாதன்


சீர்காழி சிவசிதம்பரத்தின் கச்சேரியை முதல்வர் எம்.ஜி.ஆர். ரசித்துக் கேட்கிறார். அருகே நெடுஞ்செழியன், ம.பொ.சி.


'நவரத்தினம்' படத்தில் எம்.ஜி.ஆர்.


நவரத்தினம்' படப்பிடிப்பில் எம்.ஜி.ஆருடன் குன்னக்குடி வைத்தியநாதன்.


எம்.ஜி.ஆர் **100** நெடுந்தொடர் 55

# இசைபட வாழ்ந்தவர்!

**எம்.ஜி.ஆர்.** ரசிகர்கள் பலதரப்பட்ட வகையினர். அவர்களில் ஒருவர் கர்னாடக இசைத்துறையைச் சேர்ந்த, மறைந்த மாண்டலின் இசைமேதை யூ. ஸ்ரீனிவாஸ். தனது தீவிர ரசிகராக இருந்தவரின் இசைக்கு, பின்னர் எம்.ஜி.ஆரே ரசிகராக மாறினார். அத்தகைய பெருமையை பெற்றவர் மாண்டலின் ஸ்ரீனிவாஸ்.

தூர்தர்ஷனில் 1983ம் ஆண்டு இசை அரங்கம் நிகழ்ச்சியில் ஸ்ரீனிவாஸின் மாண்டலின் இசை நிகழ்ச்சி ஒளிபரப்பானது. நிகழ்ச்சி முடிந்தவுடன் தூர்தர்ஷன் இயக்குநருக்கு தொலைபேசி அழைப்பு. மறுமுனையில் பேசியவர் முதல்வர் எம்.ஜி.ஆர்! எதற்காக அழைக்கிறார் என்று அவர் யோசித்துக் கொண்டிருந்தபோதே, "இப்போது தூர்தர்ஷனில் மாண்டலின் வாசித்த சிறுவனின் வாசிப்பு அபாரம். அந்தப் பையனின் தொலைபேசி எண் வேண்டும்" என்று எம்.ஜி.ஆர் கேட்டார்.

அப்போது, வடபழனியில் தனது குருவின் வீட்டிலேயே தங்கி மாண்டலின் கற்றுக் கொண்டிருந்தார் ஸ்ரீனிவாஸ். அந்த வீட்டில் தொலைபேசி கிடையாது. எனவே, வீட்டு முகவரியை எம்.ஜி.ஆருக்கு தூர்தர்ஷன் இயக்குநர் அளித்தார். மறுநாள், எம்.ஜி.ஆர் அனுப்பி வைத்தவர் வந்து ஸ்ரீனிவாஸை சந்தித்து, முதல்வர் சார்பில் பாராட்டுக்களை தெரிவித்தார். மேலும், "எம்.ஜி.ஆர் தலைமையில் விரைவில் நடக்க உள்ள விழாவில் மாண்டலின் கச்சேரி செய்ய வேண்டும்" என்றும் கூறினார். அந்த விழா, நடிகர் கமல்ஹாசனுக்கு எம்.ஜி.ஆர் தலைமையில் நடந்த பாராட்டு விழா!

கலைவாணர் அரங்கில் நடந்த விழாவில் கலந்துகொள்ள வந்த எம்.ஜி.ஆரை வெகு அருகில் பார்த்து மகிழ்ச்சியில் மனம் நிறைந்தார் ஸ்ரீனிவாஸ். அந்த விழாவில் மாண்டலின் கச்சேரியை ரசித்துக் கேட்ட எம்.ஜி.ஆர், தமிழக அரசின் ஆஸ்தான கலைஞராக ஸ்ரீனிவாஸை நியமிக்கப் போவதாக மேடையிலேயே அறிவித்தார். அந்த வருடம் வெளியான ஆஸ்தான கலைஞர்கள் பட்டியலில் வாய்ப்பாட்டு கலைஞர் மகாராஜபுரம் சந்தானம், பரதநாட்டியக் கலைஞர் பத்மா சுப்பிரமணியம், வயலின் இசைக் கலைஞர் குன்னக்குடி வைத்தியநாதன் உள்ளிட்டவர்களுடன் மாண்டலின் ஸ்ரீனிவாஸ் பெயரும் இடம்பெற்றது.

ஆஸ்தான கலைஞராக நியமிக்கப்பட்டபோது மாண்டலின் ஸ்ரீனிவாஸுக்கு வயது பன்னிரண்டுதான்! ஒருவரிடம் இருக்கும் திறமையை மட்டுமே எம்.ஜி.ஆர் பார்ப்பாரே தவிர, வயதை அல்ல என்பதற்கு இது ஓர் உதாரணம். பின்னர், தஞ்சையில் ஆஸ்தான கலைஞர்களை நியமிக்கும் விழா நடந்தபோதும் ஸ்ரீனிவாஸின் மாண்டலின் கச்சேரியை எம்.ஜி.ஆர் ரசித்துக் கேட்டார்.

அதன் பின்னர், கச்சேரிகள் செய்வதற்காக விமானப் பயணம் மேற்கொள்ளும்போது, சென்னை விமான நிலையத்தில் சில சமயங்களில் அங்கு வந்த முதல்வர் எம்.ஜி.ஆரை மாண்டலின் ஸ்ரீனிவாஸ் பார்த்திருக்கிறார். எம்.ஜி.ஆரிடம் பேச வேண்டும் என்று அவருக்கு ஆசை. என்னதான் இசைமேதையாக இருந்தாலும் சிறுவனான அவருக்கு எம்.ஜி.ஆரிடம் போய் பேசத் தயக்கம். அதுபோன்ற நேரங்களில், எம்.ஜி.ஆரே ஸ்ரீனிவாஸை அழைத்து, அன்புடன் விசாரிப்பார். "அது நான் செய்த பாக்கியம்" என்று பெருமை பொங்கக் குறிப்பிட்டிருக்கிறார் மாண்டலின் ஸ்ரீனிவாஸ்.

எம்.ஜி.ஆரின் வசீகரமான முகமும் பார்ப்பவர்களுக்கு உற்சாகம் அளிக்கும் துடிப்பான நடிப்பும் சிறுவயதிலேயே மாண்டலின் ஸ்ரீனிவாஸை ஈர்த்தது. அவரது படங்களில் இடம்பெற்ற அற்புதமான பாடல்கள், அதற்கான அபாரமான இசை ஆகியவற்றால் சொக்கிப்போனார். எம்.ஜி.ஆரின் தீவிர ரசிகராக மாறிய ஸ்ரீனிவாஸ், மீண்டும் மீண்டும் எம்.ஜி.ஆர் படங்களை பார்த்து ரசிப்பார். அவர் மட்டுமின்றி, டி.வி.யில் எம்.ஜி.ஆர் படங்கள் ஒளிபரப்பானால் அவரது ஒட்டுமொத்த குடும்பமுமே பார்த்து ரசிக்கும்.

1984ம் ஆண்டு கச்சேரிக்காக ஆஸ்திரேலியாவுக்கு ஸ்ரீனிவாஸ் சென்றிருந்தார். அப்போது ஓய்வு நேரங்களில் எம்.ஜி.ஆர் படங்களை பார்த்து தீர்த்தார். எம்.ஜி.ஆரின் ரசிகர் என்பதால், காரில் வெளியூர்களுக்கு ஸ்ரீனிவாஸ் செல்லும்போது எம்.ஜி.ஆர் படப் பாடல்களைத்தான் விரும்பிக் கேட்பார்.

"தன் படத்தில் இடம்பெறும் பாடல்களை எம்.ஜி.ஆரே கேட்டு டியூன்களை ஓ.கே. செய்வார் என்று கேள்விப்பட்டது உண்டு. அந்தப் பாடல்களை கேட்கும்போது, அவரது அபாரமான இசை ரசனையை புரிந்துகொள்ள முடிகிறது" என்று சிறுவயதிலேயே இசைப் புலமை மிக்கவராகத் திகழ்ந்த மாண்டலின் ஸ்ரீனிவாஸ், எம்.ஜி.ஆரின் இசை ரசனையை வியந்து போற்றியுள்ளார்.

இசையை ரசித்தவர் மட்டுமல்ல; இசைபட வாழ்ந்தவர் எம்.ஜி.ஆர்!

தொடரும்..

இந்தத் தலைமுறையினர் பலர் அறிந்திராத செய்தி இது. எம்.ஜி.ஆர் நடித்த 'உலகம் சுற்றும் வாலிபன்' படத்தின் இசையமைப்பாளர் வயலின் இசைக் கலைஞர் குன்னக்குடி வைத்திய நாதன் என்றுதான் முதலில் விளம்பரம் வெளியானது. ஆனால், பின்னர் எம்.எஸ்.விஸ்வநாதன் இசையமைத்தார். 1977ம் ஆண்டு மார்ச் 5ல் வெளியான எம்.ஜி.ஆர் நடித்த 'நவரத்தினம்' படத்துக்கு குன்னக்குடி வைத்தியநாதன் இசையமைத்தார். அவர் இசையமைத்த ஒரே எம்.ஜி.ஆர் படம் 'நவரத்தினம்'.




▶ வெளிச்சம் அறக்கட்டளையின் சமூக சேவைகளில் ஒரு பகுதியாக வ / கனகராயன்குள மகா வித்தியாலய க.பொ.த சா/த மாணவர்களுக்கு தமிழ்ப் பாடத்திற்கான மேலதிக கற்றல் வகுப்பு வெளிச்சம் அறக்கட்டளையின் நிதி ஆதரவுடன் 06.05.2017 முதல் ஆரம்பமாகி தொடர்ச்சியாக ஒவ்வொரு சனிக்கிழமையும் நடைபெறுகிறது. இந் நிகழ்வு பாடசாலையின் அதிபர் திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவரின் தலைமையில் இடம் பெற்றது.

▶ கிழக்கு மாகாண கல்வி அமைச்சு, பாலர் பாடசாலைக் கல்விப் பணியகம் நடாத்திய டெங்கு ஒழிப்பு விழிப்பூட்டல் நடைபேரணி நிகழ்வு கோறளைப்பற்று மேற்கு, கோறளைப்பற்று மற்றும் கோறளைப்பற்று வடக்கு ஆகிய பிரதேச சபைகளின் ஏற்பாட்டில் 2017.05.09ஆந்திகதி திங்கட்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் எஸ். தண்டாயுதபாணி, கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஷிப்லி பாறூக், ஜீ. கிருஸ்ணப்பிள்ளை, இ. நித்தியானந்தம், கிழக்கு மாகாண பாலர் பாடசாலைகள் கல்விப் பணிப்பாளர் பொன் செல்வநாயகம், கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபைத் தவிசாளர் கே.பீ.எஸ். ஹமீட் ஆகியோரும் கலந்துகொண்டனர்.





▶ சாவகச்சேரி பொதுச் சந்தை குபேர கணபதி ஆலயத்தில் சித்திரா பௌர்ணமியை முன்னிட்டு விசேட பூஜையும் சித்திரைக் கஞ்சி வார்க்கும் நிகழ்வும் இடம்பெற்றது. இவ் நிகழ்வினையொட்டி ஆலய முன்றலில் மரக்கறிகள் தொங்கவிடப்பட்டிருந்தன. சாவகச்சேரி பொலிஸ் நிலைய தலைமைக் காரியாலய பரிசோதகர் பீ.எஸ். மினிக்பே தலைமையிலான பொலிஸ் குழுவினர் மற்றும் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் உட்பட பெருமளவு பொது மக்களும் கலந்து கொண்டனர்.

## கடன் தொல்லையைத் தீர்ப்பது எப்படி?

அதிக கடன் தொல்லையால் அவதிப்படுபவர்கள் கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றினால் படிப்படியாக கடன் தொல்லையில் இருந்து விடுபடலாம்: அஸ்வினி, அல்லது அனுஷம் நட்சத்திர நாளில் அசல் தொகையில் ஒரு பகுதியை கொடுத்தால் கடன் சுமை படிப்படியாக குறையும். செவ்வாய்க்கிழமையன்று, செவ்வாய் ஓரையில் கடனை திருப்பித் தருவதால் கடன் பிரச்னை நீங்கும்.


ஞாயிற்றுக்கிழமையில் வரும் சதுர்த்தி திதியன்றும் சனிக்கிழமையில் வரும் சதுர்த்தி திதியிலும் குளிகன் நேரத்தில் அசல் தொகையில் ஒரு பகுதியை கொடுத்தால் கடன் சீக்கிரம் அடை படும்.

அஸ்வினி நட்சத்திர நாளில் மேஷ லக்னம் நடைபெறும்போதும், அனுஷ நட்சத்திர நாளில் விருச்சிக லக்னம் நடைபெறும்போதும் யாரிடம் அதிக கடன்பட்டிருக்கிறோமோ அவரிடம் அசலில் ஒருசிறிய பகுதியை கொடுத்தால் அந்த முகூர்த்த விசேஷம் காரணமாக, உங்கள் கடன் விரைவாக குறையும்.

குளிகை காலத்திலும் கடனை அடைக்கலாம். 'கரிநாள்' என்று சொல்லப்படும் நாட்களிலும் கடன் அடைக்கலாம்.

மரணயோகம் உள்ள நாட்களில் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கலாம். இதனால் யாரிடம் கடன் வாங்கினோமோ அந்த நபரிடமோ, அல்லது அந்த வங்கியிலோ மீண்டும் கடன் வாங்கவேண்டி வராது.

தினசரி பக்தியுடனும் நம்பிக்கையுடனும் கந்த சஷ்டி கவசம் படித்துவர ருண, ரோக, சத்ரு தொல்லை நீங்கும். சஷ்டி திதியன்று முருகன் கோயில்களில் சஷ்டி கவசம் படிக்க, கடன் நிவாரணம் ஏற்படும்.





## விரதத்தின் போது பலகாரங்கள் சாப்பிடலாமா?

விரத காலத்தில், வெறும் தண்ணீர் மட்டுமே அருந்தி உபவாசம் இருப்பதே உயர்வானது. அப்படி இருக்க இயலாதவர்கள் பாலும் பழமும் அருந்தலாம். சமஸ்கிருதத்தில் "ஃபல்" என்றால் பழம் என்று பொருள்படும். "ஆஹார்" என்பது ஆகாரம் அல்லது உணவு என்பதாகும். "ஃபல் + ஆஹார்" = பலஹார் என்று ஆகிறது. பழத்தை உணவாகக் கொள்வதே பலகாரம் என்பதாயிற்று. இதற்குப் பதிலாக சாதம் தவிர்த்த பலவித ஆகாரங்களைச் சாப்பிடுவது தான் "பலகாரம்" என்ற சொல்லின் பொருளாக இக்காலத்தில் கருதப்படுகிறது. இது தவறு. இது உண்மையான விரதம் ஆகாது. ஜீரண உறுப்புகளுக்கு ஓய்வு கொடுத்து, உடலைப் புதுப்பிப்பதே இறை விரதத்தின் நோக்கமாகும். எனவே சிற்றுண்டிகளைச் சாப்பிட்டு விரதம் இருப்பதை விட, பழங்களையும் பாலையும் மட்டும் அருந்தி இறைவனை நினைத்து விரதம் இருப்பதே சிறந்த விரதம் ஆகும்.

## இந்தவார ராசி பலன்கள்

### 14.05.2016 – 20.05.2016

**மேஷம்:** சுக்கிரன் உச்ச பலத்தோடு தொடர்வதால் பணம் கையில் புரளும். தசாபுக்தி யோகமாக இருப்பவர்கள் நான்கு சக்கர வாகனம் வாங்குவார்கள். பிள்ளைகளின் எதிர்காலம் கருதி திட்டங்கள் போடுவீர்கள். பழைய கடனை அடைக்க வழி பிறக்கும். சூரியன் பலமாக இருப்பதால் அரசாங்க விஷயங்கள் அனுகூலமாய் முடியும். நெருங்கிய உறவுகளுடன் வீண் பேச்சுகளை தவிர்க்கவும். பயணத்தின் போது கவனம் தேவை. முடிந்தவரை இரவு பயணத்தை தவிர்க்கவும். பெண்களுக்கு பிறந்த வீட்டில் இருந்து உதவிகள் கிடைக்கும், கண் சம்பந்தமாக சிறு உபாதைகள் வர வாய்ப்புள்ளது.

**ரிஷபம்:** ராசிநாதன் சுக்கிரனின் சுப பலம் காரணமாக எதிர்பார்ப்புகள் நிறைவேறும். செல் போன், டி.வி. போன்ற எலக்ட்ரானிக்ஸ் சாதனங்கள் வாங்குவீர்கள். செவ்வாய் ராசியில் இருப்பதால் அலைச்சல், பயணங்கள், டென்ஷன் வந்து நீங்கும். இல்லறம் இனிக்கும், மனைவி வகையில் ஒத்துழைப்பு உண்டு. புதனின் பார்வை காரணமாக கல்வி வகையில் செலவுகள் இருக்கும். வழக்கில் உங்களுக்கு சாதகமான தீர்ப்பு கிடைக்கும். நண்பர்களுடன் இருந்து சற்று விலகி இருப்பது நல்லது. தொழில், வியாபாரம் சாதகமாக இருக்கும். கடன், பாக்கிகள் வசூலாகும். எதிர்பார்த்த ஆர்டர் கிடைக்கும்.

**மிதுனம்:** செவ்வாய் 6ம் வீட்டை பார்ப்பதால் கைமாத்தாக கொடுத்த பணம் வசூலாகும். சொத்து சம்பந்தமாக முக்கிய முடிவு எடுப்பீர்கள். வழக்கில் இருந்த இழுபறி நீங்கும். சுக்கிரன் உச்சமாக தொடர்வதால் பெண்கள் விரும்பிய ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வார்கள். புதிய வீடு மாறுவதற்கான கால நேரம் வந்துள்ளது. 4ல் உள்ள குருவால் உடல் அசதி, வயிறு உபாதைகள் வந்து நீங்கும். உத்யோகத்தில் மாற்றல் கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு நல்ல தகவல் வரும். ஷேர் மற்றும் வட்டி வரவு மூலம் பணம் வரும். தொழில் செழிப்படையும், வருவாய் அதிகரிக்கும், புதிய வேலையாட்களை அமர்த்துவீர்கள்.

**கடகம்:** செவ்வாயின் பார்வை காரணமாக உத்யோகத்தில் எதிர்பார்த்த விஷயங்கள் சாதகமாக முடியும். எதிர்பார்த்த பணம் புதன் கிழமைக்குள் கைவந்து சேரும். சூரியன் உச்சமாக இருப்பதால் உடல்நலம் சீராக இருக்கும். மனக் கவலைகள் நீங்கும். பயணத்தால் அனுகூலம் உண்டு. சுக்கிரன் சாதகமாக இருப்பதால் புதிய சொத்து வாங்கும் யோகம் உண்டு. ஆன்மிக தாகம் அதிகரிக்கும். அர்ச்சனை, அபிஷேக ஆராதனைகள் என்று செலவுகள் இருக்கும். வியாபாரம் செழிப்படையும். பணப் பிரச்னைகள் தீரும்.



**சிம்மம்:** ராசிநாதன் சூரியனின் பலம் காரணமாக எதையும் திட்டமிட்டு செய்து முடிப்பீர்கள். புதன் அருளால் சுப விஷயங்கள் கூடிவரும். செவ்வாயின் பார்வை காரணமாக வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். உத்யோகத்தில் சாதகமான காற்று வீசும். புதிய பொறுப்புகள், அதிக சலுகைகள் கிடைக்கும். தாய்வழி உறவுகளால் செலவுகள் இருக்கும். பெண்கள் விரும்பிய இரண்டு சக்கர வாகனம் வாங்கி மகிழ்வார்கள். வயிறு சம்பந்தமான உபாதைகளை அலட்சியம் செய்யாதீர்கள். தந்தையிடமிருந்து உதவிகள் கிடைக்கும்.

**கன்னி:** புதனின் பார்வை காரணமாக தடங்கல்கள், மனக் குறைகள் நீங்கும். சனி பகவானின் சஞ்சாரம் காரணமாக திடீர் பயணங்கள் இருக்கும். அடகு வைத்த நகைகளை மீட்பீர்கள். உத்யோகத்தில் இடமாற்றத்திற்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவி இடையே இல்லறம் இனிக்கும். மனைவி வகையில் திடீர் தனலாபம் உண்டு. புதிய வேலைக்கு முயற்சித்தவர்களுக்கு நல்ல செய்தி உண்டு. கலைத்துறையைச் சேர்ந்தவர்களுக்கு நல்ல வாய்ப்புக்கள் தேடி வரும்.

**துலாம்:** பாக்ய ஸ்தான பலம் காரணமாக எல்லா விஷயங்களும் கூடிவரும் பூர்வீக சொத்து சம்பந்தமாக நல்ல முடிவுகள் ஏற்படும். மாமன், மச்சான் மூலம் ஆதாயம் உண்டு. 5ல் கேது தொடர்வதால் கோயில், குளம் என்று சென்று வருவீர்கள், பிள்ளைகளின் போக்கு மனதிற்கு கவலைதரும். செவ்வாயின் பார்வை காரணமாக கொடுக்கல், வாங்கல் சீராக இருக்கும். வண்டி வகையில் செலவுகள் இருக்கும். பயணத்திட்டங்களில் தடை அல்லது திடீர் மாற்றங்கள் இருக்கும்.

**விருச்சிகம்:** ராசிநாதன், செவ்வாய், குரு மங்கள யோகத்தில் இருப்பதால் மனமகிழ்ச்சி, எதிலும் வெற்றி உண்டு. புதுமணத் தம்பதிகள் குழந்தை பாக்கியம் எதிர்பார்க்கலாம். சூரியன் உச்ச பலத்தில் இருப்பதால் உத்யோகத்தில் உங்கள் கை ஓங்கும். சனி அமைப்பின் காரணமாக வீண் செலவுகள் ஏற்படும். 4ல் கேது தொடர்வதால் வீட்டில் பராமரிப்புச் செலவுகள் ஏற்படும். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. அடகு வைத்த நகைகளை மீட்பீர்கள். வியாபாரம் லாபகரமாக நடக்கும். பணத் தேவைகள் பூர்த்தியாகும்.

**தனுசு:** திட, தைரிய, வீர்ய ஸ்தானத்தில் கேது தொடர்வதால் எதையும் சவாலாக எதிர்கொள்வீர்கள். ஆன்மிகத்தில் மனம் லயிக்கும் பிரசித்தி பெற்ற கோயில்களுக்கு சென்று வருவீர்கள். சூரியன் உச்சமாக இருப்பதால் சொத்து வாங்குவதற்கான கால நேரம் வந்துள்ளது. புதனின் பார்வை காரணமாக போட்டி, பந்தயங்களில் வெற்றி பெறுவீர்கள். மகள் திருமண விஷயமாக முக்கிய முடிவு எடுப்பீர்கள். எலக்ட்ரோனிக்ஸ் சாதனங்கள் மூலம் செலவுகள் உண்டாகும்.

**மகரம்:** சுக்கிரனின் அருளால் சுப பலம் உண்டு. நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். பிள்ளைகள் திருமண விஷயமாக நல்ல தகவல் வரும். செவ்வாய் பலம் காரணமாக உடல் நலம், மன நலம் சிறப்பாக இருக்கும். புதிய சொத்து வாங்குவதற்கான யோக நேரம் உள்ளது. கல்வி வகையில் செலவுகள் இருக்கும். மாமியார் உடல்நலத்தில் கவனம் தேவை. சூரியனின் பார்வை காரணமாக அலுவலகத்தில் தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருப்பது நல்லது. வியாபாரம் சீராக இருக்கும். பணப் புழக்கம் உண்டு. பயணத்தால் அனுகூலம் உண்டு.

**கும்பம்:** ராசியில் கேது தொடர்வதால் நிறை, குறை உண்டு. மனம், ஜபம், தியானம் போன்றவற்றில் லயிக்கும். அக்கம், பக்கம் இருப்பவர்களிடம் வீண் வாக்குவாதம் வேண்டாம். உத்யோகத்தில் பதவி உயர்வு பெறுவதற்கான யோகம் உள்ளது. சுக்கிரன் வலுவாக இருப்பதால் பெண் மூலம் லாபம் உண்டு. சொந்த, பந்தங்கள் விசேஷங்கள் காரணமாக அலைச்சல் செலவுகள் இருக்கும். பெண்கள் புதிய இரண்டு சக்கர வண்டி வாங்கி மகிழ்வார்கள். நெருங்கியவர்களின் உடல் நலம் காரணமாக மருத்துவ செலவுகள் வந்து நீங்கும்.

**மீனம்:** சுக்கிரன், குரு சம சப்தம பார்வை காரணமாக மனம் தெளிவடையும். புத்திர பாக்கியத்தை எதிர்பார்த்தவர்களுக்கு இனிப்பான செய்தி உண்டு. கைமாத்தாக கொடுத்த பணம் கை வந்து சேரும். புதன், சூரியன் சேர்க்கை காரணமாக அலைச்சல் சோர்வு உண்டு. வீட்டில் பராமரிப்புச் செலவுகள் ஏற்படும். மனைவி உடல்நலம் பாதிக்கப்படலாம். உத்யோக வகையில் ஊர்விட்டு ஊர் செல்ல நேரிடும். தொழில், வியாபாரம் சீராக இருக்கும். பண வரவு திருப்திகரமாக இருக்கும். புதிய தொழில் தொடங்கும் வாய்ப்பு உள்ளது.

# பால்ராஜின் பெயர் சொன்ன பரந்தன் ஊடறுப்பு தாக்குதல்!

பஷ்மர்

தனது தளபதிகள், இயக்கத்தை வழி நடத்துபவர்கள் தூய நடத்தையுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்பதில் பிரபாகரன் உறுதியான நிலைப்பாடுடையவர். இதற்கு இன்னொரு உதாரணம் சப்தகி. மட்டக்களப்பு படையணியான அன்பரசி மகளிர் தளபதியாக, கிழக்கின் மகளிர் தளபதியாக இருந்தவர் சப்தகி (சாளி).

படையினர் வன்னியை இரண்டாக பிளக்க மேற்கொண்ட ஜெயசிக்குறு படைநடவடிக்கைக்கு எதிரான சமரிற்காக வன்னிக்கு வந்த கிழக்கு படையணிகளுடன் சப்தகியும் வந்து வவுனியா முனைகளில் யுத்தத்தில் ஈடுபட்டார்.

அன்பரசி மகளிரணியை அவர்தான் வழிநடத்தினார். அந்த சமயத்தில் சப்தகி மீது பாலியல் பலவீனம் உள்ளவர் என்ற குற்றச்சாட்டு எழுந்தது. இது பின்னர் விவகாரமாகியபோது, சப்தகியை அமைப்பிலிருந்தே நீக்குமாறு பிரபாகரன் கட்டளையிட்டிருந்தார். இதை கருணா செயற்படுத்தவில்லை. சப்தகியை அன்பரசி படையணி தளபதியிலிருந்து நீக்கி, தன்னுடன் வைத்துக்கொண்டார். சப்தகி விவகாரத்தில் பிரபாகரன் நடந்து கொண்டது இதற்கு ஒரு உதாரணம்.

வரதா விவகாரம் சர்ச்சையான பின்னர் பிரபாகரன் பால்ராஜுடனான தனிப்பட்ட சந்திப்புக்களை தவிர்த்து கொள்ள ஆரம்பித்தார். பால்ராஜிற்கும் நீரிழிவு, இரத்த அழுத்தம், கால்பாதிப்பு என நோய்களும் உச்சமடைய ஆரம்பித்துவிட்டது. இதனால் பால்ராஜ் இயல்பாகவே முன்னணி செற்பாட்டிலிருந்து ஒதுங்க வேண்டியதாகிவிட்டது.

இந்த இடத்தில் பால்ராஜின் சில இயல்புகள் பற்றி குறிப்பிட வேண்டும். அமைப்பில் இருந்த தன்னம்பிக்கைமிக்க, தனது திறனில் நம்பிக்கை அதீதமாக கொண்ட, மிகுதியான திறன் கொண்ட தளபதி அவர்.

விடுதலைப்புலிகளின் தாக்குதல் வீடியோக்களை கூர்ந்து அவதானித்தவர்கள் ஒரு விடயத்தை கவனித்திருக்கலாம். தாக்குதலிற்கு முன்பாக போராளிகள் மத்தியில் தளபதிகள் உரையாற்றுவார்கள். அப்போது எல்லா தளபதிகளும் "தலைவர் திட்டமிட்டார்... தலைவரின் நுணுக்கமான திட்டமிடல்... தலைவர் எதிர்பார்க்கிறார்" என்றுதான் பேசுவார்கள். பொட்டம்மான், சொர்ணம், தீபன், பானு என யாராக இருந்தாலும் இதுதான் பேச்சுப்பாணி. பால்ராஜ் மட்டுமே வித்தியாசமானவர். "நாங்கள் திட்டமிட்டுள்ளோம்... நுணுக்கமாக திட்டமிட்டுள்ளோம்... இயக்கம் எதிர்பார்க்கிறது" என்பார். இதன் அர்த்தம் பிரபாகரனை தவிர்த்து பால்ராஜ் செயற்பட முனைந்தார் என்பதல்ல. பிரபாகரனிற்காக உயிரையும் கொடுக்க பால்ராஜ் தயாராகத்தான் இருந்தார். இதற்கு ஓயாத அலைகள் 2, குடாரப்பு தலையிறக்கத்தில் உயிரையும் பொருட்படுத்தாமல் செயற்பட்ட விதங்கள் சான்று.

நிகழ்வுகள் மற்றும் பிரத்தியேக சந்திப்புக்களில் பிரபாகரனுடன் தளபதிகள் கூடும் சந்தர்ப்பங்களில், பிரபாகரன் போகும்வரை அனைத்து தளபதிகளும் காத்திருப்பார்கள். அவர் போனபின்னர்தான் தளபதிகள் கிளம்புவார்கள். பால்ராஜ் மட்டுமே விதிவிலக்கு. எங்கு போனாலும் தனது பணிகள் முடிந்தால் உடனே கிளம்பிவிடுவார். அந்த சந்தர்ப்பத்தில் பிரபாகரன் அங்கு நின்றாலும், தனது பணி முடிந்தது, இனி அவசியமில்லைதானே என்பதை பிரபாகரனிமே உறுதிசெய்துவிட்டு கிளம்பிவிடுவார். அதுபோல சந்திப்புக்கள், நிகழ்ச்சிகளிற்கு முன்னரே சென்று அலட்டிக்கொள்ளும் மனோபாவமும் அவற்றவர். மிகக்குறிப்பிட்ட நேரத்திற்கே செல்வார். சென்றதும், எதிர்ப்படும் தளபதிகளிடம் அப்போதைய களநிலைமைகளை பற்றி ஓரிரண்டு வசனம் மட்டுமே பேசிக் கொள்வார். வேறு எதையும் பேசுவதில்லை.

பிரபாகரனிற்கு அளவிற்கு அதிகமாக ஆராத்தி எடுக்க அவர் விரும்புவதில்லை. விசுவாசமென்பது செயற்பாட்டில் இருக்க வேண்டுமென நினைப்பவர். அதனால்தான் பிரபாகரன் குறிப்பிடும் நெருக்கடியான களங்களை பால்ராஜ் பொறுப்பேற்பார்.

ஓயாதஅலைகள் 2 நடவடிக்கை மூலம் கிளிநொச்சியை புலிகள் கைப்பற்றினார்கள். 1998 செப்ரெம்பரில் இது நடந்தது. இதே வருடத்தின் தொடக்கத்தில் பெப்பரவரி கிளிநொச்சி மீது ஒரு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் வெற்றியளிக்கவில்லை. இந்த அனுபவத்தில் இருந்து, ஓயாதஅலைகள் நடவடிக்கை திட்டதிடப்பட்டது. கிளிநொச்சிக்கு பின்னால் வால்போல் நீண்டிருந்த பரந்தன், ஆனையிறவு, யாழ்ப்பாணத்திலிருந்து வரும் பின்தள உதவிகளை கட்டுப்படுத்தாதவரை கிளிநொச்சியை வீழ்த்த முடியாதென்பதை உணர்ந்த புலிகள், பரந்தனில் ஒரு பலமான தடுப்பை ஏற்படுத்தி, பின்தள உதவியை தடுக்க திட்டமிட்டனர். அது சாதாரண பணியல்ல. இறுக்கமான இராணுவ அரணிற்குள் இரகசியமாக ஊடுருவி அரண் அமைப்பது, இரண்டு பக்கத்தாலும் நடத்தப்படும் இராணுவ தாக்குதலை முறியடிக்க வேண்டும். அப்படி முறியடித்தால்தான் அந்த அணி உயிர்தப்பலாம். இந்த நடவடிக்கையை வெற்றிகரமாக செய்தால்தான் கிளிநொச்சி சமர் வெற்றியடையும்.

தாக்குதல் திட்டமிடப்பட்டு, ஒவ்வொரு நடவடிக்கையும் ஒவ்வொருவரிடம் கையளிக்கப்பட்டது. பரந்தனிற்கு அண்மையில் ஊடுருவி கூறாக்கும் நடவடிக்கையை செய்ய முடியுமா என பிரபாகரன் கேட்க, மறுபேச்சில்லாமல் சிரித்த முகத்துடன் பால்ராஜ் ஏற்றுக்கொண்டார்.

கிளிநொச்சியில் படைமுகாம் மீதான தாக்குதலை தளபதி தீபன் வழிநடத்தினார். பரந்தன் ஊடறுப்பை தளபதி பால்ராஜ் வழிநடத்தினார். யாழ்செல்லும் படையணி, மாலதி படையணி, மற்றும் சில ஆண்கள் படையணி பிரிவுகளுடன் பால்ராஜ் அணி, கிளிநொச்சிக்கும் பரந்தனிற்கும் இடையில் இரவோடு இரவாக ஊடுருவி நிலையெடுத்தது. உரப்பை, மண்வெட்டி கொண்டு சென்றனர். கிளிநொச்சி மீது நள்ளிரவிற்கு பின்னர் தாக்குதல் ஆரம்பிப்பதற்கு முன்னர் உரப்பைகளில் மண்மூட்டை அமைத்து அதை அரணாக்க வேண்டும். அருகிலுள்ள படையினருக்கு சத்தம் கேட்கவும் கூடாது. பால்ராஜின் அணி அதை செய்தது.

கிளிநொச்சி மீது தாக்குதல் ஆரம்பித்ததும் பரந்தனிலிருந்து படையினர் உதவி அணிகளை அனுப்ப முயன்றனர். கிளிநொச்சியிலிருந்து காயமடைந்தவர்களை பரந்தனிற்கு கொண்டு செல்ல முயற்சிக்கப்பட்டது. சமநேரத்தில் இரண்டு முனைகளிலும் புலிகளின் அணி மோதியது. பரந்தனில் இருந்து ஒரு சிப்பாய்கூட கிளிநொச்சிக்கு செல்ல முடியவில்லை.

கிளிநொச்சியில் படைமுகாம் வீழ்ந்து, பரந்தனின் முன்தள படைமுகாமும் வீழ்ந்தபின்னர் எஞ்சிய படையினர் புலிகளின் தடுப்பரணை உடைத்துக் கொண்டு ஆணையிறவுப்பக்கமாக தப்பியோட முயன்றனர். ஆயிரக்கணக்கான படையினர் இறப்பவர் போகட்டும். எஞ்சுபவர்கள் போய் சேர்வோம் என புலிகளின் அரணை நோக்கி ஓடினார்கள். கிளிநொச்சி பக்கத்தில் அவர்களின் பின் பக்கத்தில் அப்படி அடி. தப்பியோடிவரும் படையினரை குருவி சுடுவதை போல போராளிகள் சுட்டு வீழ்த்தினார்கள். அலைஅலையாக படையினர் தப்பிவருவதால் ஒரு கட்டத்தின்மேல் சுடசுட படையினர் போராளிகளை நெருங்கினார்கள். இருதரப்பும் கைகலப்பிலும் ஈடுபட்டு மளவிற்கு நெருக்கமான மோதல் நடந்தது. புலிகளின் அரணை கைப்பற்ற படையினர் ஓடிவரவில்லை. அரணை கடந்து ஆனையிறவு பக்கமாக தப்பியோடி செல்லவே முயன்றனர்.

லெப்.கேணல் செல்வி ஒரு பகுதியில் அணியை வழிநடத்திக் கொண்டிருந்தார். அவர் வழிநடத்திய பக்கத்தால் படையினர் அதிகமாக தப்பிச்செல்ல முயன்றனர். காரணம். பெண் போராளிகளின் பக்கத்தால் தப்புவது இலகு என நினைத்தனர். பெண்களின் நிலைப்பக்கங்களில் படையினர் "சொறிவது" வழக்கம்தான்.

இந்த நினைப்பே அந்த முனையில் படையினருக்கு பேரிழப்பை கொடுத்தது. செல்வியின் அணி மரணஅடி கொடுத்தது. செல்வி நின்ற நிலையிலும் கடும் மோதல் நடந்தது. ஒருகட்டத்தில் செல்வியின் நிலையில் நின்றவர்களிடம் வெடிபொருள் தீர்ந்து விட்டது. படையினர் நெருக்கமாக வரத்தொடங்கிவிட்டனர். தனது நிலையை கடந்து படையினர் தப்பிச்செல்லக்கூடாது என்பதே செல்வியின் ஒரே நோக்கம்.

அந்த சமயத்தில் புலிகளின் குட்டிசிறி மோட்டார்அணி, மணிவண்ணன் ஆட்லறி அணி என்பன சிறப்பாக செயற்பட தொடங்கிவிட்டன. களமுனை போராளிகளும், பின்னணி மோட்டார் அணிகளும் தொழில்நுட்ப ரீதியில் இணைக்கப்பட்டு, களமுனைக்கு மோட்டார்செல் தேவையெனில் தேவையான இடத்தில் ஒரு இஞ்சி நகராமல் மிக துல்லியமாக எறிகணையால் தாக்கும் வல்லமையை புலிகள் பெற்றிருந்தனர். ஜி.பி.எஸ் தொழில்நுட்பத்தை பாவித்து புலிகள் இதனை செய்தனர். தமது காவலரணிற்குஎதிராகபடையினர் வந்தால், மோட்டார் அணியுடன் இணைப்பை ஏற்படுத்தி, படையினரின் தலையில் எறிகணையை வீழ்த்தும் வல்லமையை புலிகள் பெற்றிருந்தனர். புலிகளின் இந்த வல்லமையை முறியடிக்காத வரை யுத்தத்தில் வெல்ல முடியாதென்பதை உணர்ந்து, புலிகளின் ஆட்லறி எறிகணை கொள்வனவை இறுதியுத்த சமயத்தில் அரசு தடுத்திருந்தது.


(தொடரும்)


பால்ராஜின் உடலிற்கு மலர்மாலை அணிவிக்கும் பிரபாகரன்


இளமைக்கால பால்ராஜ் (1990)


லெப்.கேணல் செல்வி





# உடற்பயிற்சி என்பது உடலை கஷ்டப்படுத்துவதா?

உடற்பயிற்சிக்குள் நுழையும் முன் உடலை உடற்பயிற்சிக்கு ஏற்பத் தயார்படுத்த வேண்டியது மிகவும் முக்கியம். கைகள், கால்கள், கழுத்து, எலும்பு மூட்டுகள், தோள்பட்டை என உடலின் ஒவ்வொரு பாகத்தையும் வார்ம் அப் மற்றும் ஸ்ட்ரெச்சிங் பயிற்சிகள் செய்து தயார்படுத்திய பிறகே, உடற்பயிற்சியில் இறங்க வேண்டும். இது, தசைப்பிடிப்பு, எலும்பு மூட்டுப் பாதிப்பு உள்ளிட்ட பிரச்சனைகளில் இருந்து உடலைக் காத்து உடற்பயிற்சி செய்வதற்கான ஆர்வத்தை மேம்படுத்துகிறது.

சிக்ஸ் பேக் வைக்க வேண்டும். கட்டுமஸ்தான உடல் வேண்டும் என்று ஆசைப்படுபவர்கள்கூட தங்கள் கால்களைக் கவனிப்பது இல்லை. ஓடுவது, சைக்கிளிங் செய்வது, ஜாகிங் போவது போன்ற உடற்பயிற்சிகள் கால்களை முழுமையான வலுவாக்காது. எனவே, கால்களை வலுவாக்க, செய்ய வேண்டிய பிரத்யேகப் பயிற்சிகளை மேற்கொள்ளுங்கள். கால்கள் வலுவாகும்போது முழு உடலையும் தாங்கும் திறன் மேம்படுவதால், மேல் உடல் வலுவாவது எளிதாகிறது.

உடற்பயிற்சி என்பது அன்றாடம் செய்ய வேண்டியது. அது ஒரு வேலை என்பதைவிட அது ஒரு வாழ்க்கைமுறை என்ற புரிதல் அவசியம். உடற்பயிற்சியைச் சில நாட்கள் செய்ததும் மனம் அதைவிட்டுவிட ஏதாவது காரணங்கள் தேடும். சளிப்பிடித்திருக்கிறது, மழை பெய்கிறது, வானிலை மோசம், வேலை நேரத்தில் உடல் சோர்வாகிறது, உடல் வலிக்கிறது, நேர மேலாண்மை பாதிக்கப்படுகிறது எனக் காரணங்களை உருவாக்கி உடற்பயிற்சி செய்வதை நிறுத்தத் தூண்டும்.

உடற்பயிற்சியைக் கைவிடுபவர்களில் பெரும்பாலானோர் இந்த தொடக்கநிலை தடுமாற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள்தான். எனவே, விழிப்பாய், பிடிவாதமாய் இருங்கள். எந்தக் காரணத்துக்காகவும் உடற்பயிற்சியைத் தவிர்க்காதீர்கள். ஓரிரு நாட்கள் தவறினாலும் மறுநாள் உடற்பயிற்சிக்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் தீவிரமாக இருங்கள்.

உடற்பயிற்சி என்பது உடலை வருத்துவது (கஷ்டப்படுத்துவது) அல்ல. உங்களுக்கு மகிழ்ச்சியூட்டும், ஆர்வத்தைத் தூண்டும் பயிற்சிகளை முதலில் செய்யத் தொடங்குங்கள். அதற்காக உடல் சோர்ந்துபோகும்படி வெகுநேரம் அந்தப் பயிற்சியையே செய்துகொண்டு இருக்காதீர்கள்.

எந்தப் பயிற்சி செய்தாலும் அதை நேசித்துச் செய்வதும், உடலும் மனமும் முழு ஈடுபாட்டில் இருப்பதும் முக்கியம். வருத்திக்கொண்டு பயிற்சி செய்யும்போது, உடல் சோர்வடைவதால் உற்சாகமும் விரைவில் குறைந்துபோய் உடற்பயிற்சியையே கைவிட நேரிடும்.

# வெஸ்டர்ன் கழிவறை முறையால் ஏற்படும் பாதிப்புகள்!

குத்தில் கால்கள் படும்படி அமர்தல் என்பது தான் மனிதர்களின் இயற்கையான நிலையாகும். தாயின் கருவறையில் இருந்தே இது தொடர்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. குத்தை வைத்து (Squat) அமர்தல் என்பது இன்று நாம் கேலியாக கண்டாலும் கூட, முன்னோர்கள் இதை ஒரு ஆசனம் போன்று தான் பின்பற்றி வந்துள்ளனர்.

இது, குடல், வயிறு போன்ற உடல் பாகங்களின் ஆரோக்கியத்தை காக்கும் நிலை ஆகும். மேலும் இது மலம் கழிக்கும் போது எந்த சிரமும் இன்றி இலகுவாக கழியவும் பயனைளிக்கிறது.

கடந்த 10 வருடங்களாக தான் வயிறு சார்ந்த பிரச்சனைகள் மற்றும் மலம் கழிக்க சிரமப்படும் பிரச்சனைகள் அதிகரித்து வருவதாகவும், இது நீண்ட நாட்களாக இருந்து வருகிறது என்று கூறியும் நிறைய பேர் மருத்துவமனைக்கு வருகிறார்கள் என மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

நாம் வெஸ்டர்ன் கழிவறை பயன்படுத்த ஆரம்பித்ததில் இருந்து மூலநோய் (hemorrhoids), குடல் (appendicitis), மலச்சிக்கல் (constipation), எரிச்சல் கொண்ட குடல் நோய் (irritable bowel syndrome) போன்ற உடல்நல கோளாறுகள் அதிகரித்து வருகின்றன.

டயட் மற்றும் வாழ்வியல் முறை மாற்றத்தோடு வெஸ்டர்ன் கழிவறையும் இந்த பிரச்சனைகளுக்கு ஓர் முக்கிய காரணம் என சில ஆய்வுகளின் மூலம் மருத்துவ ஆய்வாளர்கள் கண்டறிந்தனர்.

வெஸ்டர்ன் கழிவறை பயன்படுத்துவதால் நாள்பட இது மலகுடத்தை பாதிக்கிறது. அதன் இயல்பு வடிவம் / நிலை தடைப்படுவதால் மலம் சார்ந்த பிரச்சனைகள் ஏற்படுகின்றன.






# குழந்தைகளுடன் பொழுதுபோக்க பெற்றோருக்கு 10 டிப்ஸ்

இன்றைக்கு பெரும்பாலான வீடுகளில் கணவன், மனைவி இருவருமே வேலைக்குச் செல்வதால், குழந்தைகளுக்கும் டைம்டேபிள் போட்டு நேரம் ஒதுக்கும் நிலை உண்டாகிவிட்டது. எனவே, குழந்தைகளுடன் இருக்கும் நேரத்தை குவாலிட்டியாக செலவிடுவது எப்படி என்று பார்க்கலாம்.

- வயிற்றில் கருவாக உருவாகி 20 வாரங்களிலேயே தாயைச் சுற்றிலும் நடக்கும் உரையாடல்கள், சத்தங்களை கரு உணர ஆரம்பிக்கிறது. எனவே, தாய், தந்தையர் இருவரும் நேரம் கிடைக்கும் போதெல்லாம் வயிற்றில் இருக்கும் கருவுடன் பாசிடிவ்வாக பேசுங்கள்.
- குழந்தை பிறந்த பின்னர், 'அம்மா சமைக்கப் போகிறேன்; சமத்தா தூங்குங்க' என்றும், 'அம்மா வந்துட்டே இருக்கேன்; அழாதீங்க' என்றும் அடிக்கடி பேசிக்கொண்டே இருங்கள். இது, உங்கள் அருகாமையை பிஞ்சுக்கு உணர்த்திக்கொண்டே இருக்கும்.
- தூங்கவைக்கும்போது தட்டிக் கொடுத்தும், தாலாட்டுப் பாடியும் தூங்க வையுங்கள், கதைகள் சொல்லுங்கள். இது,தாய்க்கும் சேய்க்குமான பாசத்தை அதிகரிக்கும். தந்தையும் இந்தப் பணியைச் செய்ய வேண்டும்.
- பிள்ளைகள் பள்ளியில் இருந்து வந்ததுமே, அல்லது நீங்கள் பணி முடிந்து வந்ததுமே, அன்று பள்ளியில் நடந்த விஷயங்களை உற்சாகமாகக் கேளுங்கள். அவர்கள் சொல்வதில் இருந்து கேள்விகள் கேட்டு உங்கள் ஆர்வத்தையும் அக்கறையையும் உணர்த்துங்கள்.
- அவர்களுடன் சேர்ந்து பயணிக்கும் நேரங்கள், ஓரிடத்தில் காத்திருக்கும் நேரங்களில் விடுகதைகள் போடுவது அல்லது வார்த்தை விளையாட்டு விளையாடுங்கள். இது, அவர்களின் மொழித்திறனை வளர்க்கும்.
- வாரம் ஒருமுறையாவது பிள்ளைகளோடு இயற்கையை ரசித்தவாறு நிலாச் சோறு சாப்பிடுங்கள். வீட்டுக்குள் சாப்பிடும் நேரத்திலும் டி.வி.யை அணைத்துவிட்டுப் பேசிக்கொண்டே சாப்பிடுங்கள். அந்தப் பேச்சில் உறவுகள், நண்பர்கள் பற்றி பகிர்ந்துகொள்ளுங்கள்.
- புத்தாண்டு மற்றும் பிள்ளைகளின் பிறந்த நாட்களில் கடந்த வருடங்களில் குழந்தைகள் கற்றுக்கொண்டதைப் பகிரச் சொல்லிக் கேளுங்கள். இந்த வருடத்துக்கான சின்னச் சின்ன இலக்குகள், புதிய நல்ல பழக்கங்களை அவர்களுக்குள் விதையுங்கள்.
- குழந்தைகளுடன் விளையாடும் சந்தர்ப்பங்களில் மொபைல் கேம்களைத் தவிருங்கள். கரம், செஸ் போன்ற விளையாட்டுக்களை விளையாடுங்கள். இது, அவர்களின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்துக்கு நன்மை அளிக்கும்.
- விசேஷ நாட்களில் குழந்தைகளின் நண்பர்களையும் வீட்டுக்கு அழைக்கலாம். நண்பர்கள், குழந்தைகள் மற்றும் பெற்றோர்கள் இணைந்து விளையாடி மகிழுங்கள். அவர்களின் நண்பர்களையும் கருத்துகளையும் நீங்கள் மதிப்பதை உணர்த்துங்கள்.
- வருடத்துக்கு ஒருமுறை அல்லது இரண்டு முறையாவது குழந்தைகள் மனதில் நினைப்பதைக் கடிதமாக பெற்றோருக்கு எழுதச் சொல்லுங்கள். ஊரில் இருக்கும் தாத்தா, பாட்டி, அத்தை, மாமா போன்ற உறவுகளுக்கும் அன்பை வெளிப்படுத்தும் கடிதத்தை எழுதச் சொல்லி ஊக்கப்படுத்துங்கள்.


# பிராண்டட் நாப்கினை விட சிறந்தது!

ஒரு பெண் தன் வாழ்நாளில் சராசரியாக உபயோகப் படுத்தி தூக்கி எறியும் மாதவிடாய் நாப்கின்களின் எண்ணிக்கை எத்தனை தெரியுமா? சுமார் 10,000 நாப்கின்கள். பயன்படுத்தி தூக்கி எரியும் நாப்கின்களை ஒரேயடியாக மட்கச் செய்து ஒழிக்க வகையில்லாததால் சூழலியலாளர்களிடையே தற்போது மீண்டும் துணியாலான மறு உபயோகத்துக்கு உகந்த நாப்கின்களுக்கான வரவேற்பு அதிகரித்துள்ளது. இவர்கள் தற்போது உபயோகப் படுத்துமாறு பரிந்துரைத்துக் கொண்டிருப்பது துணியாலான நாப்கின்கள் மற்றும், மாதவிடாய் கப்புகளையே.

மென்ச்ச்சுரல் கப்புகள் என்று அறியப்படும் மாதவிடாய் கப்புகளை மாதவிடாய் காலங்களில் எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதற்கு விளக்கமளிக்க தனி இணையப் பக்கங்கள் நிறைய உண்டு. கூகுளில் மென்ச்சுரல் கப் என்றூ டைப் செய்து பாருங்கள் படங்களாகவும், வீடியோக்களாகவும் விளக்கங்கள் கொட்டிக் கிடக்கின்றன. ஆனால் மகப்பேறு மருத்துவர்களை அணுகி அவர்களிடம் ஆலோசித்ததின் பின் இவற்றைப் பயன்படுத்துவது உத்தமம் என்று தோன்றுகிறது.

துணி நாப்கின்களின் சிறப்பு பயன்படுத்தி விட்டு தூக்கி எறிய வேண்டியதில்லை. துவைத்து, சுத்தப்படுத்தி மறுமுறை உபயோகிக்கலாம் என்பதே! இப்போது மார்கெட்டில் பிரபலமாக விற்பனையாகிக் கொண்டிருக்கும் பிராண்டட் நாப்கின்கள் அனைத்துமே ஒரு முறை மட்டுமே உபயோகிக்கத் தகுந்த தன்மை கொண்டவை. பயன்படுத்தி தூக்கி எறியும் போது அதற்குப் பின் அவை என்ன ஆகும்?

பூமியின் அடியில் மண் அடுக்குகளில் இத்தகைய நாப்கின்கள் மற்றும் மட்காத பிளாஸ்டிக் கழிவுகளால் ஆன ஒரு உறை தோன்றி மண்ணின் சுவாசத்தை தடுத்து நிறுத்துகின்றன. நாப்கின் உறைகள் மற்றும் மட்காத பிளாஸ்டிக் கழிவுகள் சேர்ந்து மண்ணின் மேற்புறத்தை அடைத்துக் கொள்வதால் மழைக்காலங்களில் நீர் பூமிக்குள் உறியப்படுவது தடை படுகிறது. இதனால் நிலத்தடி நீர் மட்டம் குறைகிறது. அதுமட்டுமல்ல மண்ணின் ஈரப்பதம் தொடர்ந்து குறைந்து கொண்டே வந்தால் நிலம் வறண்டு புவி வெப்பமயமாதம் அதிகரிக்கிறது. இதனால்தான் துணி நாப்கின்களை இப்பொழுது பரிந்துரைக்கிறார்கள்.





# அரும்பு மீசை பிரச்சனைக்கு விடைகொடுங்கள்!

உதட்டின் மேல் மீசை போல் முடி முளைத்து உங்களின் அழகையே கெடுக்கிறதா? வீட்டிலேயே இந்த முயற்சிகளை செய்து பாருங்கள். எப்போதும் அழகு நிலையங்களுக்கு சென்று தற்காலிக தீர்வு காண்பதை விட, இயற்கை பொருட்களைக் கொண்டு எப்படி நிரந்தரமாக போக்குவது என்று காண்போம்.

குப்பை மேனி இலை, வேப்பங்கொழுந்து, விரலி மஞ்சள் ஆகியவற்றை சேகரித்து கொள்ளவும். இவற்றை மாவு போல் நன்றாக அரைத்து, படுக்கைக்கு போகும் முன் மேல் உதட்டில் பூசவும். தொடர்ந்து இரு வாரங்கள் பூசி வந்தால், ரோமம் அல்லது மீசை போல் இருக்கும் முடி உதிர்ந்து உதடுகள் பளிச்சிடும்.

கடலை மாவு, தயிர் மற்றும் மஞ்சள் தூள் ஆகியவற்றை ஒன்றாக கலந்து பேஸ்ட் செய்து, முகத்தில் தடவி நன்கு உலர வைத்து பின் கழுவ வேண்டும். இதனால் முகத்தில் வளரும் முடியின் வளர்ச்சி படிப்படியாக குறையும்.

உருளைக்கிழங்கு ஒரு சிறப்பான ப்ளீச்சிங் ஏஜெண்ட். இதனை துவரம் பருப்பு பொடியுடன் சேர்த்து கலந்து முகத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து பின் கழுவினால், நாளடைவில் முகத்தில் உள்ள முடியின் நிறமானது மங்க ஆரம்பிக்கும்.

ஓட்ஸை பொடி செய்து, அத்துடன் வாழைப் பழத்தை மசித்து சேர்த்து கலந்து, முகத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து, குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். இந்த முறையை வாரம் இரண்டு முறை செய்ய வேண்டும்.

30 கிராம் சர்க்கரையை எலுமிச்சை சாறு சேர்த்து, சிறிது தண்ணீர் ஊற்றி கலந்து, முகத்தில் முடி வளரும் இடத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து கழுவ வேண்டும். இந்த முறையை வாரம் ஒரு முறை தொடர்ந்து செய்து வந்தால், முடியின் வளர்ச்சியானது தடைபடும்.

# உடல்நலம் பற்றி கூறும் மாதவிடாய்

பொதுவாகமாதவிடாய்சுழற்சி28முதல் 35 நாட்கள் இடைவெளிக்குள் இருப்பது அவசியம். இதனை சரியாக கணக்கிட மாதவிலக்கான முதல் நாளில் இருந்து கணக்கில் கொள்ளவும். இதே இடைவெளிக்குள் உங்களுக்கு அடுத்த மாதமும் மாதவிடாய் தோன்றினால் நீங்கள் ஆரோக்கியமாக இருப்பதாக அர்த்தம். இல்லையெனில் உடனடியாக மருத்துவரை அணுகவும்.

வயதிற்கு ஏற்றவாறு மாதவிடாய் காலம் மாறுபடும். பொதுவாக 3 நாட்களில் இருந்து 7 நாட்கள் வரை இருந்தால் அது சீரான காலம். அதிலும், 2 அல்லது 3 வது நாட்களில் அதிக உதிரப்போக்கு தோன்றும் அல்லது கூடுதல் நாட்கள் கூட உதிரப்போக்கு இருக்கலாம். அதனை கண்டு அஞ்ச தேவையில்லை.

மாதவிடாயின் போது சராசரியாக உதிரப்போக்கு அதிகமாக இருப்பதாக கருதுவீர்கள். ஆனால் உங்கள் உடலில் இருந்து ஒரு கப் உதிரம் மட்டுமே வெளியேறும். ஒரு நாளைக்கு 2 முதல் 3 சானிட்டரி நாப்கின்கள் பயன்படுத்தினால் அது சாதாரணம்.

அதற்கு மாறாக 6 முதல் 8 நாப்கின் வரை பயன்படுத்தினால் அது ரத்தசோகைக்கான அறிகுறி என கருதவும். அதேபோல் ஒரு நாளைக்கு ஒரே ஒரு நாப்கின் பயன்படுத்துவதும் சிக்கல் தான். உதிரப்போக்கில் மாற்றம் ஏற்பட்டால் அது ஏதேனும் மருந்துக்களின் பக்க விளைவாகவோ, தொற்றாகவோ அல்லது மூளை கட்டி ஏற்படுவதற்கான அறிகுறியாகக் கூட இருக்கலாம்.


பெண்கள் யாரும் மாதவிடாய் நிறம் குறித்து கவனிப்பதில்லை. அது மிகவும் முக்கியம். இளஞ்சிவப்பு நிறமாக இருக்கும் பட்சத்தில் அது சரியான மாதவிடாய் சுழற்சியை குறிக்கும். திடீரென்று கருஞ்சிவப்பாகவோ, கருப்பாகவோ இருந்தால் உடலில் ஹார்மோன் குறைபாடு உள்ளதற்கான அறிகுறி.

மாதவிடாயின் போது வலி ஏற்பட்டால் மருத்துவரை ஆலோசிப்பது நல்லது. ஓரிரு முறை வலி இருந்தால் கவலைக் கொள்ள வேண்டியதில்லை. ஆனால் அடுத்தடுத்த மாதவிடாயில் வலி இருந்தால் சிகிச்சை பெறுவது கட்டாயம்.

மாதவிடாய் இல்லாத நேரத்தில் உதிரப் போக்கு உள்ளதா என்பதை கவனிக்கவும். ஏனெனில் புண் அல்லது உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டிருந்தால் மாதவிடாய் இல்லாத நேரத்தில் உதிரப்போக்கு ஏற்படும். எனவே பெண்கள் தங்களது மாதவிடாயை ஒரு பொருட்டாக எண்ணாமல் ஒவ்வொரு விஷயங்களையும் கருத்தில் கொள்வது அவசியம்.



# கிளிட்டோரிஸ்: ஆபிரிக்காவிலிருந்து ஆசியா வரை..



ஸர்மிளா ஸெய்யித்

**கொ**டுமையான இந்தப் பண்பாட்டுப் பழக்கம் 200 வருடங்களாக இலங்கையில் இஸ்லாமியர் வாழும் பகுதிகளில் புழக்கத்தில் இருக்கலாம் என்பதாக கிளிட்டோரிஸ் நீக்கம் குறித்து 1996 இல் SRI LANKA CULTURE: Mothers Watch as Daughters are Circumcised என்ற கட்டுரையில் ரேணுகா சேனநாயக்க பதிவு செய்துள்ளார். அரேபிய வர்த்தகர்கள், மனைவியர்களாக அழைத்துக் கொண்டு வந்த மலேசியப் பெண்களால் கிளிட்டோரிஸ் நீக்கம் இலங்கை இஸ்லாமியர்களின் பண்பாட்டில் இடம்பிடித்திருக்கலாம் என்றும் ரேணுகாசேனநாயக்க தனது கட்டுரையில் பதிவு செய்கின்றார்.

'பெண்கள் முஸ்லிம் ஆராய்ச்சி முன்னணியின்' தலைவி ஜெஸீமா இஸ்மாயில், சமூகச் செயற்பாட்டாளர் டொக்டர் மரீனா றிபாய் போன்றோரினது கருத்துகளும் ரேணுகா சேனநாயக்கவின் கட்டுரையில் பதிவாகியுள்ளன. ஜெஸீமா இஸ்மாயில் இந்நடைமுறையினை "Brutal Practice" கொடூரமான நடைமுறை என்பதாகப் பதிவு செய்துள்ளார்.

1997 இல், பிறப்புறுப்புச் சிதைப்பு விவகாரத்தை உலகத்தின் வெளிச்சத்துக்கு கொண்டு வந்த முதல் பெண் வாரிஸ் டைரி. இவர் ஆபிரிக்கத் தேசத்தின் சோமாலியா நாட்டிலிருந்து பால்ய வயதுத் திருமணத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காகச் சொந்த நாட்டை விட்டுத் தப்பித்து வெளியேறியவர். முன்னணி மொடல் அழகியான வாரிஸ், உலகின் பிரபல ஃபேஷன் பத்திரிகையான 'மேரி க்ளேய்ர்'க்கு அளித்த நேர்காணலே பல்லாயிரம் வருடங்கள் பழமையான பிறப்புறுப்புச் சிதைப்பு விவகாரத்தை பொது அரங்கில் விவாதப் பொருளாக மாற்றியது. இவரது தன் வரலாற்று நூல் Dessert Flower உலகின் கவனிப்பைப் பெற்றுக் காட்சித் திரைக்கும் கொண்டு வரப்பட்டது. வாரிஸ், தன் வரலாற்று நூலில், தனது பிறப்பு உறுப்பு சிதைக்கப்பட்டதை விபரித்திருக்கிறார். பெண் உறுப்பின் உதடுகளில் அகேஷியா மரத்தின் முட்களை ஒவ்வொன்றாகச் செருகி துளையிடுகின்றாள் மருத்துவச்சி. பிறகு வெள்ளை நூல் கொண்டு உறுப்பைத் தைத்துவிடுகின்றாள். சிறுநீர் கழிக்கப் போதுமான துவாரத்தை வைத்துவிட்டு மீதிப் பிறப்புறுப்பு மூடப்படுகின்றது.

ஆபிரிக்க நாடுகளில் 93 விழுக்காடு பெண்களுக்கு இவ்வாறு பிறப்புறுப்புச் சிதைக்கப்படுகின்றது. இவர்கள் வாழ்நாள் முழுவதும்பெருந்துயரைச்சுமக்கவேண்டும். மாதவிடாய் காலங்களில் இவர்களது வலி பன்மடங்கு பெருகுகின்றது. கட்டுப்படுத்த முடியாத வலியில் அவர்கள் துடித்துஅழும்போது, மாதவிடாயை நிறுத்த மருத்துவர்கள் கருத்தடை மாத்திரைகளைத் தருகின்றனர்.

மருத்துவிச்சியால் தையலிட்டு மூடப்பட்ட பிறப்பு உறுப்பு, முதலிரவின் போது திறந்து விடப்படுகின்ற வழக்கம் ஆபிரிக்கா தேசத்தின் சில நாடுகளில் வழக்கத்திலிருந்து வருகின்றது. தையலிடப்பட்ட பெண்ணுறுப்பை மீண்டும் திறப்பது, தையலிடுவதைவிடவும் கொடிய அனுபவம். வாரிஸ் டைரி மருத்துவமனையில் சத்திரசிகிச்சை செய்தே தனது பெண்ணுறுப்பைத் திறந்து கொண்டதாக Dessert Flower என்ற தன் வரலாற்று நூலில் குறிப்பிடுகின்றார். லண்டன் போன்ற மேலைத்தேய நாடொன்றுக்கு வாழவந்த அவருக்கு இதுசாத்தியமாகின்றது. ஆபிரிக்க நாட்டிலேயே வாழ்கின்ற பெண்களுக்கு தைக்கப்பட்ட பெண்ணுறுப்பை பாதுகாப்பான மருத்துவ முறையில் திறப்பது சாத்தியப்படக்கூடியதில்லை.

பெண்ணுறுப்பின் இறுக்கமான துளையை ஆண்கள் விரும்பும் சந்தர்ப்பங்களில், தையலிட்டு மூடப்பட்ட பகுதியைத் திறக்காமலே வாழ்நாள் நெடுகிலும் வாழும் பெருங் கொடுமையைப் பெண்கள் ஏற்றுக் கொள்கின்றனர். இந்தப் பெண்கள் பாலியல் இன்பத்தை அனுபவிக்க முடியாது, சிறு துளையில் ஆண் உறுப்பைச் செலுத்துகின்றபோது உண்டாகின்ற வலியில் கதறுவதும், பற்களைக் கடித்துச் சகித்துக்கொள்வதுமே இவர்கள் அறிந்த பாலுணர்வு இன்பம். இப்படியானவர்கள் பிள்ளைப் பேற்றின்போது வலி தாங்கமுடியாமல் தாயும், சிறு துவாரம் வழியாக உலகத்தைப் பார்க்கமுடியாது மூச்சுத் திணறி சிசுவும் இறந்துபோகும் கொடுமைகள் ஆபிரிக்க நாடுகளில் தினமும் நடைபெறுகின்ற, அன்றாட நிகழ்ச்சிகள்.

பெண்ணுறுப்புச் சிதைப்பு, முழுமையாகவும் பகுதியாகவும் நடைமுறையிலிருந்து வருகின்றது. இதில் மூன்று வகையான முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

1. பெண் உறுப்பின் உள் முனையை (கந்து) செதுக்குதல் / நீக்குதல்

2. முனை மற்றும் புழையின் இரு பக்கத்திலும் உள்ள பெண் உறுப்பின் உதடுகளை வெட்டி நீக்குதல்

3. பெண் உறுப்பின் உள் முனையை நீக்கிவிட்டு, இதழை அறுத்து புழையின் மேற்பகுதியை நூலால் தைத்துவிடுதல்.

ஆசிய நாடுகளில் இருப்பதானது, மேற்சொல்லப்பட்டிருக்கும் மூன்று முறைகளில் முதலாவதாக இருக்கலாம். குறிப்பாக இலங்கையிலும் இந்தியாவிலும் முதலாவதே நடைமுறையில் இருக்கின்றது எனலாம்.

இந்தியாவில் மும்பை நகரத்தை மையமாகக் கொண்டு எடுக்கப்பட்ட India's Dark Secret: Female Genital Mutilation என்ற ஆவணப்படம் 'போரா' முஸ்லிம்களிடையே பிறப்புறுப்புச் சிதைப்பு புழக்கத்தில் இருந்து வருவதைப் பற்றிப் பேசுகின்றது. இலங்கையைப் போன்று குழந்தை பிறந்த நாற்பதாவது நாளில் இல்லை. வளர்ந்து சிறுமியான பிறகே இச்சடங்கைச் செய்கிறார்கள். இந்த ஆவணப்படத்தில் தம் அனுபவத்தைப் பகிர்கின்ற பெண்கள் 8 - 14 வயதுச் சிறுமிகளாக இருந்தபோதே கத்னா செய்யப்பட்டுள்ளார்கள்.

ஐக்கிய நாடுகள் சபை பெண் உறுப்பு சிதைப்பை 2012, நவம்பர் 27இல் தடை செய்தது. இதனையடுத்து ஆபிரிக்க தேசத்தில் உள்ள நைஜீரியா நாட்டு அதிபர் எடுத்த வரலாற்று முக்கியத்துமிக்க தீர்மானம் அந்நாட்டுப் பெண்கள் சிறுமிகளுக்கு விடுதலையுணர்வைப் பெற்றுத் தந்துள்ளது.

நைஜீரியா நாட்டில் பெண் உறுப்பு சிதைப்புச் சடங்கிற்குத் தடை 2015 மே 5 முதல் சட்டரீதியாக நடைமுறைக்கு வந்தது. நைஜீரியாவின் அதிபர் குட்லக்ஜோனாத்தன், கடந்த வருடம் மார்ச் மாதம் நடைபெற்று முடிந்த அதிபர் தேர்தலில் முஹம்மது புஹாரியினால் தோற்கடிப்புச் செய்யப்பட்டார்.

இந்தியா, இலங்கை போன்ற ஆசிய நாடுகளில் நடப்பதுபோன்று முன்னாள் அதிபர் கொண்டு வந்திருந்த அமலுக்கு வராத சட்ட மசோதாவை புதிய அதிபர் தூக்கிப்போடவில்லை. சட்ட மசோதாவை நிறைவேற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துச் செயற்படுத்தியுமுள்ளார்.

சட்டங்களை இயற்றுவதும் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றுவதும் சிரமமான காரியங்கள் இல்லை. சிரமம், இந்தச் சட்டத்தை மதக் களைவு செய்து மக்கள் மயப்படுத்தி நடைமுறைக்குக் கொண்டுவருவதே. நைஜீரியா அரசாங்கமும் அங்கு செயற்படும் மகளிர் செயற்பாட்டாளர்களும், நாட்டின் முற்போக்கு அமைப்புகள், நிறுவனங்களும் பெண்ணுறுப்புச் சிதைப்பை முற்றிலும் இல்லாது ஒழித்து உலகை ஆச்சரியத்தில் ஆழ்த்தக் கூடிய நடவடிக்கைகளைச் செயற்படுத்திக் கொண்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் மூலம் தெரிந்து கொள்ள முடிகின்றது. மேற்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான காம்பியா நாட்டின் அதிபர் யஹ்யாஜம்மீஹ் பெண் உறுப்புச் சிதைப்பு நடைமுறையை முற்றிலும் தடை செய்வதற்கான சட்டத்தை விரைவில் நிறைவேற்றப் போவதாக அறிவித்துள்ளார்.

இப்படி அறிவிப்புச் செய்வதனால் தேர்தலில்தோற்றுப்போவதற்கான சாத்தியப்பாடுகள் இருப்பது குறித்து எச்சரிக்கப்பட்டும் பொருட்படுத்தாமல் இந்த அறிவிப்பைச் செய்துள்ளார் அதிபர் யஹ்யா.

பெண்களுக்கு எதிரான அனைத்துப் பாரபட்சங்களையும் இல்லாதொழிப்பதற்கான மனித உரிமைச் சாசனங்களில் கைச்சாத்திட்டுள்ள நாடான இலங்கையில் இதுவரையில், பிறப்புறுப்புச் சிதைப்பு தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள், செயற்பாடுகள் எதுவும் இடம் பெற்றிருப்பதாகத் தெரியவில்லை. இரு காரணங்கள்: ஒன்று, ஆபிரிக்கா நாடுகளில்போன்று தீவிர செயற்பாட்டுத் தளத்திற்குள் இச்சடங்கு இலங்கையில் இல்லை. இரண்டு, இது சிறுபான்மைச் சமூகமாகிய அதாவது 7 விழுக்காடுகளுக்கும் குறைவான இஸ்லாமியர்கள் மத்தியிலேயே புழக்கத்தில் இருக்கின்றது. சிங்களப் பேரினவாத அரசுக்கு இஸ்லாமியப் பெண்

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

**பெண்ணுறுப்பின் இறுக்கமான துளையை ஆண்கள் விரும்பும் சந்தர்ப்பங்களில், தையலிட்டு மூடப்பட்ட பகுதியைத் திறக்காமலே வாழ்நாள் நெடுகிலும் வாழும் பெருங் கொடுமையைப் பெண்கள் ஏற்றுக் கொள்கின்றனர்.**

# ஒரு தொன்மையின் குறியீடு - குகன் ஸ்டூடியோ

அருள் நந்தன்

1960-கள் தொடக்கம் 80 களிலான காலப்பகுதி, அதிக விஞ்ஞானம் புகுந்திராத, சுற்றுப் புறம் முழுவதும் சமூக இறுக்கங்களுக்குள் சிக்கி, புதுமைக்கும், நாகரிகத்துக்கும் முகம் கொடுக்காத காலமது.



ஒரு பரம்பரையின் குறியீடு நினைவு களில் என்றும் அழியாத நிழற்படம். அந்த கால கட்டத்தில் நிழல் பட மெடுத்தல் என்பது மிகவும் செல்வந்தருக் கான பழக்கமுறை. இப்போது மாதிரி எந்த தொழில் நுட்ப வசதிகள் அற்ற காலம். பல யுகங்கள் கடந்தும் இன்றும் இன்னும் நினைவுகளில் நிற்கும் உயிர்ப்பு! என் மகளுக் கும் தந்தைக்குமான உறவு கூட வெறும் நிழல்படத் தினூடாகத்தான்.இன்னுமும் எத்தனையோ முகமறியா உறவுகளுக்கு உயிர் கொடுக்கும் உறவுப்பாலம் இந்த நிழற்படம்.

குகன் ஸ்டூடியோ ...எப்போதும் அந்த வரவேற்பறை நிறைந்திருக்கும் பல வர்ண குரோட்டன் செடிகள் சிலிர்க்க வைக்கும்! பல மாதிரிகளில் பின்னணி திரை சீலை, பிறை,முழுநிலவு ,பூக்கள் வைத்த முக்காலிகள்

கருப்பு துணியால் மூடிய பெட்டி... அதன் உள்ளேதான் அத்தனை வரலாறு!

இரண்டு பக்கமும் ஒளி பாய்ச்சும் மின் குமிழ்கள், இரும்பில் ஒட்டப்பட்ட வட்ட முக்கோண சதுர பின்னல் கதிரைகள். குடும்பமாக படம் எடுக்க அவர் படும்பாடு "நிமிர்த்து நில்லுங்கோ, தலையை சரிக்கவும், ஒருவருடன் பட்டும் படாமலும் ஒட்டி நில்லுங்கோ" இப்படி ஏராளமான அனுபவங்களின் பின் 14 நாள் கழித்து அவர்களே சட்டம் போட்டு தரும் நிழல்படத்தை பார்க்க அந்த ஊரே திரண்டிருக்கும்.

எனது உறவுக்கார பெண்ணின் புகைப்படம் 45 வருடங்களுக்கு முன்பாக இருக்கலாம், சிங்கள கலாச்சாரத்தில் சேலை காட்டும் பாணியும் கொய்யகம் முன்னே போட்டு தாவணியை வலது பக்கம் போட்டு இருக்கும் கருப்பு வெள்ளை படம் இன்னமும் மெருகு கலையாமல் காலத்தை உறைய வைத்த படமாக இருக்கிறது. தனிப்பட்ட நிகழ்ச்சிகள் மட்டுமல்லாது அரசியல் பொது நிகழ்வுகள் இவர் இல்லாமல் இல்லை என்ற நிலை இருந்தது.வரலாற்று நிகழ்வுகள் நடக்கும்போது இவர் அங்கு இருப்பார்.

ஒரு பிரதேசத்துக்கான முற்று முழுதான குறியீடாகதிகழ்ந்தநிழல்படகலையகம்.ஒரு வரலாற்றின் நீட்சியாக நினைவுப்பாதை எங்கும் வாழ்ந்திருக்கும் ஒளிப்படங்கள். அன்றெல்லாம் ஆளுயரக்கண்ணாடியின் முன் ரோஸ் பவுடர், இரண்டு சீப்புகள்... இப்போது போல் அப்போது எந்தவித ஒப்பனை கலைஞர்களும் இருக்கவில்லை. உதட்டு சாயம் இல்லை. சாந்துப்பொட்டு மட்டுமே. மேலைத்தேய பாணியில் அமைந்த கோட், டை போன்று அணிந்து படமெடுக்கும் வசதிகளும் உண்டு. வடமராட்சி முழுவதுமே அடையாள அட்டை ஒளிப்படம் அங்கேதான் எடுக்கபட்டிருக்கும்.

குகன் என்று அன்புடன் அழைக்கப்படும் திரு. நாகரத்தினம் அவர்கள் பருத்தித்துறையை சேர்ந்தவர் இல்லைதான். ஆனாலும் (அச்சுவேலியில் வரணன் என்ற இடத்தை சேர்ந்தவர் )பருத்தித்துறை மக்களால் என்றும் நினைவு கொள்ளத்தக்க வகையில் பல சேவையிலும் சமயப்பணிகளையும் செய்தவராவார். தனது 17 வைத்து வயதிலே 1932 ம் ஆண்டு யாழ்ப்பாணம் பரங்கித்தெருவில் உள்ள Night என்பவரிடம் இந்த கலையை பயின்று வடமராட்சியில் பிரதான ஸ்டூடியோ ஆக மகத்தான வளர்ச்சியை கண்டார். இந்த நிறுவனத்தை 60 வருடங்கள் நடத்தி சாதனை செய்துள்ளார். அவரது இளைய மகன் குகன் தொடர்ந்து அதே இடத்தில மீண்டும் இந்த ஸ்டூடியோவை நடாத்தி வருகிறார்.

இன்றைக்கும் பருத்தித்துறையில் இருக்கும் ஒவ்வொருவர் வீட்டிலும் இவர்கையால் எடுக்கப்பட்ட படம் எங்கோ அழியா காவியமாக திரு நாகரத்தினம் அவர்களின் பெயரை நினைவுறுத்திக்கொண்டு இருக்கும் .





# தொழிற்சங்க மற்றும் சமூகப்பணிகளில் 25வருட நிறைவுகாணும் பொது ஊழியர் சங்கம்!

நிந்தவூர் சலீம்

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் மேதின ஊர்வலமும், மேதினப் பொதுக்கூட்டமும் கல்முனை வை.எம்.சீ.ஏ.மண்டபத்தில் கோலாகலமாக நடைபெற்றது. அத்துடன், சங்கத்தின் 25வருட நிறைவு நிகழ்வும் நடைபெற்றது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொழிலாளர் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து வரும் இச் சங்கம் சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்து வருவதுடன், சமூகப்பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வடக்கில் யுத்தம் இடம்பெற்ற காலத்தில் சற்றும் மந்தநிலை ஏற்பட்ட போதிலும், யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் சங்கக்கிளைகளை வடக்கில் புனரமைப்பு செய்து தமது செயற்பாடுகளை சங்கம் இன்று புத்தூக்கத்துடன் முன்னெடுத்து வருகின்றது.

வடக்கில் ஆரம்பகாலத்தில் சங்க தொழிற்சங்கப்பணிகளை முன்னெடுத்த அமரர் வீ.விவேகானந்தன் (முல்லைத்தீவு), த.சிவராஜா (யாழ்ப்பாணம்), சிவலோகநாதன் (கிளிநொச்சி), ஆ.குமாரசிங்கம்(வடமாகாண இணைப்பாளர்)போன்றோரின் சேவைகள் இன்றும் நினைவு கூரப்படுகின்றது.

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் கூடவே வடகிழக்கு மகாண ஜீவோதய நலன்புரி நிறுவனம், அகில இலங்கை மக்கள் ஜனநாயகக் கட்சி என்ற இணை நிறுவனங்களையும் கொண்டு பெரும் பணிகளை ஆற்றி வருகின்றது.

கல்முனையில் தலைமைச் செயலகத்தைக் கொண்டு இயங்கும் அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் தொழிலாளர் நலன்களில் மட்டுமன்றி தொடர்ச்சியாகத் தமிழ்த்தேசியம் உட்பட சிறுபான்மைச் சமூகங்களின் நலன்களிலும் குரல் கொடுத்து காத்திரமான பங்களிப்பை நல்கி வருவது பாராட்டத்தக்கதாகும்.

புரையோடிப்போன இனப்பிரச்சனைக்கு வடகிழக்கு இணைந்த சமஷ்டியே தீர்வாகி வழங்கப்பட வேண்டுமென நீண்டகாலமாக இத்தொழிற்சங்கம் வலியுறுத்தி வருவதையும் இச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

மேலும் வடகிழக்கில் தனித்துவத்துடன் இயங்கும் தொழிற்சங்கமான அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தைக் கட்டி வளர்ப்பதில் பெரும் அர்ப்பணிப்புடனும், தியாகத்துடனும் செயலாற்றி வரும் சங்க ஆயுட்காலத் தலைவர் எஸ்.லோகநாதன், பொதுச்செயலாளர் எம்.எம்.ஏ.வகாப், பொருளாளர் என்.சத்தியமோகன், உபசெயலாளர் கே.கணேசலிங்கம் முக்கிய ஆலோசகர் ஐ.எம்.இப்றா லெவ்வை, ஆலோசகர் ரி.விக்கிரம சிங்கம் உட்பட உயர்பீட உறுப்பினர்கள், மாவட்ட இணைப்பாளர்கள் பெரும் பாராட்டுக்குரியவர்கள்.

---

களின் கிளிட்டோரிஸ் சிதைக்கப்படுவதைக் குறித்து என்ன அக்கறை?

ஏனில், இதைக் குறித்து அக்கறைப் படவேண்டியவர்கள் யார்?

இலங்கை இஸ்லாமியத் தலைவர்கள், மதத் தலைவர்கள், முற்போக்காளர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், படைப்பாளிகள்.

இலங்கையில் சிறுமிகளைத் திருமணம் செய்வதை நியாயப்படுத்திக்கொண்டு, விவாக விவாகரத்துச் சட்டத்தை மாற்றுவதற்கு இடையூறாக இருக்கின்ற ஆண்களின் கைகளிலேயே இன்று இஸ்லாம் இருந்து கொண்டிருக்கின்றது. இவர்களோடு போராடுவது கல்லில் நார் உரிப்பதுபோன்றது என்பதற்காகவே பல முற்போக்கு இஸ்லாமியர்கள் செவிடராயும் ஊமையராயும் காலந்தள்ளும் ஓர் இருண்ட காலமே இன்று இலங்கையில் நிலவுவது.

இஸ்லாம் மதம் என்ற நிலையைக் கடந்து, இஸ்லாம் இயக்கம் என்ற நிலை வந்துவிட்டது. இந்த நிலையில் சமூக நலன், எதிர்காலக் கனவு, விடுதலை உணர்வு, சுதந்திரம், சுயம் ஆகியவற்றுக் காக எதிர்வினையாற்றுவது உயிரையே விலையாகப் பெறக்கூடிய ஆபத்துக்களுக் கான சாத்தியங்கள் இலங்கைக்குள் வந்துவிட்டன. இத்தகைய சூழலில், இலங்கை இஸ்லாமியப் பெண்களின் கிளிட்டோரிஸை யார் காப்பாற்றுவது?

இலங்கை இஸ்லாமியரிடையே இப்படி யான பண்பாட்டுச் சடங்கு புழக்கத்தில் இருப்பதே 21ஆம் நூற்றாண்டில்தான் வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது.

பாலியலில் ஆண்களின் அதிகாரத்தை நிறுவுவதற்காக மாத்திரமே இச்சடங்கு செய்யப்பட்டுக் கொண்டிருந்தாலும்க கூட பெண்கள்தான் இச்சடங்கை முற்றுமுழுதாகக் கையாளுகின்றார்கள். கண்மூடித்தனமாக காலங்காலமாகத் தொடர்கிறார்கள். அவர்களைப் பொறுத்த வரையில் இதுவோர் மதக் கடமை. 'கன்னித்தன்மையைப்'(?) பேணுவதற்காகத் தனக்குச் செய்யப்பட்டது,தனது மகளுக்கும் செய்யப்படவேண்டும் என்றே ஒவ்வொரு தாயும் இந்தச் சடங்கைச் செய்கிறார்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமை ஜும்ஆவுக்குப் பிறகும், பல தொழுகைகளுக்குப் பிறகும் மிம்பரில் முல்லாக்கள் முழங்கும் வார்த்தைகளை மந்திரமாகப் பாவிக்கும் இந்தப் பெண்களிடம் சமூகத்திடம் இதை எடுத்துச் செல்லத் துணிந்த ஒரு மௌலவியைத்தானும் கண்டுகொள்ள முடியுமா?

இங்கு பெண் மௌலவிகளின் சமூகப் பங்குபற்றுகை பற்றிய மிகப்பெரிய கேள்வி துருத்திக் கொண்டு நிற்கின்றது. ஆண்கள் வகுத்திருக்கும் கொள்கைகளின் பிரதி விம்பங்களாக நிற்கும் பெண் மௌலவிகளின் மீது துயரம்படிந்த மௌனம் கவிகின்றது. பிறந்த குழந்தையின் முடியை மழித்துக் கொள்வது போலத்தான் பெண் உறுப்பின் கிளிட்டோரிஸை நீக்குவதும் என்று கூறிவிடாதீர்கள்,

பெண்களே! நீங்கள் உங்களைக் காப்பாற்றிக் கொள்ள முற்படாதவரை, உங்களை வேறெவரும் காப்பாற்ற மாட்டார்கள். நம் பெண்குழந்தைகளின் கிளிட்டோரிஸை இனிச் சிதைக்க மாட்டோம் என்று சபதமெடுங்கள்!

இதை நம்மால் தான் இல்லாதொழிக்க முடியும். **(முற்றும்)**

✎ தனி செல்வம்




தம்பி கடையில நின்று ரீ குடிக்கேக்க கைதட்டுப்பட்டு பக்கத்தில நின்ற ஒருத்தற்றை சேட்டில பட்டிட்டுது. அவர் ஒரு பார்வை பார்க்க, தனக்கு அடி விழப்போகுதாக்கும் என்று ஊத்தினவர் தாமதமின்றி "மன்னிச்சிடுங்கோ அண்ணை" என்றார். மன்னிப்பு கேட்பது ஒரு மனிதருக்கு பெரும்தன்மைதான். ஆனால் அடிக்கடி மன்னிப்பு கேட்டால் அந்த மன்னிப்புக்கே மரியாதையில்லாமல் போய்விடும். ஒருத்தரிடம் 'வாழ்வில் எத்தனை தடவை மன்னிப்பு கேட்டனி' என்று கேட்டால் அவர் யோசிப்பார். ஆனால் கண்டிப்பாக அவர் மன்னிப்பு கேட்டது குறைவு என்பது தெரியவரும். மன்னிப்பு எல்லாவற்றுக்கும் கேட்க முடியாது. மன்னிப்பு கேட்க முடியாதவற்றுக்கு மன்னிப்பு கேட்டால் மன்னிப்பு கேட்பவரையே சமூகம் ஒரு மாதிரியாக பார்க்கும் என்பது உண்மை.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் தொடக்கம் அரச வேலை கேட்டு தொடர் போராட்டம் நடத்தும் பட்டதாரிகள் வரை இவர்களுக்கு மன்னிப்பு என்பது சாதாரணமாகிப் போய்விட்டது. போராட்டம் நடத்தத் தெரியாமல் போராட்டத்தில் குதித்து விட்டு, பின்னர் தமது போராட்டம் பிழை என்று அதற்கு மன்னிப்பு கேட்டு அசிங்கப்பட்டு நிற்கிறார்கள். இவர்களை வழி நடத்துபவர்கள் சரியாக வழி நடத்தியிருந்தால் இந்தப் பிரச்சினைக்கு முகம் கொடுத்திருக்கமாட்டார்கள். போராட்டத்தை தொடங்கும் முதல் அந்தப் போராட்டம் சமூகத்தில் அங்கீகாரம் பெறுமா என்று பார்த்து அதன் பின் தமது போராட்டத்தை சரியான முறையில் மேற்கொண்டிருந்தால் இப்படிப்பட்ட பிரச்சினைகளுக்கு இவர்கள் முகம் கொடுத்திருக்க மாட்டார்கள். இதனை இவர்கள் சரியாகச் செய்யவில்லை.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் சிலரை வகுப்புத் தடை செய்ததால் அவர்களை உள்வாங்குமாறு கோரி அண்மையில் பல்கலைக்கழக மாணவர்கள் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். இந்தப் போராட்டம் நியாயமானதா என்று கூடப் பார்க்காமல் களத்தில் இறங்கியவர்கள் பின்னர் வகுப்புத் தடை செய்த மாணவர்களை உள்வாங்குவதாக உத்தரவாதம் வழங்கப்பட்ட பின்னர் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களும் மன்னிப்பு கோரி போராட்டத்தை கைவிட்டனர். இதேபோல அரச வேலை கோரி இரு மாதங்கள் கடந்து யாழ் கச்சேரிக்கு முன்னால் போராடும் வேலையற்ற பட்டதாரிகள் தமது போராட்டத்தை எப்படி நடத்துவது என்று தெரியாமல் இருக்கின்றனர்.

72 ஆவது நாள் போராட்டத்தில் 92 ஆவது வடமாகாண சபை அமர்வை முடக்கப் போய் அசிங்கப்பட்டும் உள்ளனர். பின்னர் மன்னிப்புக் கோரியும் உள்ளனர்.

கடந்த 9 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் 92 ஆவது வடமாகாண சபைக் கூட்டத்திற்கு வடமாகாண முதலமைச்சர் சி;வி.விக்னேஸ்வரன் சென்ற போது வேலையற்ற பட்டதாரிகள் எனக் கூறப்பட்ட பல இளைஞர் யுவதிகள் வடமாகாண சபை மற்றும் முதலமைச்சரின் அமைச்சுக் காரியாலயங்களின் முன் வாயிற் கதவுகளை. அடைத்து பெருவாரியாக நின்று போராட்டத்தில் ஈடுபட்டனர். வடமாகாண சபையின் பக்கமாக செல்லும் பாதையின் வாயிற் கதவையும் அடைத்தனர். முதலமைச்சர் வாகனத்தில் இருந்து இறங்கிச் சென்று அவர்கள் குறைகளைக் கேட்டறிந்தார். கேட்ட போதிலும் அவர்கள் முதலமைச்சரை உள்ளே போகவிடாது தடுத்தனர். பின்னர் மன்னிப்பு கோருகின்றனர்.

போராட்டம் எப்படி நடத்துவது என்று தெரியாமல் பல்கலைக்கழக மாணவர்கள் தொடக்கம் வேலையற்ற பட்டதாரிகள் வரை போராட்டத்தை நடத்துகின்றனர். வடமாகாண முதலமைச்சரை மறித்து திருப்பி அனுப்பும் போராட்டத்தை நடத்திய வேலையற்ற பட்டதாரிகள் ஜனாதிபதி யாழ் வந்த வேளை ஜனாதிபதியை வழி மறித்து தமது கோரிக்கையை முன்வைத்திருந்தால் இந்தப் போராட்டத்துக்கு எப்பவோ வழி பிறந்திருக்கும்.

# நரைத்த தலையுடன் ஆவேச ஜெ... பரபர அப்பல்லோ வீடியோக்கள் 4!



அப்பல்லோ மருத்துவமனையில் ஜெயலலிதா சிகிச்சை பெறும் 4 வீடியோக்கள் சசிகலா உறவினர் வசம் இருக்கிறதாம்... இதை எந்த நிமிடத்திலும் சசி கோஷ்டி ரிலீஸ் செய்யலாம் என கூறப்படுகிறது.

முதல்வர் ஜெயலலிதா மரணம் தொடர்பான சந்தேகங்கள் இன்னும் தீரவில்லை. அவரது மரணம் தொடர்பாக சி.பி.ஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்ற ஓபிஎஸ் கோரிக்கையை நிராகரித்துவிட்டார் முதல்வர் எடப்பாடி பழனிசாமி.

அதேநேரத்தில் ஜெயலலிதா சிகிச்சை பெற்ற போது வீடியோ எடுக்கப்பட்டதாக சசிகலா தம்பி திவாகரனின் மகன் ஜெயானந்த் பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டிருந்தார். இதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இது தொடர்பாக சசிகலா உறவினர்களின் தகவல்படி, ஜெயலலிதா சிகிச்சை காலத்தில் செல்போனில் 4 வீடியோக்கள் எடுக்கப்பட்டுள்ளன. நர்ஸ் ஒருவர் மூலம் எடுக்கப்பட்ட இந்தக் காட்சிகளை சசிகலா உறவினர் ஒருவர் ரகசியமாக பாதுகாத்து வைத்திருக்கிறார் என்றனர்.

ஜெயலலிதாவின் மரணத்துக்குக் காரணமான இதய முடக்கம் எதனால் ஏற்பட்டது? திட்டமிட்டு உருவாக்கப்பட்டதா? என்பதற்கான விளக்கங்களை லண்டன் மருத்துவர் ரிச்சர்ட் பீலே, எய்ம்ஸ் மருத்துவர்களோ விளக்கவில்லை. இதனால் பொதுமக்கள் மத்தியில் சந்தேகம் நீடிக்கிறது.

இந்த சந்தேகத்தை தீர்த்து வைக்கும் வகையில் வீடியோக்களை வெளியிட வேண்டும் என அரசியல் கட்சித் தலைவர்கள் வலியுறுத்தி வருகின்றனர். கர்நாடக மாநில அ.தி.மு.க செயலாளர் புகழேந்தியும் வீடியோ காட்சிகள் இருப்பதாக உறுதிப்படுத்தியுள்ளார்.

அந்த வீடியோ காட்சிகளில் சசிகலாவுடன் ஜெயலலிதா இயல்பாக பேசிக் கொண்டிருக்கும் காட்சிகள் இடம்பெற்றுள்ளனவாம். அதில் ஒரு இடத்தில், 'நாங்க இங்க எவ்வளவு கஷ்டப்படறேன். உங்களுக்கு ஏதாவது கவலை இருக்கா?' என சசிகலாவிடம் ஜெயலலிதா கடுப்படித்ததும் இடம்பெற்றுள்ளதாம்.

இதையும் தாண்டி ஜெயலலிதாவுக்கும் சசிகலாவுக்கும் இடையே நடந்த விவாதங்கள் வெளியிடவே முடியாத அதிர்ச்சி ரகம் எனவும் கூறப்படுகிறது. தமது பரம எதிரியையும் அவரது குடும்பத்தினரையும் எவ்வளவு கேவலமாக விமர்சிக்க முடியுமோ அப்படி வசைபாடியும் இருக்கிறாராம் ஜெயலலிதா.

அப்போலோவில் இந்தக் காட்சிகளை எடுத்த நர்ஸும் மிகுந்த ரகசியம் காக்கிறார். இருப்பினும் எந்த நேரத்திலும் இந்த வீடியோவை சசிகலா கோஷ்டி ரிலீஸ் செய்ய வாய்ப்பு உள்ளதாகவே கூறப்படுகிறது.

# பெங்களூரு சிறையில் ஜெயலலிதாவின் புடவை... சசி சென்டிமெண்ட்



ஜெயலலிதாவின் போயஸ்கார்டன் வீட்டில் இருந்து அவர் அடிக்கடி ஆசையாக உடுத்தும் பச்சைக்கலர் புடவையை பெங்களூரு சிறைக்கு எடுத்துக்கொண்டு போயிருக்கிறாராம் விவேக். ஜெயலலிதா நினைவாக அந்த புடவை வேண்டும் என்று சசிகலா கேட்டதாலேயே அதை கொண்டு போய் கொடுத்தாராம்.

சொத்துக்குவிப்பு வழக்கில் 4 ஆண்டு கால தண்டனை பெற்று பெங்களூரு சிறையில் இருக்கிறார் சசிகலா. கூடவே அவரது அண்ணன் மனைவி இளவரசியும் பேச்சுத்துணைக்கு இருக்கிறார். ஜெயலலிதா மரணமடைந்து விட்டதால் அவர் தண்டனையில் இருந்து தப்பி விட்டார். அவர் மீதான வழக்கு முடித்து வைக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில்தான் தனது சொத்து குவிப்பு தீர்ப்பை எதிர்த்து சீராய்வு மனு தாக்கல் செய்துள்ளார்.

போயஸ் தோட்டத்தில் ராஜபோக வாழ்க்கை வாழ்ந்த சசிகலா இப்போது சிறை பறவையாகி விட்டார். கொசுக்கடி, சாப்பாடும் சரியில்லை. கட்சியும், ஆட்சியும் தனது கட்டுப்பாட்டில் இல்லை என்பது வேறு நோயை தீவிரப்படுத்தி விட்டதாம்.

இப்போதெல்லாம் சசிகலா, இளவரசியை பார்க்க கட்சி நிர்வாகிகள் யாருமே போவதில்லையாம். அவர் மீது அதீத அனுதாபிகளாக இருக்கும் சில எம்எல்ஏக்கள் மட்டுமே எப்போதாவது சென்று வருகிறார்களாம்.

இளவரசியின் மகன் விவேக்தான் அடிக்கடி தனது அம்மாவை பார்க்க பெங்களூரு சிறைக்கு போகிறார். கூடவே அத்தை சசிகலாவையும் பார்த்து விட்டு வருகிறார். சமீபத்தில் விவேக் போனபோது கட்சி, ஆட்சி நிலவரங்கள் பற்றி சசிகலா விவாதித்தாராம்.

அப்போது விவேக்கிடம் அக்கா நினைவாகவே இருக்கிறது. அவரது புடவையாவது கொண்டு வா, நான் என்னுடன் வைத்துக்கொள்கிறேன் என்று விவேக்கிடம் சொன்னாராம் சசிகலா. இதையடுத்து பச்சைக்கலர் புடவை ஒன்றை எடுத்துக்கொண்டு போனாராம்.

ஜெயலலிதாதான் சிறை தண்டனையில் இருந்து தப்பி விட்டார்; அவரது புடவையாவது இருக்கட்டும் என்று நினைத்தாரோ சசிகலா, அதான் தன்னுடன் சிறையில் புடவையை வைத்துக்கொள்ளலாம் என்று எடுத்து வரச் சொல்லியிருப்பார் என்று மனதுக்குள் நினைக்கின்றனர் ஜெயலலிதாவின் அனுதாபிகள்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
076 825 5567, 077 152 1586

# Anna & Co (Pvt) Ltd.

- Travels & Tours
- International Courier Services
- Educational Consultancy
- Bus & Guest House Booking
- Visa Assistance for all Categories
- Personalized Gift Making
- Real Estate Business
- Marketing

021 221 5656
070 330 5500

No: 976, K.K.S Road, Jaffna.
annaandco.jaffna@gmail.com
akathamarks.com

# KTT travels

கொழும்பு - யாழ்ப்பாணம்




இளவாலை இருந்து பண்டத்தரிப்பு ஊடக மானிப்பாய் வீதி ஊடக யாழ்ப்பாணம் உங்கள் முற்பதிவுக்கு எங்களை அழையுங்கள்

யாழ்ப்பாணம் : 077 44 80 216
கொழும்பு : 077 54 84 963
முறைப்பாடு : 077 40 19 227
65 uduvil Road manipay.

# VELLAN CONSTRUTION

யாழ்ப்பாணத்தில் உயர் தொழிநுட்பத்தினுடன் கூடிய கட்டிடங்களை நிர்மாணிக்கும் ஸ்தாபனம்.




நியாயமான கட்டணத்தில் தரமான சேவை.

- ✓ தகுதி பெற்ற நிபுணர்களின் மேற்பார்வை.
- ✓ தரமான மூலப்பொருட்கள்.
- ✓ வாடிக்கையாளர் திருப்திக்கமைவான சேவை.

- Building constructions
- Building consultancy
- Architectural designs
- Interior design
- Cladding works
- Renovation works
- Molding works
- Landscaping
- Aluminium works

Maththony, karaveddy west karaveddy. Phones no: 0776181414, 0777322720



யாழ். மண்ணில் முதல்தர ஆங்கிலக்கல்லூரியுடன் நீங்களும் இணைந்து கொள்ளலாம்.
சர்வதேச தரத்திலான ஆங்கிலக் கற்கைநெறிகள்

# புதிய பிரிவுகள் ஆரம்பம்

2017/05/02

## IELTS (DURATION 60H WEEK, WEEKEND)

STUDENT VISA, SKILLED MIGRATION, SPOUSE VISA

- தங்களது பெறுமதியான "Band" க்கு நாங்கள் முற்று முழுதாக வழிகாட்டுவோம்
- யாழ்நகரில் IELTS கற்கை நெறி வழிகாட்டலில் முன்னிலையில் திகழும் நிறுவனத்துடன் நீங்களும் இணைந்து கொள்ளலாம்.
- மாணவர்களின் நேர வசதிக்கேற்ப வகுப்புகள் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.
- Lisitening, Reading, Writing, Speaking என்பன ஒவ்வொரு மாணவர்களுக்கும் தனிப்பட்ட ரீரியில் பயிற்றுவிக்கப்படும்.
- ஒவ்வொரு பிரிவிலும் மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்கள் உள்வாங்கப்படுவதால் தங்கள் வருகையை உடனடியாக உறுதிபடுத்திக் கொள்ளுங்கள்.

# ENGLISH MEDIUM CLASS ஆரம்பம்

**GRADE 2-5**

- SPEAKING
- READING
- WRITING
- LISTENING

3 MONTH DURATION

**GRADE 6-11**

ENGLISH MEDIUM
MATHS, SCIENCE AND ENGLISH

- அனுபவம் மிக்க ஆசிரியர்களால் மேற்குறிப்பிட்ட பாடங்கள் கற்பிக்கப்படும்.
- ஒவ்வொரு மாணவர்கள் மீதும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.
- ஆங்கிலப் பாடத்திட்டத்திற்கு அமைவாக கல்வி கற்பிக்கப்படும்.
- குறிப்பிட்டளவு மாணவர்களே உள்வாங்கப்படுவதால் தங்கள் வருகையை உடனடியாக உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- மாணவர்களின் ஆங்கில அறிவுக்கு ஏற்றபடி தனிப்பட்ட வகுப்புக்கள் ஒழுங்குபடுத்தப்படும்.

இதற்கு கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

LMC
LONDON METROPOLITAN COLLEGE

**LONDON METROPOLITAN COLLEGE**

No 136, palali road,
parameswara junction, Jaffna.
தினேஸ் பேக்கரியின் மேல்புறம்

HOTLINE : 0764190327 | 021 753 8395

# HOME DECOR

தற்போது புதிதாக விரிவுபடுத்தப்பட்ட அலுவலகம் ஊடக எமது உயர் தர சேவையினை உங்களுக்கு வழங்குகிறோம்.

எமது அலுவலகத்துக்கு வருகை தந்து எமது டிசைன்களை பார்வை இடலாம்.

வெளிநாடு ஓடர்களும் குறித்த நேரத்தில் அனுப்பி வைக்கப்படும்.

உங்கள் மனதுக்கு பிடித்த டிசைன்களை நியாயமான விலைகளில் குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ள உங்கள் தெரிவு Home Decor

No 18/1B, Jumma Mosque Lane,
Grand Bazzar Jaffna
Phone : 077 944 0000
Email : nasserrajeem@gmail.com

உங்கள் வீடுகள், அலுவலகங்கள் என்பவற்றுக்கான அதி உயர் தர மற்றும் மிகவும் அழகான கேட்டின் வகைகள், சோபா உறைகள் மிக குறுகிய காலத்தில் தைத்து பெற்றுகொள்ள இன்றே நாடுங்கள்.






# PARAMESWARY REST INN

WIFI / TV / AC / Non AC / 5Bed Rooms / 4 bed Rooms / 3 Bed Rooms / Double Bed rooms / Single rooms/ Hall kitchen facility / Parking

என சகல வசதிகளுடனும் யாழ்ப்பாணத்தின் மையத்தில் மருதனார்மடத்தில் அமைந்துள்ளது

வசதிகள் மற்றும் அமைவிடம்

1. சுற்றுலா பயணிகளுக்கான சகல ஒழுங்குகளும் செய்துகொடுக்கப்படும் .
2. யாழ்ப்பாணத்தின் மத்தியில் அமைந்துஉள்ளதால் அனைத்து பகுதிகளுக்கும் இலகுவாக பிரயாணிக முடியும்
3. சமைத்து சாப்பிடுவதற்கன வசதிகள் மற்றும் அமைவிடம்
4. மிகவும் அமைதியான மற்றும் இயற்கையான சூழல்
5. யாழ்ப்பாணத்தில் பிரசித்தமான அனுமார் கோவிலுக்கு மிக அருகாமையிலும் மற்றும் யாழ் நுண்கலை பிடத்துக்கு மிக அருகிலும் அமைந்து உள்ளது.
6. சுற்றுலா பிரயாணிகளுக்கு சைக்கிள் வசதிகள் ஒழுங்கு செய்துகொடுக்கப்படும்
7. ஒடியல் கூழ் சுவைத்து மகிழலாம்







யாழ்ப்பாணத்து சுவையில் தரமான உணவுகளை உங்கள் விருப்பத்துக்கு ஏற்ப சுவைத்து மகிழ இன்றே நாடுங்கள்.

நியாயமான கட்டணத்தில் தரமான சேவை

Parameswary rest inn
Kaithady Road maruthanarmadam jaffna
(opposite to education department )
Phone number : 778919367 , 0767060095

# Green Dream Engineering

உயர் தரம்... குறைந்த செலவு...

- தகுதி பெற்ற நிபுணர்களின் மேற்பார்வை
- பாரம்பரிய தொழிநுட்பத்துடன் கூடிய நவீன கட்டமைப்புகள்.
- வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள்.
- தவணை முறை கொடுப்பனவுகள்
- தரமான மூலப்பொருட்கள்.
- வாடிக்கையாளர் திருப்திக்கமைவான தெரிவுகள்.

We providing

- Dream House
- School building
- Office building
- Hotels & restaurants
- Gardening and landscaping
- Repairing & modifying



உங்கள் கனவுக்கு உயிர் கொடுக்க நாங்கள் உங்கள் உடன் இணைகிறோம்



யாழ்ப்பாணத்தில் உயர் தொழிநுட்பத்தினுடன் கூடிய கட்டிடங்களை நிர்மாணிக்கும் ஸ்தாபனம்.

Phone : 0774166859 ,0775952346 ,0771439777
Email : greendreamengineer@gmail.com
FB: @greendreams.engineers


இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 14.05.2017 அன்று வெளியிடப்பட்டது.